
# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● மார்கழி - 2022



# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

மார்கழி - 2022

படைப்புக்கள் அனுப்ப :

Neythal34@gmail.com

Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

காற்றுவெளி மின்னிதழின் மார்கழி இதழ் உங்களின் பார்வைக்கு...

தொடர்ந்து படைப்பாளர்கள் தருகின்ற ஆதரவே இதழின் தொடர்வருகைக்கு காரணம்.காற்றுவெளியின் எண்ணங்களில் ஒன்றாக விரையில் மாதாந்த மின்னிதழுடன்,காலாண்டுக்கொருமுறையாவது அச்சில் தனித்து கொண்டுவரவேண்டும் என்பதும் திட்டமாயுள்ளது.

ஈழத்து நூல்களின் கண்காட்சியினை மீளவும் தொடர்ந்து நடத்தப்படவேண்டும் என்கிற கோரிக்கையும் காற்றுவெளியின் முனவைக்கப்பட்டுவருகிறதை கவனத்தில் கொள்கிறோம்.

அலைக்கழிகின்ற வாழ்க்கையினூடே சிற்றிதழை வெளியிட்டு வருகிறோம்.அதன் சிரமங்களை யாவரும் அறிவர்.காற்றுவெளி இதர சிற்றிதழ்களிடமும் கரிசனை கொண்டே அவ்வப்போது சிற்றிதழ்களின் சிறப்பிதழ்களையும் வெளியிட்டுவருகிறது.எதிர்வரும் மாதங்களின் சிற்றிதழ் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட(மின்னிதழாக) முனைப்புடன் படைப்பாளர்களிடம் கோரிவருகிறோம்.

இலங்கை, ஈழம், தமிழகம், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் சிற்றிதழ்கள் (கலை இலக்கிய இதழ்கள்) வந்துகொண்டிருக்கின்றன. அவற்றைப் பற்றிய தேடல்கள் இன்றைய தேவையாகவும்,ஆய்விற்குரியதாகவும் இருப்பதால் காற்றுவெளி தன் பங்களிப்பையும் பதிவிடவிரும்புகிறது. கட்டுரைகள் கிடைத்ததும் இதழ் வெளிவரும்.

காற்றுவெளியில் சிற்றிதழ்களை அறிமுகம் செய்யவிரும்புவோர் இதழின் ஒரு பிரதியை அனுப்புதல் வேண்டும்.

கார்த்திகை மாதத்தின் வலிநிறைந்த நாட்களை யாரும் மறந்துவிடவில்லை. அரச கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ஈழத்திலும் மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

களச் சூழல்களை மாற்றுந்திறனை ஒருமித்த கருத்துடன் பணியாற்றாதவரை நமக்கான விடிவு சாத்தியமில்லை.

2023இன் வருகை ஈழத்தமிழர்களுக்காக அக-புறச் சூழலை சாதகமாக்கித்தரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**சோபா**

## படைப்பாளர்கள்

**சிறுகதைகள் :**

1. எஸ். அகஸ்தியர்
2. வாசுகி நடேசன்
3. நௌஷாத் கான் .லி.அபுதாபி.
4. கே.எம்.சண்முகம்(அமெரிக்கா)
5. முபீன் சாதிகா(குறுங்கதைகள்)
6. ந. கிருஷ்ணசிங்கம்.

**கட்டுரைகள் :**

1. பிரேமா இரவிச்சந்திரன் சென்னை.
2. நாகரத்தினம் கிருஷ்ணா
3. செ.புனிதஜோதி
4. நவஜோதி ஜோகரரட்னம்.லண்டன்.
5. பொன். குமார்
6. த. நரேஸ் நியூட்டன்
7. கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ்
8. கோ.லீலா.

**கவிதைகள் :**

1. Dr ஜலீலா முஸம்மில்.ஏறாவூர்
2. சங்கரி சிவகணேசன்
3. பா.சிவகுமார்
4. சாந்தக்கண்ணா
5. நேசன் மகதி
6. ச.ஆனந்த குமார்
7. பெ. விஜயலட்சுமி.காஞ்சிபுரம்
8. கவிஞர், மல்லை.மு.இராமநாதன்
9. ஐ.தர்மசிங் .நாகர்கோவில்.
10. பாவலர் கருமலைத்தமிழாழன்
11. இரா. மதிராஜ்
12. இளையவன் சிவா
13. க. புனிதன்
14. கவிஜி
15. ரகுநாத் வ
16. முத்தையா மோகன்.
17. பாரியன்பன் நாகராஜன்
18. நரேன் கௌரிசங்கர்
19. பாரதி சித்ரா.
20. லலித்தா-இலங்கை.
21. அலெக்ஸ்பரந்தாமன். புதுக்குடியிருப்பு.
22. காரையன் கதன்
23. மாரி மகேந்திரன்.இலங்கை.
24. உடுமலை கி.ராம்கணேஷ்
25. மு.ஆறுமுகவிக்னேஷ்
26. ஸ்ரீவி. முத்துவேல்

**● சங்கரி சிவகணேசன்**

# வாழ்வின் சுவை..



நெருக்கமான நேசமாயினும்
நெடுந்துயர் பிரிவாயினும்
ஒரு புன்னகை
தேவையான அறிதல்
கைகுலுக்கும் புரிதல்
பரஸ்பர விலகல் போதும்
வாழ்வைக் கடந்து செல்ல..
வறட்சியான பாலைவனங்களாயினும்
வழிநெடுகிலும் மலர்தூவும்
சோலைவனங்களாயினும்
பயணங்களை எப்போதும்
ஏகாந்தமாய் கடந்து விடவே
நினைப்பதுண்டு..
சில
அன்பின் பிடிமானங்களின்
பற்றுதல் போதும்
இலட்சியங்களை அடைந்துகொள்ள..
சில
அலட்சியங்களை
கடந்துசெல்ல முடிந்துவிடும்
மனநிலையே போதும்
நம்மை நிலை நிறுத்திக்கொள்ள..
முற்றுப்பெறாத இக்கோப்பையை
அன்போ அலட்சியமோ
நீங்கள்
எதைக்கொண்டு நிரப்பினாலும்
அலட்டிக்கொள்வதேயில்லை..
வடிகட்டி கொள்வதுண்டு..
எனக்கான நாட்களில்
முடிவடைந்த பாதியிலும்
நாளைக்காக தொடரும்
மீதியிலும்
குழப்பங்கள் ஏதுமில்லை..
நகர்தலின் அர்த்தம்
புரிந்து போனதில்..
வாழ்வின் சுவை
இனித்துக்கிடக்கிறது


● Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# காலப்பறவை...



இதழ் திறக்க
மனம் வரவில்லை
மௌனத்தின் வழியே
சில மூச்சுத்திணறல்கள்
கொந்தளித்து வெளிவரத்துடித்து
சொரியும் சொற்களை
வீணடிக்க விரும்பவில்லை
ஒன்றுமே இல்லாத
சின்னக் குறைகளுக்குள்
நீட்டி முழக்கி
வேதாந்தம் உரைத்தல்கள்
ஏன் தானோ?
ஆயினும்
ஏனோதானோவென்று
விடவும் முடியவில்லை
உரையாடலை யார்
முதலில் ஆரம்பிப்பது
நான் விரும்பினாலும்
அது
முடியாத செயலாக...
உன் இறுக்கத்தில்
உருகி உடைந்து
வேரறுந்த மரமாக...
வாழ்தலின் சாகரத்தில்
இதுவும் கடந்து போகும்
வசந்த காலங்கள்
முடிந்து போவதில்லை
பூமியின் சுழற்சியில்
மீண்டும் அது
வரும்...
அது வரைக்கும்
மௌனம் உதிர்க்கும்
ஒரு சொல் போதும்
அந்த ஒற்றைச்சொல்லின் கயிற்றில்
தொங்கும்
காலப்பறவையாவேன்...

## ● பிரேமா இரவிச்சந்திரன், சென்னை




மண்சட்டி எனும் சிறுகதை தொகுப்பு நூலின் ஆசிரியர் அகிலா அவர்கள் மனநல மருத்துவராக பணியாற்றுகிறார். நான்கு சுவர்களுக்குள் இருக்கும் பெண்ணாக இருப்பதிலிருந்து தன்னைத் தானே கட்டுடைப்பு செய்து, தனது வேர்களை வரலாறு, சமூகம், அரசியல், இலக்கியம், பெண் சார்ந்த தரவுகள் என பல கோணங்களில் வளரவிட்டு தன் பயண அனுபவத்தில் நூல்களை படைத்து அளித்து வருகிறார். சமூகத்தில் பெண்களின் நிலை உயர அவர்கள் தன்னை உணர்வதற்கும், பெண்களுக்கே பெண்களின் மீதான பார்வை மாற வேண்டும் என்பதை உணர்த்துவதற்கும் அமைந்த சந்தர்ப்பங்களை கதைகளாகத் தொடுத்துக் கொடுத்திருக்கிறார். முதல் சிறுகதையான, "நாமெல்லாம் வெயிலுக்குப் பொறந்தவங்க" எனும் கதையில், குடியும் சீட்டாட்டமுமாக வாழும் பொறுப்பற்ற தந்தையிடமிருந்து தன் தங்கையைக் காப்பதே பெரிய பொறுப்பாக சுமந்து கொண்டிருக்கும் அன்னையை இழந்த மூத்தப் பெண்ணிற்கு, தந்தை இல்லாமலிருந்தாலே தாங்கள் வாழ்வதற்கு தன் தேடலில் வழி கிடைக்கும் எனும் சிரமத்திலிருப்பவளின் கதை மிக அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. பெண்களின் சமூக நிலையில் மற்றுமொரு கோணம், வெயிலுக்குப் பிறந்த பிள்ளைகள்.

மஞ்சள் பறவை எனும் சிறுகதையில் இமாச்சல பிரதேசத்தில் வசிக்கும் கினார் இனப் பெண்ணை அங்கு அரசு வேலைப் பார்த்த தமிழர், மனதார விரும்பி அவளை மணந்து கொண்டு சொந்த ஊருக்குத் திரும்புகிறார். இத்திருமணத்தை விரும்பாத அவரது அன்னை அப்பெண்ணை வசைபாடும் சொற்களால் பாடாகப்படுத்துகிறார். அதனை பொறுத்துக் கொள்ள முடியாதவளாக மனநலம் பாதித்த அப்பெண், தன் பெண் குழந்தையை அங்கேயே விட்டு விட்டு, தன் இருப்பிடம் வந்து ஒரு இடைவெளியில் மீண்டுமொரு திருமணம் புரிந்து குடும்ப வாழ்க்கையைத் தொடருகிறார். தென்னிந்தியப் பகுதிகளில் பறந்துவரும் காகங்களுக்கு வீடுகளில் சிறிது உணவை அளிப்பதைப் போல இமாச்சல பிரதேசத்தில் ஜன்னலுக்கு அருகில் வரும் சிவப்பு கொண்டையுடனிருக்கும் மஞ்சள் நிறப் பறவைக்கு சிறிது ரொட்டித் துண்டுகளை உணவாகக் கொடுக்கும் உணர்வினை இக்கதையில் ஒப்புமைபடுத்தியிருக்கிறார். வளர்ந்த மகள் மீண்டும் தன் அன்னையைத் தேடி வரும்பொழுது குடும்பமாக வசிப்பவளுடனான மகளின் சந்திப்பு, பறந்து வந்த காகத்துடனான உறவின் அளவே இருக்கிறது. மண்ணின் மணம் சார்ந்த அன்னையின் உணர்வினை நன்றாகவே வேறுபடுத்தி காட்டியிருக்கிறார்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கேத்தி எனும் கிராமத்தில் நடந்த கதையாக "காயம்" எனும் சிறுகதையில், 14 வயது சிறுமியை உடலாகப் பார்த்தவர், வன்முறையில் வன்புணர்வு கொள்ள, அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாதவளை, உடல் குறித்த அறிவு குறைந்த அந்த கிராமத்தில், மானம் பெரிதென நினைத்து, காயம்பட்டவளையே மீண்டும் வசைச் சொற்களைக் கொண்டு மனதில் காயப்படுத்துகிறார்கள். தாங்க முடியாதவளை தற்கொலைக்கு ஆளாக்கி கொலை செய்துவிடுகிறார்கள். மனதைக் கொல்பவர்களையும் கொலைகாரர்கள் என்று தானே சொல்ல வேண்டும்? "மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான்" என வாய் வழியாக, கவரிமா எனும் மாட்டினைக் குறிக்கும் சொல் பிறழ்ந்து வந்து இல்லாதக் கவரிமானைத் தவறாகச்

சொன்ன பழமொழியே தவறு எனும்போது, சிறுமியின் மீது நடந்த வன்புணர்விற்கு அவளே காரணம் என்பதும் அதனால் போன மானமும் மட்டும் எப்படிச் சரியாகும்? நடந்ததைப் புரிந்து கொள்ளாத இயல்பு கொண்ட தகப்பனிடம் கூட சொல்லாமல் மறைத்துவிட்டு, மகளின் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுத்தப்பட்ட காயத்தினை ஆற்றுவதும் தேற்றுவதும் இக்கால அன்னையின் விழிப்புணர்வு கொண்ட கடமையாக இருக்கிறது. தவறு நேராமலிருக்க விழிப்போடிருக்க மகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கும் இக்காலப் பெற்றோர்களின் பொறுப்பாக இருக்கிறது.

வலசை கதையில், யானையின் வலசைப் பாதையில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கும் மக்கள் சந்திக்கும் வழக்கமான பிரச்சினையாக யானைகளின் வருகை தற்போது பழகிப்போன ஒன்றாக மாறிப்போன பிறகு, பயத்தை ஒழித்து, யானைக்கும் மக்களுக்கும் புதிய சிந்தனைப் பிறக்கிறது. யானைகள் தங்கள் வலசைப் பாதைகளை மாற்றிக் கொள்வதும், அவற்றை விரட்டும் பொழுது மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதியாக இல்லாத்திசை நோக்கி விரட்டுவதும் முன்னேற்றமாக இக்கதையில் சொல்லப்பட்டிருக்கிறது.


அவசரம் எனும் கதையில், தாய்க்கும் மனைவிக்கும் இடையே நடக்கும் சண்டையில் சிக்கித் தவிக்கும் கணவனின் பொறுமையும், மாமியாருடனானச் சிக்கலை சமாளிக்க முடியாதவள், தன்னுயிரை மாய்த்துக் கொள்ள அவசரப்பட்டதும், அவளது வாழ்க்கையை முடித்து விடுகிறது. அவ்வாறு உயிரை விட்டவளின் உடலை, தாய் வீட்டிற்கு எடுத்துச் செல்வதா கணவன் வீட்டில் விட்டுச் செல்வதா என்ற சண்டையும், பெற்ற பிள்ளையை இங்கே வளர்ப்பதா? இல்லை அங்கேயா? என்ற போட்டியுமென, மறைந்து போனவளையே மையம் வைத்து மீண்டும் சண்டைத் தொடர, உயிரை விட்டு அவசரப்பட்டு விட்டாளேயெனவும், மனைவியைத் தேற்றுவதற்கு, தான் நீடித்தக் கால அளவில், தன் பொறுமையைக் கொஞ்சம் குறைத்திருக்கலாமெனவும் கணவன் வருத்தப்படுவதாகக் கதை முடிகிறது. குடும்பத்தில் குறைவானப் புரிதலும், பெண்களுக்கு பெண்களே எதிரியாவதும் மாற்றம் கொள்ளவேண்டிய நிலையை இக்கதை மிக அழகாகச் சொல்லிச் செல்கிறது. தற்கொலையை தவிர்த்து வாழ வழியைத் தேட வைக்கிறது.

மண்சட்டி எனும் புத்தகத்தின் தலைப்பை தன் தலைப்பாகக் கொண்ட சிறுகதையில், கணவனை இழந்தப் பெண்ணாக, அதற்குப் பின்னான வாழ்க்கையில் நடக்கும் எந்த ஒரு நிகழ்ச்சியையும் ரசிக்காதவளாக சிரிப்பை மறந்து வாழ்பவள், தன்னைப்போலவே மீண்டும் ஒரு பெண் வாழ்வதை விரும்பாதவளாகிறாள். அதுவரை தன் வாழ்க்கையில் எதற்குமே குரல் கொடுக்காதவள், இன்னொரு பெண்ணிற்கு குரல் கொடுத்து, கணவன் இல்லாதவளின் வாழ்க்கை மண்சட்டி உடைவது போன்ற வாழ்க்கையென்று முத்திரை குத்துபவர்களுக்கு மத்தியில், அவளுக்கென குயவன் ஒருவன் வருவான் எனக்கூறி அம்முத்திரையை அழிக்கிறாள். விதவை மறுமணம் குறித்து சொல்லாமல் சொல்கிறது இக்கதை.

மற்றுமொரு கதையில், கதையின் நாயகி தன் தோட்டத்தில் பூத்த அலமெண்டா பூக்கள் காயத் தொடங்கி, அதன் இதழ்களின் முனை மடங்கி, நிறமிழந்து வெளிறிப் போய் சுருங்கி இருப்பதைப் பார்த்து மனமிறங்குகிறாள். மென்மையான வயதான சருமம் போல இருக்கும் அவ்விதழ்கள், மொத்தமாக வாடி, தன்னையே விடுவித்துக் கொள்கிற பொழுது, “ஒன்றுமில்ல உனக்கு, நீ நல்லா இருக்க” ன்னு சொல்லனும்னு தோன்றும் அவளுக்கு, தன் வீட்டு முதியவரை அப்படிப் பார்க்க மறந்து போகிறாள். தன் சக ஊழியர் மறைந்தபோது அவர் வீட்டுப் பந்தங்களுக்கு அறிவுரைக் கூறும் பொழுதே அதைத் தனக்கானதாகவும் எடுத்துக் கொண்டு, தன்னை மாற்றிக் கொள்கிறாள். இப்படி மாற்றிக் கொள்ளவேண்டிய குடும்பங்கள் நிறைய இருக்கும் பொழுது, அதனைக் குறிப்பிடும்படியாக இக்கதை அமைந்திருக்கிறது.

இப்படி ஒவ்வொரு சிறுகதைகளும் பெண்களுக்கானதாக அமைந்து தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்ள வேண்டிய புதிய சிந்தனைகளையும், பெண்களுக்கு சகப்பெண்கள் மீதான பார்வையை மாற்ற வேண்டிய இடங்களையும் சம்பவங்களைக் கதைகளாக மாற்றி, சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு புதுமை படைத்திருக்கிறார். அறியவேண்டிய கதைகளாக களமிறங்குகிறது இப்புத்தகம்.

● எஸ். அகஸ்தியர்



# 'சிதைவு'

*(பிரபல முற்போக்கு எழுத்தாளர்*
*எஸ் அகஸ்தியரின் நினைவு தினத்தை(29.8.1926 -08.12.1995) முன்னிட்டு)*

நோட்டுப் பிரச்சினையளப்பற்றி வந்த பழைய பேப்பர்ச் செய்தியளிருந்தாத் தட்டிப் பாத்திட்டு எனக்கும் தா. நானும் இப்ப வாற செய்தியளைப் படிச்சுப் போட்டு உனக்குத்தாறன்.

'இந்த நாளையப் பிரச்சனைகளை வச்சு எழுதின கதை'களெண்டு சிலவேளை ரண்டு பேருக்குமே பரிசு கிடைக்கலாம்.....யு

'என்ராப்பா உப்பிடிக் களைச்சு விழுந்து ஓடிவாறாய்?'

'வீடியோக் கடை பூட்டப் போறாங்கள். எடுத்த 'கெசட்'டுகளைக் குடுத்துப்போட்டு, வேற படங்கள் எடுக்கப்போறன்'

'வீடியோ'க் கடைக்கெண்டா, நானும் வாறன்'

'கெதியா வா. எக்கணம் எட்டரைக்குப் பூட்டப்போறான்'

'இலங்கைப் பிரச்சினை எப்பிடி, ஏதும் கேள்விப்பட்டியே?'

'அதைப்பற்றிக் கதைச்சா விசர்வரும். வேற கதை இருந்தாப் பறை'

'எத்தின 'கெசட்' எடுத்தனி?'

'மூண்டு'

‘இண்டைக்குக் குடுக்காட்டி என்ன?’

‘ஏன். நீ பாக்கப்போறியே?’

‘ ‘சும்மா’ ஒருக்காப் பாப்பம்’

‘மூண்டையும் என்னெண்டு ஒரு நாளில பாக்கப்போறாய்?’

‘இது, நான் எடுக்கேல, என்ர பக்கத்து ‘றூம் மேட்’ முந்தநாள் பாத்திட்டு நேத்துத் தந்தது. ராத்திரியே நானும் மனிசியும் பாத்திட்டம். இண்டைக்குக் குடுக்கப்போறன். ஒருநாள் பிந்திக்குடுத்தால் ஒவ்வொண்டுக்கும் அய்வஞ்சு ‘பிறாங்’ கூடக் குடுக்க வேணும். வேணுமெண்டா நீ எடுத்துக்கொண்டு போயிற்று நாளைக்கு அய்வஞ்சு பிறாங் கூடப் போட்டுக் ‘கெசட்’டுகளைத் திருப்பிக் குடு’

‘அப்ப, உதில நில்;;, நான் போய் வேற படக் ‘கெசட்’ ரண்டு எடுத்தாறன்’

‘சிவாஜியோ எம்ஜியாரோ திறம் நடிகன்?’

‘எம்ஜியார்தான்!’

‘எம்ஜியார் சிவாஜியின்ர ஒரு வசனத்துக்குக் காணுமே?

‘உனக்கு விசர். ஏம்ஜியாற்ர ஒரு கம்பு வீச்சுக்குச் சிவாஜி கிட்ட வருவானே?’

‘சிவாஜியின்ர வாள் விச்சுக்கு எம்ஜியார் வகை சொல்வானே?’

‘அப்பிடிப் பாக்கிறெண்டா, சத்தியராஜைப் போல சண்டைக் காட்சியள்ல ‘துவள்’ பறக்க ஆரால முடியும்?’

‘ஏன் கமலகாசன் என்ன குறைஞ்சவனே?’

‘கமலகாசன் காதல் காட்சிகிள்லதான் திறமா நடிப்பான்’

‘அதுக்கும் தோதான சோடி கிடைச்சால்தான் நல்லா நடிப்பான்’

‘ஏன். சிறீதேவியும் கமலகாசனும் சோக்காத்தானே நடிச்சது?’

‘சிறிதேவியின்ர கதைய விடு. அவள் இப்ப ஹிந்திக்காறரோட நடிக்கிறாள்’

‘அப்பிடிப் பாத்தா, ஜெயலலிதா கெட்டிக்காறி’

‘ஜெயலலிதா கெட்டிக்காறியெண்டு எனக்கு அப்பவே தெரியும்’

‘எதைக் கொண்டு சொல்லுறாய்?’

‘எம்ஜியாரோடையும் சிவாஜியோடயும் கோசு போகாமல் நடிச்சது ஜெயலலிதாதான்’

‘சரியடாப்பா, இதைப் பேந்து பறைவம். இப்ப நேரஞ்செண்டுபோச்சு, படக்கடை பூட்டப்போறான்’

❊ ❊ ❊

‘என்ன, போனோடன எடுத்துக் கொண்டு வாறாலீய்?’

‘அக்காவின்ர புருஷன் கடையில அந்தக் ‘கெசட்’டை திருப்பிக் குடுத்துப்போட்டு வேற புதுக் ‘கெசட்’ அஞ்சு ஏடுக்க நிண்டார். காய், குடுக்கப்போன ‘கெசட்’டை நான் அப்பிடியே வேண்டிக் கொண்டந்திட்டன். வேணுமெண்டா நீ இதில ரண்டைக் கொண்டு போ. இப்பிடி ஆளையாள் மாறி எடுத்தமெண்டா, காசு குறையும்;;படமும் பாக்கிறதாப்போம்’

‘கொத்தார் ஒண்டடியா ஏன் அஞ்சு ‘கெசட்’ எடுக்கிறார்?’

‘காய், அவுட்டப்பரிசில இருக்கிறவர். ஆளுக்காள் மாறி ஒரு நாளைக்குள்ள பாத்து முடிச்சிடுவினம்’

‘உண்ணாணயெடாப்பா அநியாயம் சொல்லப் படாது, எங்கட சனங்கள் இலங்கையில இருக்கேக்கயும்

கலை உள்ளங்கொண்டவைதான்;அகதியளா இஞ்ச வந்தும் கலை உள்ளத்தோடதான் இருக்குதுகள்'

'நாவூறு படக்கூடாது. தமிழன் எங்க - எதில கோசு போனவன்'

'பின்ன என்ன, அதை ஒருக்காச் சொல்ல வேணுமே?'

'அது சரி, தாருந்த கலைச்சங்கம் வைச்சு நடத்திறது?'

'எட கோதாரி, உனக்கு இன்னும் தெரியாதே? அவங்கள் கலைச்சேவைக்கெண்டே பிறந்தவங்கள். எங்க போனாலும் அவங்கட கெட்டித்தனத்தைப் பற்றித்தானே சனங்கள் பறையிது. ஐரோப்பாவில் தமிழாக்களின்ர புகழ் கொடி கட்டிப் பறக்கிறதும் அவங்களாலதான்'

'உண்ணாண நீ சொல்றது உண்மைதான். அந்தக்காலத்திலயும் எங்கட ஆக்கள் இந்தியாவிலிருந்து பெரிய மோளம் சின்ன மோளச் 'செற்'றுகளைக் கொண்டு வந்து கோயில்களில 'சதிர்க்கச்சேரி' நடத்தி யாழ்ப்பாணத்தில கலைச்சேவை செய்தவே, வெளிநாடுகள்ல அகதிகளா வந்திருந்தும், அதுபோல இந்தியாவிலிருந்து சினிமா நடிக நடிகையளையும் பாட்டுக்காறரையும் கொண்டு வந்து. சோக்கான 'இன்னிசை இரவும், பாட்டுக்குப் பாட்டுப் போட்டியும் நடத்தி, தங்கப் பதக்கம் பரிசும் குடுக்கினம்'

'உதுக்கெல்லாம் காசெங்கால?'

'என்னெண்டு தெரியேல் ஆனா அவங்களிட்ட காசு தூள் பறக்குது'

'கெட்டிக்காறங்கள். தமிழ்த் தொண்டு, கலைத்தொண்டு. கடவுள்த் தொண்டு, கோயில்த் தொண்டென்டு சேவை செய்யிறவையக் கடவுள் கடைசிவரையிலும் கை விடார்'

'ஐரோப்பாவில் எங்கால தமிழ்க் கடவுள்?'

'இல்லாட்டி, நாங்கள் ஒரு தமிழ்க் கடவுளை உண்டாக்கலாம்தானே? இஸ்ரேல்க்காற வேதக் கடவுள் தமிழ்ப் பகுதியில் வரலாமெண்டா, ஏன் தமிழ்பகுதியில இருக்கிற எங்கட கடவுள் பிரான்சில வரக்கூடாது?'

'இதென்ரா மச்சான் இதுகும் ஒரு பகிடியே?'

'உனக்கு ஒரு இழவும் தெரியாது, இலங்கையிலிருந்து அகதியளா வந்தவேயும், 'இமிக்கிரண்'டாயிருக்கிறவேயும் சேந்து ஒரு தமிழ்க் கடவுள் உண்டாக்கியிருக்கினம். தமிழ்க்கோயில் கட்டி அதுக்கெண்டு ஒரு சங்கம் வைச்சு, காசு சேர்த்து நாள் தவறாமல் பூசை செய்யினம். லண்டன், அமெரிக்காவிலயும் இப்பிடி முந்தியே கட்டி வைச்சிருக்கினம். இதை அறிஞ்ச சிங்களப்பிள்ளையள், தாங்களும் ஆமுத்துருமாரைக் கூப்பிட்டு விகாரையள்கட்டி எழுப்புகினம். இவையள் இஞ்சால பூசை வைச்சுக் கொண்டாட அங்கால அவங்களும் இவேக்குக் கோசு போகாமல், 'புத்தஞ்சரணங்கச்சாமி, சங்கஞ்சரணங்கச்சாமி, தம்மஞ்சரணங்கச்சாமி;' யெண்டு பவித்தாரங்கள் சொல்லிப் பூசை செய்யினம்'

'இந்தத் தொண்டு போதாதெண்டு 'கும்பலுக்க கோவிந்தா'வெண்ட கணக்கா இன்னொரு தொண்டும் நடக்குது'

'அதென்னடாப்பா புதுத் தொண்டு?'

'லண்டன், ஜேர்மனி, கனடா, நோர்வே, சுவிஸ் இப்படியான வெளிநாடுகளிலயும் கலை இலக்கியச் சேவை செய்தவை வீடு வாசல், கார், ரீவி, றேடியோ வேண்டினதோட களைச்சுப் போட்டினமெண்டு அறிஞ்ச இவேயும் அவேக்குக் கோசு போகாமல் இலக்கியச் சங்கம் உண்டாக்கித் தமிழுக்குத் தொண்டு செய்யினம். கருத்தோ கொள்கையோ இல்லாட்டியும் தமிழுக்குத் தொண்டு செய்யிறதோட தவிச்ச முயலுக்குத் தண்ணி வாக்கிற சாடை அகதியளாயிருக்கிறவேயின்ர நலனைப் பாதுகாக்க நல்லாக் கயிட்டப்படுகினம். இப்பிடியெல்லாம் கலைக்கும், தமிழுக்கும், கடவுளுக்கும், கோயிலுக்கும் தொண்டு செய்யிற 'தியாகி'யளின்ர 'கியாதி' உலகமெல்லாம் பரவுறதைப் பாத்து மற்றவே பொறாமையில, 'உதெல்லாம் விசிலடிச்சான் குஞ்சுக'ளெண்டு கேலி பண்ணித் திரியினம்'

‘அதாரது அப்பிடிச் சொல்ற பேயன்கள்?’

‘அவேதான் சமுதாய முன்னேற்றக் கலை இலக்கியக்காறர்’

‘அவேயின்ர முன்னேற்றமும் மண்ணாங்கட்டியும்’

‘ஆனா மச்சான், அவங்கள் சொல்றதிலயும் கன நாயமிருக்கு: நாங்களல்லோ வேணுமெண்டு அவங்கட நாயத்தை மறைக்கிறனாங்கள்’

‘அவங்களில என்ன நாயத்தைக் கண்டு போட்டாய்?’

‘நீ கோவிக்காதை. நான் சும்மா பகிடிக்குச் சொன்னனான்’

‘அதுதான் பாத்தன். எடுத்ததுக்கெல்லாம் மாக்ஸியம், லெனிசியம், கம்மூனிசம், அந்த இஸம் இந்த இஸமெண்டு கத்துறதுதான் அவேக்கு முழு நேர வேலை. சவுந்தரராஜன், யேசுதாசன், அல்லது பாட்டுக்குப் பாட்டுப் படிக்கிற சினிமாப் பாட்டுக் காறரைப் போல சனங்கள் மத்தியில உவையால புகழ் பெற ஏலுமே? இஞ்ச பார், இண்டைக்கும் ‘பொம்மை’யில்கலைத்தொண்டு செய்யிறவேயப்பற்றித் தான் விளம்பரம் போட்டிருக்கு. இப்பிடியெல்லாம் வெளிநாடுகளிலயும் தமிழ்க்கலை வளர்க்கிறது தமிழருக்குப் பெருமைதானே? இது இந்த மொக்குக்கழுதையளுக்கு விளங்காது. இந்தமாதிரிக் கலை, கடவுள், கோயிலெண்டு தொண்டு செய்;ய இவையெல்லாம் குடுத்துவைக்கவேணும்’

‘எனக்கொரு சந்தேகம் மச்சான்’

‘என்ராப்பா அது. இருந்தாப்போல.......?’

‘அப்புடியில்ல, கொஞ்ச நாளா மனதுக்க குடையிது’

‘சரி, விளப்பமாச் சொல்லன்?;’

‘இலங்கையில் உப்பிடியான தொண்டு செய்த சனங்கள்தானே பெருவாரியாக அழிஞ்சது. அப்ப இந்தக்கடவுளும் கோயிலும் எங்கே போனது?’

‘ம்..............?’

‘என்ன மச்சான் முழுசிறாய்?’

‘நான் நினைக்கிறன். அப்பிடியெல்லாம் தொண்டு செய்தவேயில கடவுள் ஆக நேசம் வச்சபடியால் சரியான கஷ்டத்தைக் குடுத்து அவையப் பரலோகத்துக்குக் கூப்பிட்டுத் தன்னோட வைச்சிருக்கிறார்....’

‘எட அப்பிடியே.....? நீ சரியான விண்ணன் தான்ராப்பா. இந்தப் பெரிய சங்கதியளக் கூட வலு சுளுவாகக் கண்டுபிடிச்சிருக்கிறாய். டார்வின் உன்னட்ட பிச்சை எடுக்கவேணும்’

‘பின்ன, நான் என்ன சும்மா லேசுப்பட்ட ஆளெண்டே நினைச்சனி?’

‘அப்ப, நான் கடன் பட்டெண்டாலும் கலைச்சங்கம் நாளைக்கு நடத்திற இன்னிசையிரவுக்கும், வாற ஞாயிற்றுக்கிழமை கோமாளியளின்ர கலை விழாவுக்கும் கட்டாயம் போறதுதான்’

‘அப்பிடியெண்டா, எனக்கும் சேத்து ‘வீடியோ’க் கடையில பத்து ‘டிக்கேற்’ எடு அப்பிடி எடுத்தா ஒரு ‘டிக்கேற்’ காசு கழிவு’

❊ ❊ ❊

‘எட மச்சான், பாட்டுக்குப் பாட்டுப் போட்டியில் நாங்களும் கலப்பமோ?’

‘இதுவும் ஒரு பகிடியே? கட்டாயம் கலக்கிறதுதூன். வாற படங்கள் ஒண்டும் விடாமல் ஒழுங்காப் பாத்துப் பழகின எங்களுக்கு உதென்ன பெரிய காரியமே?’

‘ஒரு ‘றிகேஷல்’ பாப்பம் நான் முதல் எழுத்துச் சொல்றன். நீ ‘டக்’கெண்டு பாட்டைத் துவக்கு’

‘சரி, கேள்?’

‘ஆ.....‘

‘ஆகா மெல்ல நட மெல்ல நட மேனி என்னாகும்?’

‘சரி, நி.....’

‘நினைத்தேன் வந்தாய் நூறு வயசு’

‘கா............’

‘கால்கள் ஏறுது மேலே’

‘நீ....’

‘நீ ஒரு காதல் சங்கீதம்’

‘ ‘வெறிகுட்’ உண்ணாணை மச்சான் நீ கட்டாயம் தங்கப்பரிசு தட்டத்தான் போறாய். ‘கலைஞ’னெண்ட பேரும் புகழும் எடுக்கப் போறாய்’

‘அப்பிடியெண்டா, நாங்களும் ஒரு கலைச்சங்கம் துவங்குவமோ?’

‘ஓம் மச்சான். அச்சா ஐடியா’

‘அப்ப, தமிழ்ச் சினிமாப் படங்கள்ல வாற முழுப்பாட்டையும் ஒங்கா மனப்பாடம் பண்ணுவம். அப்பதான் சங்கீத ஞானம் வரும்;;;;மூளையும் விருத்தியடையும். பிறகு பாட்டும் எழுதலாம், நாடகமும் போடலாம்’

‘நாடகமோ?’

‘ஏன், போட ஏலாதோ?’

‘நீ யோசிக்கிறது எனக்குத் தெரியும். ஆயிரக்கணக்கான படங்கள் பாத்துத் தள்ளுறம். அதில ஒரு கதைய அப்பிடியே எடுத்து நாடகமாகப் போடுவம்...’

‘ஏன், இப்பிடிச் செய்தால் என்ன?’

‘என்ராப்பா அது?’

‘எழுத்தாளிரிட்ட நல்ல ஒரு கதை எடுத்து நாடகமாக்கினால் நல்லதுதானே?’

‘உண்ணாணை உனக்கு விசர்’

‘ஏன், ‘அது சரியில்ல’யெண்டுறியோ?’

‘பின்ன என்ன, நாங்கள் மாயிறது. அவங்கள் பேரெடுக்கிறதே?’

‘அவங்களும் மாய்ச்சல்பட்டுத்தானே எழுதிறவங்கள்?’

‘அவங்களத் தொடுத்தா எங்கட எண்ணம் ‘பிளாங்’காய்ப் போயிடும்’

‘அதுவும் சரிதான்....’

‘நாங்கள் செய்யிறதும் கலைத் தொண்டுதானே.’

‘அது சரி’

‘அப்ப, நான் போட்டு வாறன். பிறகு றூமில சந்திப்பம்’

‘ஓமோம் படக் ‘கெசட்’டுகள் கவனம். பத்திரமாக் கொண்டு வந்து குடுத்துப்போடு’

‘ ‘ஒகே’.... இனி இதுகள்தானே எங்கட சீவியம்’

‘உதென்ன, கையில சுறுட்டி வைச்சிருக்கிறாய்?’

‘பேசும் படம், பொம்மை, தமிழ்ச் சினிமா’

‘நீ சரியானஆள்தான்ராப்பா.... படிச்சுப்போட்டுத் தா, ஒருக்காப் பாப்பம்’

‘இதுகள்ல நான் அவ்வளவு ‘இன்ரஸ்ற்’ இல்ல. என்ர மனிசிக்காறி படிக்கிறதுக்காக எடுக்குறனான்’

‘பறவாயில்ல. அவ படிச்ச பிறகு தாவன். ஏன்ர மனிசிக்காறியும் பாக்கட்டன்’

‘அதுக்கென்ன பொம்புளயளும் இதுகளைப் படிச்சாத்தானே ‘பொச்சம்’ தீரும். அப்ப நான் பேந்து சந்திக்கிறன்’

‘மச்சான், கதையோட கதையா ஒரு முக்கிய விஷயம்’

‘என்ராப்பா, போகவிட்டுப் புறத்தால கூப்பிடுறாய் என்னெண்டு சொல்லு?’

‘நாங்கள் துவக்கப்போற கலைச்சங்கத்தைப் பற்றி ‘நோட்டீஸ்’ அடிக்கிறதோட, விளக்கமா இலங்கைப் பத்திரிகைகளுக்கும் ‘விளம்பரம்’ குடு’

‘இப்பஎன்ன அவசரம்? சங்கத்தைத் துவக்கிப்போட்டு விளம்பரத்தை விளப்பமாகக் குடுப்பம்’

‘இதின்ர ‘உள்சங்கதி’ உனக்கு விளங்கேல’

‘அதென்ன உள்ச் சங்கதி?’

‘முதல்ல எங்கட குடும்ப ஆக்களை அங்கத்துவமாகச் சேத்துப்போட்டு, பிறகு எங்கட சொல்லைக் கேட்டு நடக்கிறவையப் பாத்துச் சேர்ப்பம். மிச்சத்தைப் பேந்து ஆறுதலாச் சொல்றன். இப்ப நீ விளம்பரத்தைக்குடு’

‘சும்மா சொல்லக்கூடாது உண்ணாணை மச்சான் நீ வலு கெட்டிக்காறன்தான்’

‘எனக்குந்த ‘முகஸ்துதி’யொண்டும் பிடிக்காது. சரி மறந்து போகாதை இண்டைக்கே விளம்பரத்தைக் குடுத்துப்போடு’

‘ஓக் கே’

❊ ❊ ❊

‘மச்சான், ஒரு வில்லங்கம், நேத்துக்குடுத்தித் தலை சுத்துது’

‘ஏன், ஏதும் வித்தியாசமாய்ப் பாவிச்சனியே?’

‘அதொண்டுமில்ல, நேத்து ஒரு எழுத்தாளர் சங்கத்தால கடிதமொண்டு வந்திருக்கு’

‘ஏன்ராப்பா, ஏதும் கொழுவல் கிழுவல் - குடுக்கல் வாங்கலே?’

‘அப்பிடியொண்டுமில்ல, ‘சிறுகதைப் போட்டி’ யொண்டு நடத்துகினமாம். எப்பிடியெண்டாலும் ‘தெண்டிச்சு’ ஒரு கதை எழுதிக் கூடிய கெதியில அனுப்பட்டாம்’

‘அதுக்கேன் தலை சுத்துவான்?’

‘உதுவும் ஒரு கேள்வியே? ஒரு கலை நிகழ்ச்சி நடத்தினோவுடன் என்னையும் எழுத்தாளனெண்டு மதிச்சுக் கடிதம் அனுப்பியிருக்கினம். எனக்கோ ஒரு இழவும் தெரியாது. அதுதான் விஷயம்’

‘எனக்குக் கதைகிதை எழுதத் தெரியாதெண்டு உடன பதில் எழுதிப் போடன். பேந்தேன் கிடந்து முழுசிறாய்?’

‘சிறுகதைப் போட்டியெண்டா, பொதுவாக அறிவித்தலல்லோ போடுறது, தனிப்பட்டவேக்கு கடிதம் எழுதிறேல்லயே?’

‘அதுதானே? ஆனா, பத்திரிகையில் விளம்பரமும் போட்டிருக்கினம்’

‘பேந்தேன் தனிப்பட்ட முறையில கடிதம் போடுவான்?’

‘அந்தச் சங்கத்தில இருக்கிற ஆளொருத்தர் எனக்கு வேண்டியவர். ஏன், அவேயின்ர கூட்டத்துலயும் ‘தனிப்பட்டவேக்கும் கடிதம் அனுப்புற’மெண்டு வாய் தடுமாறிச் சொன்னதை நீ கவனிக்கேலயாக்கும்?’

‘நான் வடிவாக் கவனிச்சனான்’

‘அது கிடக்க பரிசுத் தொகை எவ்வளவு?’

‘மூவாயிரம் பிராங்’

‘எட, ‘பேய்க்’ காசு என்ன? அப்பிடியெண்டா நானும் கதை எழுதப் போறன்’

‘அது கெட்டுது போ. என்ர தலைச் சுத்து ஆறேல்ல. அதுக்கிடையில நீ ஒரு பக்கத்தால..’

‘ஏன். கதை எழுதுறது என்ன பெரிய வேலையே?’ இதுவரையில ஒரு தொகைப் படக் கெசட்டுகள் பாத்திட்டம். பிறகு கதைக்கென்ன பஞ்சம், எழுதித் தள்ளுறதுதானே? பேந்தேன் மண்டையைப் போட்டு உடைப்பான்?’

‘எட அறுப்பே, நான் இதுகளை இம்மட்டு நேரமா யோசிக்கேல மச்சான்’

‘அவே, எழுதிறவேய முன்னுக்குக் கொண்டுவர யோசிக்கினம். எழுத்தாளரைப்பற்றி யோசித்திருந்தா, ஏன் உனக்குக் கடிதம் எழுதப்போகினம்? இந்தச் சின்ன விஷயம்கூட உனக்கு விளங்கேல’

‘பரிசு கிடைக்காட்டிலும் காரியமில்லை. ‘கலைச்சங்கம் நடத்திறவே சரக்குள்ளவங்க’ளெண்டு; மதிச்சிட்டாங்களே, அது பெரிய வெற்றிதானே?’

‘அப்ப. இனி நாங்கள் ராப்பகலாகவும் இன்னிசை நிகழ்ச்சிகளை நம்பி நடத்தலாம்...’

‘நாங்கள் கலைச்சங்கம், நடத்திய பாட்டுக்குப் பாட்டுப் போட்டி வச்சுப் பரிசு குடுக்கேக்க, ‘எட, நெடுகலும்; கேட்டுச் சவுத்துப்போன பிற்போக்குச சினிமாப்பாட்டுக்குத் தங்கச்சங்கிலி மோதிரம் குடுக்கிறாங்க’ளெண்டு எங்களைக் கிண்டல் பண்ணினவேயின்ர வாயளை மூட இதுதான் நல்ல சந்தர்ப்பம். ஆனபடியா, நீயும் கதை எழுதி அனுப்பு, நாம் எழுதி அனுப்புறன். ஆருக்குப் பரிசு கிடைக்குதோ அதை ரண்டாப் புறிச்சு எடுப்பம்’

‘நாட்டுப் பிரச்சனையளப்பற்றி வந்த பழைய பேப்பர்ச் செய்திகளிலிருந்தாத் தட்டிப் பாத்திட்டு எனக்கும் தா. நானும் இப்ப வாற செய்தியளைப் படிச்சுப் பாத்திட்டு உனக்குத் தாறன். ‘இந்த நாளயப் பிரச்சினைகளை வச்சு எழுதின கதை’களெண்டு சிலவேளை ரண்டு பேருக்குமே பரிசு கிடைக்கலாம்...’

‘எனக்குத் தனிப்பட்ட முறையில கடிதம் எழுதினபடியால், நான் நினைக்கிறன், எனக்கு எப்பிடியும் முதல் பரிசு கிடைக்கும். உனக்கு ரண்டாம் மூண்டாம் பரிசு கிடைச்சாலும் பரவாயில்லை. ‘பேய்க்’காசு. பிறகு, புறிச்சு எடுப்பம்’


‘அப்ப, ‘பேப்பர் நியூஸ்க் கட்டிங்’குகளை மறக்காமல் தேடி எடுத்துப் படிச்சுப்போட்டு எனக்குத் திருப்பித்தா, என்ன?’

‘நாங்கள் ஒரு மோட்டுவேலை செய்துபோட்டம். சினிமாச் செய்தி விளம்பரப் பேப்பர்களைச் சேத்து வச்ச மாதிரி நாட்டுப் பிரச்சனையள் வந்த ‘பேப்பர்க் கட்டிங்’குகளையும் சேத்து வைச்சிருக்கலாம்.அதுகள்ல எங்களுக்கு ‘இன்ரெஸ்ற்’ இல்லாமல் போட்டுது....’

‘போன சவத்தை விட்டிட்டு, இனி வாறதைக் கவனிப்பம். தேடி எடுத்துப் படிச்சாப் போச்சு....’

‘ஓக்கே......ஓக்கே....’

*(பாரீஸ் ‘ஓசை’ சஞ்சிகையில் 1990 வெளிவந்தது)*



● பா.சிவகுமார்


# சிலுவையின் ஆணிகளிலிருந்து புறப்படும் கருணை!

*காடோடி நாடோடி*
*பரிணாம வளர்ச்சியில்*
*வீடுகட்டி ஓரிடத்திலுறைந்து*
*திண்ணையைத் தனக்கொதுக்கி*
*வெற்றிலையை வாயிலதக்கி*
*ஊர்கதையைத் மென்றுத்தின்று*
*அடுக்களையைப் பெண்களுக்கு*
*தள்ளிவிட்டதில் இன்னமும்*
*இறக்கப்படாமலேயே இருக்கிறது*
*ஏற்றப்பட்ட சிலுவை*

*புதியதாக வாங்கப்பட்ட*
*வில்லாவில் உனக்கான*
*மாடுலார் கிச்சனைப் பார்*
*என்றவாறு சிலுவையில்*
*ஏற்றப்படுகின்றன*
*மென்ணாணிகள்*
*ஞாயிறந்தி*
*ஈருருளியில் சுற்றி*
*இரவுணவை உணவகத்தில்*
*கழிக்கலாமென்பதில்*
*சிலுவையின் ஆணிகளிலிருந்து*
*புறப்படுப்படுகிறது*
*அருட்பெருங்கருணை!*

● நாகரத்தினம் கிருஷ்ணா





# தன் வலியும் மாற்றான் வலியும்

உலகமக்களில் குறிப்பாக இந்தியர்களை அண்மைக் காலத்தில் வியப்பில் ஆழ்த்திய செய்திகள் இரண்டு: முதலாவது கமலா ஹாரீஸ் என்ற பெண்மணி ஐக்கிய அமெரிக்க நாட்டின் துணை அதிபராக இரண்டாண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்ற வரலாற்று நிகழ்வு, அடுத்தது, அண்மையில் ரிஷி சுணக் என்பவர் இங்கிலாந்து பிரதமராக பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட சம்பவம். இருவரும் இந்தியர்கள் என்கிற அடையாளத்தைக்காட்டிலும் இந்நிகழ்வின் பின்புலத்தில் ஒளிந்துள்ள பொதுவான ஒற்றுமைகள் கூடுதல் கவனத்தைப் பெற்று அரசியல் விற்பன்னர்களின் புருவத்தை உயர்த்தியிருக்கின்றன. காரணம் இருவருடைய மூதாதையர்களுமே இந்தியர்கள், தங்கள் சந்ததிகளுக்கு மகுடம் சூட்டிய மண்ணுக்கு, தேசியம் பேசுகிறவர்களின் மொழியில் சொல்வதெனில் அந்நியர்கள்; இனத்தால், நிறத்தால் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இருந்தபோதிலும் இவ்விருவரும் இப்படியொரு உயரத்தை எட்டமுடிந்தது எப்படி? ஐக்கிய அமெரிக்காவிலாவது அதிபராக ஓர் ஒபாமாவை காணமுடிந்தது, ஆனால் ஐரோப்பா என்றதும், வரலாற்றாசிரியர்கள் முதன்மைபடுத்துகிற, காலனி ஆதிக்கவரிசையில் முன் நிறுத்தப்படுகிற பிரிட்டிஷ் ராச்சியத்தின் பிரதமராக சர்ச்சில், கல்லகன், தாட்சர், அமர்ந்த அரியாசனத்தில் இன்று அக்காலனிநாட்டிலிருந்து பிழைக்கவந்த குடிமகனின் வாரிசு பிரதமரானது எப்படி ?

**கமலாஹாரீஸ்** : தந்தை ஜெமைக்கா நாட்டவர், தாய் இந்தியர். இருவருமே மேற்கல்விக்காக அறுபதுகளில் அமெரிக்காவில் குடியேறியவர்கள். பெற்றோர் இருவரும் பிரிந்துவாழத் தொடங்கியதும் இளமைக்காலத்தைக் கனடாவில் கழித்தபின்னர் உயர்கல்விக்கு மீண்டு ஐக்கிய அமெரிக்காவுக்குத் திரும்பினார். சட்டம் பயின்று வழக்கறிஞர் தொழில் செய்தார். பின்னர் மாவட்ட அரசு வழக்கறிஞர், மாநில அரசு வழக்கறிஞர் எனப் படிப்படியாக உயர்ந்தார். பின்னர் அரசியலுக்குள் நுழைந்து, அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஆனார், அமெரிக்க மக்கள் மன்றத்தின் மேலவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 2021 ஜனவரி மாதத்திலிருந்து ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் முதல் பெண் துணை அதிபர், மற்றும் மேலவைத் தலைவர்.

**ரிஷி சுணக்** : இவருடைய பெற்றோர்களும் கமலா ஹாரீஸ் பெற்றோர்களைப்போலவே அறுபதுகளில் இங்கிலாந்தில் குடியேறியவர்கள். தத்துவம், அரசியலில் பட்டம்பெற்றவர். பின்னர் வணிக மேலாண்மையில் முதுகலை பட்டம், அப்போது தமது வருங்கால மனைவியைச் சந்திக்கும் வாய்ப்பு அமைகிறது. மனைவி கணிணித் துறையில் நன்கறியபட்ட இன்போசிஸ் நிறுவனரின் வாரிசு. அரசியல் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர், மக்களவை உறுப்பினர், உள்துறை அமைச்சர், நிதித்துறை செயலர், நிதித்துறை அமைச்சர் எனப் படிப்படியாக உயர்ந்து இன்று இங்கிலாந்தின் பிரதம அமைச்சர்.

இவர்கள் என்றில்லை, மனிதர்களில் ஒருசிலர் மட்டும் அரசியல் அல்லாத பிறதுறைளிலுங்கூட ஆயிரமாயிரம் நட்சத்திர கூட்டத்திடையில் நிலவாக ஒளிர்வதற்குக் காரணங்களென்ன ?

முயலோ, மானோ அதனதன் இனத்திடையே தனது பலத்தை நிரூபிப்பது, திறனை முன்நிறுத்துவது அதிசயமோ, அபூர்வமோ அல்ல மாறாக ஓர் ஆமை முயலை வெல்வதும், முயல் சிங்கத்தைக் கிணற்றில் குதிக்கச்செய்து வீழ்ழ்த்துவதும் அதிசயமாகிறது, காலங்காலமாக நினைவுகூரப்படும் கதையாகிறது. வரலாறு என்பது சராசரி நிகழ்வல்ல, அரிய செயல். "செயற்கரிய செய்வார் பெரியர்" . கமலா ஹாரீஸும், ரிஷி சுணக்கும் அதைத்தான் செய்திருக்கிறார்கள் தன் வலியையும் மாற்றான் வலியையும் புரிந்து செயற்கரிய செயலைச் செய்து அரியாசனத்தில் அமர்ந்தவர்கள். இவர்களுடையது ஊமையாக எதிர் தரப்பில் அமர்ந்திருக்கும் பாமர பார்வையாளர்களுடன், தனிமனிதனாக உரையாடலை நடத்த உபயோகிக்கும் அலங்கார அரியாசனமல்ல, பெரும் எண்ணிக்கையிலான மக்களின் பிரதிநிதிகளாக தங்களை முன்னிலைப்படுத்தி, காணவரும் உலகத் தலைவர்களுடன் சரிசமமாக அமர்ந்து உரையாடக் கிடைத்த அரியாசனம்.

இதுபோன்ற வெற்றிக்கு இருபடிநிலைகள் தேவைப்படுகின்றன. முதலாவது தன்பலத்தை உணருதல், அடுத்தது தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களின் பலத்தை அறிதல்.

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும், துணைவலியும் தூக்கிச் செயல்" என்கிறது குறள். இதனைத்தான் சுருக்கமாக 'தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை' என்கிறது தமிழின் திருமந்திரம். இதனையே சாக்ரடீஸ் " உன்னையே நீ அறிவாய்" என்கிறார்.

தன்வலியை உணருதலோ, தன்னை அறிதலோ, உன்னையே நீ அறிவாய் என சாக்ரடீஸ் போதிப்பதோ அனைத்துமே தனிமனிதனின் சுயமுன்னேற்றத்திற்குச் சொல்லப்பட்டவை, பொருள் அளவில் வேறுபாடுகளற்றவை.

சாக்ரடீஸ் மேற்குலகின் முதமைத் தத்துவவாதி, ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவருக்கு முன்னும் பின்னும் மேற்குலகு பல தத்துவவாதிகளைக் கண்டிருக்கிறது என்கிறபோதும் சாக்ரடீஸ் முக்கியமானவர். " பல கடவுள்கொள்கைக்கு(Polytheism) மாறாக ஒரு கடவுள்(Monotheism) கொள்கையை முன் வைக்கிறார், இளைஞர்களைத் தவறாக வழிநடத்துகிறார்" என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி மரண தண்டனை பெற்றவர். தமது சிந்தனைக்காக அதிகாரத்தைப் பகைத்துக்கொண்டு பலியான மனிதர், சொந்த உயிர்வாழ்க்கையின் முடிவைக்கூட தமது மெய்ஞானத்தின் வழிமுறையில்

தேடிக்கொண்டவர். சாக்ரடீஸ் தமது கருத்துக்களை, எண்ணங்களை எழுதிவைத்தவர் அல்லர். வாய் வார்த்தைகளில் பகிர்ந்துகொண்டவர், தானறிந்த உண்மைகளை பிறர் கருத்துக்கு உட்படுத்தி தமது சிந்தனையை தெளிவுப் படுத்திக்கொண்ட சிந்தனாவாதி. வள்ளுவன் கூறுகிற "தன்வலியும் மாற்றான்வலியும்" அறிந்து தெளிதலை சாக்ரடீஸ் மெய்ப்பொருள் கூடுதலாக நமக்கு விளக்குகிறது. சாக்ரடீஸ் கண்ட தத்துவம் அல்லது மெய்ப் பொருளுக்கு கிரேக்க மொழியில் மையேத்திக் *(Maieutic)* என்று பெயர். கிரேக்க தொன்மவியலின்படி மாய்ய*(Maïa)* என்ற சொல்லுக்கு மருத்துவ தாதியர் என்று பொருள். மகப்பேறின்போது உடனிருந்து உதவிசெய்பவர்கள். சாக்ரடீஸ் தத்துவத்தின்படி கேள்விகள் என்ற மருத்துவச்சி ஞானமென்ற குழந்தையைச் சுகமாகப் பிரசவிக்க-வெளிக் கொணர மனிதனுக்கு உதவுகிறாள். *Maieutics* என்பது உள்ளத்திலிருந்து ஞானத்தை பிரசவிக்க உதவும் முயற்சி. ஒருவன் அல்லது ஒருத்தி தனக்குள் ஒளிந்துள்ள அறிவை அல்லது ஞானத்தைக் கண்டெடுக்கும் நோக்கத்தை அடிடிப்படையாகக் கொண்டது. மனிதன் தனக்குள் கேள்விகளை எழுப்பி அவற்றுக்கு உரியபதிலைத் தேடுதல். தன்னை அறியாமையிலிருந்து விடுவிக்கிற ஒரு படி நிலை. "தன்னை அறிந்தால் தனக்கொரு கேடில்லை" என்கிற திருமூலர் வாக்கு அது: தன் பலத்தை, தனக்குள் புதைந்துள்ள அறிவைத் தோண்டி எடுத்தல்.

## சிந்தனையும் உண்மையும்

சாக்ரடீஸை பொறுத்தவரை சிந்தனையின் *(Thought)* நோக்கு, உண்மையை அடைதல். சிந்தித்தல், அவருக்கு ஓய்ந்திருப்பதல்ல,தொழிற்படுதல்; எண்ணத்தை வினையாக்கும் வழிமுறை. அவர் கருத்தின்படி அஞ்ஞானத்திலிருந்து மெய்ஞானத்திற்கு நேரடிப் பேருந்து இல்லை, பல நிறுத்தங்களில் இறங்கி ஏறவேண்டும், அதற்கு நேரமும் காலமும் பிடிக்கும். சிந்தனையென்பது சரியான விடையைத் தேடிப் போடும் கணக்கு ; படிப்படியாக ஏறி மேற் தளத்தை அடையும் செயல். சிந்தனைக்கு உரையாடலைச் சிபாரிசு செய்கிறார் சாக்ரடீஸ். அதாவது சிந்தனையின் ஆரோக்கியம் உரையாடலைச் சார்ந்தது. சாகரடீஸுக்கு உரையாடல் முதன்மையானது, உரையாடலே உண்மைக்கு வித்திடுகிறது. அவ்வுண்மை கண்மூடித்தனமான நம்பிக்கையை விலக்கி அறிவுடைநிலையை இட்டு நிரப்ப நமக்கு உதவுகிறது. உண்மை என்பது என்ன ? ஒவ்வொரு மனிதனிடமும் அவரவர் வளர்ப்பு, கற்றகல்வி, உற்ற அனுபவம், சமூகச்சூழல், அதன் மரபு, பண்பாடு இவற்றின் அடிப்படையில் ஓர் உண்மை இருக்கக்கூடும். அவ்வுண்மை அவரவர் பார்வை சார்ந்த உண்மை. பார்வைக்குத் தெரிந்தது தெரியாதது என இரு பக்கங்கள் உண்டு, எங்கிருந்து பார்க்கிறோம் என்பதைப் பொறுத்தது அது. அவரவர் கண்பார்வை சக்தியைப் பொறுத்தும் அதுவேறுபடும். பார்வைகுறைபாடு உடைவருக்கு எதிரிலுள்ள பொருள் தெரியவில்லை என்பதால் அப்பொருள் அங்கில்லை என்று பொருளல்ல. கண்ணாடி அணிந்தோ, தொட்டுணர்ந்தோ அப்பொருளை அவரால் அறியமுடியும். உண்மைக்கும் இத்தகைய எத்தனங்கள் அவசியமாகின்றன. தவிர தனிமனிதர் உண்மை, ஒட்டுமொத்த பிரபஞ்சத்திற்கான உண்மை அல்ல. பிரபஞ்ச உண்மை என்பது, எண்ணற்ற மனிதரிகளிடம் பெறப்பட்ட உண்மைகளின் ஒன்றிணைப்பு. ஒவ்வொரு மனிதனிடமும் அடிமனதில் சரியான உண்மை ஒளிந்துள்ளது, காலம்காலமாக மானுடத்தோடு பயணிக்கும் உண்மை அது, உள்ளத்திலிருந்து ஆய்ந்து அதனை அறிதல் வேண்டும், அப்படி அறிந்த உண்மையை உறுதிப்படுத்த உரையாடலும், விவாதமும் அவசியமாகிறது. நமக்குள் உணரும் உண்மையை மேம்படுத்த பிறருடன் விவாதிக்க வேண்டியிருக்கிறது. பூமி உருண்டை, கடவுள் இருக்கிறார் அல்லது இல்லை, எல்லாவற்றிர்க்கும் பதிலைத் தேடவேண்டியது நம்மிடம், ஆனால் அப்பதிலை அவ்வுண்மையைப் பேருண்மையாக்க அல்லது பிரபஞ்ச உண்மையாக புணரமைக்க பிறர் கருத்துக்கு உடபடுத்தவேண்டும். ஒரு பிரச்சனைக்கு பிறர் யோசனையை நாடுவதோ அல்லது பிறர் கருத்தைக் கேட்பதோ நமது இடத்தில் அல்லது நமக்குப் பதிலாக அவரைச் செயல்பட அனுமதிக்கிறோம் என்று பொருளல்ல. ஒரு பிரச்சனையில் நாம் கண்ட தீர்வு சரியா தவறா அதில் உண்மையின் விழுக்காடு எவ்வளவு என்பதை அறிய பிறர் கருத்து உதவக்கூடும். நாம் தெளிந்தறிந்த

உண்மையைத் திருத்தி எழுதவும் வலுவூட்டவும் பிறமனிதருடனான உரையாடல்கள் உதவலாம். நாம் எடுக்கின்ற எந்த முடிவும் அதுசார்ந்த உண்மைக்கூறுகளும் எதிர்வினை இல்லாதபோது, நூறு விழுக்காடு சரியானதென்று சொல்வதற்கில்லை. நம் சிந்தனையில் உருவான கலையோ, படைப்போ பூரணம் பெறுவது மறுபக்கம் அதனைக் கையிலெடுத்துக் கொண்டாடும் பிற மனிதர்களின் ஆதரவால், ரசனையால்.

"உன்னையே நீ அறிவாய் ! உன்னிடத்திலுள்ள உண்மையை அறிந்து அவ்வுண்மையை உறுதிசெய்துகொள்ள அண்டையிலுள்ள மனிதர்களிடம் உரையாடலையும் நிகழ்த்து !" என்பது சாக்ரடீஸ் எழுதிய மனிதர் வெற்றிக்கான சூத்திரம். கிட்டத் தட்ட பூமிப்பந்தின் வேறொரு திசையில் வாழ்ந்து மறைந்த நமது வள்ளுவரும் "தன்வலி, மாற்றான் வலி" என உரைப்பதை இப்படித்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தியக் காலனி ஆட்சியின்போது ஆயிரமாயிரம் காந்திகள் இந்தியாவில் இருந்தார்கள், மோகன்தாஸ் கரம்சந்த் மட்டுமே காலனி ஆதிக்கத்திற்கு எதிராகத் தலைமை ஏறக முடிந்தது, தன் வலியை, தமது பலத்தை உணர்ந்ததோடு தென்னாப்ரிக்காவில் தன்னிடம் தேடிய உண்மையை அது சார்ந்த உரையாடலை சொல் செயல் இரண்டு வடிவிலும் இந்திய தேசத்திலும், பிட்டிஷ் முடியாட்சியோடும் தொடர்ந்ததன் பயனை பின்னர் நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங், பராக் ஒபாமா என உலகறிந்த மனிதர்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.


ஐக்கிய அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரீஸ், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுணக் இருவரும் இனத்தால் நிறத்தால் சிறுபான்மையிராக இருந்தும் பிழைக்கச் சென்ற தேசத்தின் பெருமகனாகத் தங்களை அடையாளப் படுத்த முடிந்ததற்கு தன்பலத்தையும் பிறர் பலத்தையும் அவர்கள் அறியமுடிந்ததே காரணம். பெரும்பானமையினரிடமிருந்து அந்நியபட்ட ஒருவரை தமது அரசியல் சட்டம் வகுத்துக்கொண்ட நெறிமுறையின் அடிப்படையில், தலைமைக்கு அழைத்துச்சென்ற பிரிட்டன் மற்றும் அமெரிக்க மக்களின் அரசியல் நாகரீகத்தை பாராட்டவேண்டும். அமெரிக்க நாட்டின் துணை அதிபர், இங்கிலாந்து பிரதமர் இருவரும் இப்பதவியைச் சம்பந்தப் பட்ட நாட்டின் குடிமக்கள், கட்சிகள், அக்கட்சியின் தலைவர்கள், உறுப்பினர்களின் தயவினால், கருணையினால் பெற்றவர்களில்லை கடுமையானப் போட்டியில் தங்கள் திறனை, வல்லமையை எண்பித்து வெற்றிபெற்றவர்கள் என்பதையும் மறந்துவிட முடியாது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடென்று பெருமைப் பட்டுக்கொகிற இந்தியாவிலும் நாளை இப்படியொரு அதிசயம் சாத்தியமா ? இங்கே காலங்கலமாய் ஆதிக்க சக்திகளிடம் அடிமைப் பட்டுக்கிடக்கிற மக்களை விடுவிக்க, அந்நய நாட்டை பூர்வீகமாகக் கொண்ட ஓர் இந்தியப் பிரஜை அல்லது சிறுபான்மை சமயத்தைச் சேர்ந்த அல்லது சமூகத்தைச் சேர்ந்த ஓர் இந்தியர் அல்லது மக்கள் எண்ணிக்கையில் பெரும்பானமையினராக இருந்தும் ஒடுக்கப்பட்ட மனிதர்களாகவே செத்துமடிகிற கூட்டத்திலிருந்து ஒருவர் அதிகார பலத்துடன் இந்திய நாட்டின் பிரதமராகவோ, ஒரு மாநிலத்தின் முதலமைச்சராகவோ, குறைந்தபட்சம் குக்கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக ; தேர்வு செய்யும் கண்ணியம் அல்லது பெருந்தன்மை ( ஒதுக்கீடுகளின் தயவின்றி ) நமக்குண்டா என்கிற கேள்வி ஒருபக்கம் இருக்கட்டும் ; இங்குள்ள சிறுபான்மை மக்களிடை அல்லது ஒடுக்கபட்ட சமுதாயத்தின் தலைவர்களிடையில் தங்கள் பலத்தை அறியும் ஆர்வமும், அறிந்த பின் பிறர்வலியறிந்து தங்கள் திறனைப் பயன்படுத்திக்கொள்ளும் முனைப்பும் இருக்கிறதா என்பதுங்கூட இங்கு கேள்விக்குறி. "எனக்கு ஒரு எம்.பி சீட் போதும், மத்திய அரசில் ஓர் அமைச்சர், கட்சிக்கு பத்து எம். எல். ஏ. சீட்டுகள், சிறுபான்மை வாரியத்துக்கு ஒரு தலைவர்பதவியென வாய்க்கரிசி போட்டால் போதும் தங்கள் சன்னதிக்குவந்து மொட்டைபோட்டுக்கொள்ள தயார்" என்கிற கொள்கைப் பிடிப்பாளர்களுக்கு, அதிகார வர்க்கம் கருணைவைத்தால் கவர்னர் ஆகலாம், ஜனாதிபதியாக கூட ஆகலாம் என்கிற கனவுடன் அரசியல் செய்பவர்களுக்கு "தன்வலியும் மாற்றான் வலியும்" நூறுவருடம் ஆனாலும் தெரியவர வாய்ப்பில்லை.

● சாந்தக்கண்ணா

# அம்மா...!

முத்து முத்தாய் மூன்று பிள்ளை
தவம் காத்து பெற்றெடுத்தோம்
சீராட்டி தாலாட்டி சோறூட்டி
நற்றவராய் நாம் வளர்த்தோம்
மடியிருத்தி அறமுரைத்தோம்
அவருயரும் பெரு நினைவில்
உடல் வருத்தி பணமுழைத்தோம்
கொட்டில் வீடு என்றாலும்
கொள்ளையின்பம் குடியிருக்க
அரியணையில் அன்பையிருத்தி
அன்றில்களாய் வாழ்ந்திருந்தோம்
எல்லாமாய் இருந்த தந்தை
எறி கணையில் தலை சிதற
சினமடைந்த மூத்தவனும்
சீராளன் படையிணைய
அண்ணனவன் வழித்தடத்தை
தம்பியும் தனதாக்க இரு மகவும்
மண்மீட்பு பணியினிலே விதையாக
விட்டபணி தனைத் தொடர- தங்கை
விடமெடுத்து கழுத்தணிந்து-வெற்றி
சமர் கண்ட வீர மகளவளும்
வித்துடலாயொரு நாள் வீடு வந்தாள்
வட்டிழந்த தென்னையைப்போல்
மொட்டையாகி நின்றபோது
அன்பு தந்து அரவணைத்து
எனக்கு "அம்மா" என்னும்
அடை மொழியும் தந்தார்கள்
பெற்றெடுத்த பிள்ளைகளை
பிறப்புரிமை வென்றெடுக்க
தானம் தந்த வீரத்தாய் -என
விளித்து விருதள்ளி தந்தார்கள்
வீடு வீடாய் எனையழைத்து
விருந்தோம்பி மகிழ்ந்தார்கள்



பணிவிடைகள் பல புரிந்து
பாசத்தால் நனைத்தார்கள்
தங்கங்கள் இருந்தபோது
தனிமையினை உணரவில்லை
இன்று தலைகீழாய் நிலைமாற
அருகிருந்தோர் ஆருமில்லை
நாதியற்ற சீவனாகி -நடு
வீதியில் நான் நிற்கின்றேன்
விழி மூடிப் பார்க்கிறார்கள்
இருந்தவர்கள் இருந்திருந்தால்
இழி-நிலையெனக்கு வந்திராது
இந்த அம்மாவை ஆரென்று
எனதினமும் மறந்திராது...!

● செ.புனிதஜோதி

# வலியின் புனைபெயர் நீ

தமிழில் காதல் பற்றி கூறும் நூல்கள் ஏராளம் பதிணெண் மேல் கணக்கு நூல்களுள் அகப்பாடல்களே அதிகம் பெற்றுள்ளன. அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் ஐயன் திருவள்ளுவர் காமத்துப்பாலிலும் சொல்லாத காதல் கருத்துகளே இல்லை. இன்பத்துப் பாலை வாசிக்கும் போதெல்லாம் எப்படி அனுபவித்து எழுதியுள்ளார் என்ற வியப்பைத் தந்துசெல்லும் அனைவருக்குள்ளும். காதல் தான் இந்த பிரபஞ்சம் அழகாய் இருப்பதற்கு மூலகாரணம். ஆதாம் ஏவாளில் தொடங்கிய காதல். சங்கிலியைப் போல் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. காதல் என்ற சொல்லே போதை தரும் வஸ்து தானே. அந்த போதை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது என்பதைத்தான்

ஆரூர் தமிழ்நாடன் அய்யாவின்

“வலியின் புனைபெயர் நீ” என்ற கவிதை நூலும் உரைக்கிறது. சிறிய இன்பத்துப்பால் என்றே சொல்லலாம். அவரே முதல் பக்கத்தில் முழுக்க முழுக்க காதலை ஏந்தும் தமிழின் முதல் தன்முனைக் கவிதைத் தொகுப்பு என்று குறிப்பிட்டுள்ளார்.

தன்முனைக் கவிதை என்றால் என்ன? நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது. நானிலு வகைக் கவிதைகள் தெலுங்கில் மிகப் பிரபலம் ஹைக்கூ கவிதை யில் இருந்து சற்று விலகி நான்கு வரிகளில் எழுதக்கூடியது முதல் இரண்டு வரிகள் முற்றுப்பெறும் அதற்கு அடுத்த இரண்டு வரிகள் சொல்லப்பட்ட நிகழ்விற்கு ஒட்டியோ அல்லது முரணாகவோ அமையும். இந்த வகைப்பாட்டில் தான் “வலியின் புனைப் பெயர் நீ “என்ற தன்முனை கவிதை நூல் வெளிவந்துள்ளது.

காதல் உங்களைக் கடக்கவில்லை என்றாலும் காதலை நீங்கள் கடக்கவில்லை என்றாலும் வாழ்ந்ததற்கான அர்த்தம் குறைவு. கவிதை, காவியம், இதிகாசம் போன்றவை உருவானது இதனால் தான். காதலில் திளைத்தவர்கள் அந்தக் காதலை கொண்டாடியப் பக்கங்கள் எத்தனை,எத்தனை.

தன் வலியை,வேதனையை,தவிப்பை, பிரிவை,அழகை,ஆராதிப்பை,ஆலிங்கனத்தை எப்படியெல்லாம் கற்பனையில் ஏற்றி பறக்கவிட்டுள்ளனர். அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாளில் கண்ணோடு கண் கவ்வியெனும் வசியச் சொல்லைப் பயன்படுத்திய கம்பனை என்ன சொல்வது.

குறுந்தொகைப்பாடலில்

“யாணே யீண்டையேனே

யென்னலனே

ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்...

காதலில் திளைத்த காதலி

யானையின் மூங்கில் உணவோடு பொருத்தி தன் வேதனையைப் பதிவுசெய்கிறாள்.நான் இங்குதான் இருக்கிறேன்.என்நெஞ்சோ என்காதலன் கானக நாடனொரு அங்கு கிடந்தொழிக்கின்றது என்கிறாள். அப்படியாகத்தான் காதல் என்பது வதைக்கக்கூடிய இனிய வலிமை தரக்கூடிய வலி.அதுதான்

“வலியின் புனைபெயர் நீ “

காதலின் வலி எப்படி இருக்கும் அணுஅணுவாக புழு துளைக்கும் வதையைப் போன்றது. அப்படியான உன் அழகு என்னை வதைக்கிறது. நீ அருகில் இருந்த போதும் தொலைவில் இருந்த போதும் என்னை கொல்லாமல் கொன்று புதைக்கிறாய் என்ற கவிஞர் தாமரை வரிகளை நினைவுக்குள் அமர்த்துகிறது.

ஆனால் ஆரூர் ஐயா காதலை வலியோடு மற்றுமல்லாது,இரக்கத்தோடு,பண்போடு,தீண்டாமை,சமத்துவம்,தத்துவத்தோடும்,வலிமையோடும் ஒப்பீடு செய்கிறார்.

பாவேந்தரைப் போன்று

காதலியின் கடைக்கண் பார்த்து விட்டால்

“மா மலையும் சிறுகடுகு”

என்பாரே அதனைப்போன்றது “வலியின் புனைப்பெயர் நீ “.

கவிதைநூலிலிருந்து..

இதோ உங்களுக்காக சில கவிதைகளை விதைக்கிறேன் உங்கள் காதல் பயிர்களை வளர்த்துக்கொள்ளுங்கள்

“விழி மூடிய உன் இமையிரண்டும்

சமாதிமேடுகள்

அங்குதான் புதைந்துகிடக்கின்றன

என் இரவுபல்கள்”

அவள் விழித்திருந்தாள் அவனுக்கு பகலாகவும் உறங்கச் சென்று விட்டால், இல்லை பார்க்க முடியாத நேரங்களில் இரவாகவும் அதாவது, இருள் நிறைந்த மனநிலையையும் தந்து விடுகிறது, என்பதைப் போல் என் அருகில் இரு. எனக்கு இரவு,பகலை உருவாக்கி தரக்கூடிய இயற்கை காரணியாய், தேவதையாய் என் இதய வீட்டில் அமர்ந்திருக்கிறாய். அப்படி நீ இல்லாத நிலை சமாதி நிலைக்கு ஒப்பானது என்று தன் காதலின் வலியை, வலிமையை ஆழத்தை, நேசத்தை இவ்வாறாகக் எடுத்துக்காட்டுவதாக எனக்குள் பதிவுசெய்கிறது இக்கவிதை.

“காமக்கடலைக் கடப்பது

எளிதிலும் எளிது

காதல் சிற்றோடையைக்

கடப்பதோ அரிதிலும் அரிது.”

இந்தக் கவிதை ஐயன் திருவள்ளுவரை அழைத்து வருகிறது

“கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில் செம்பாகம் அன்று பெரிது.”

காம இன்பத்தின் பாதியளவைக் காட்டிலும் பெரிது என்கிறார். ஆனால் ஆரூர் ஐயா காமக்கடலை முழுதும் கூடக் கடந்து விடலாம்.ஆனால் காதலில் அதாவது சிற்றோடை என்பது சிறு இடை என்றும் எடுத்துக்கொள்ளலாம் விழுந்து விட்டால் எழ முடிவதில்லை என்கிறார்.

“நீ சாதுவானவள்

ஆனால்

உன் நினைவுகள்

அப்படி இல்லை”.

என்கிறார்.

பெரிய கைகாரி என்று கிராமப்புறத்தில் சொல்வார்களே அதே போலத்தான் காதலியானவள்

பார்க்க சாதுவாக இருந்தாலும் அவள் அவன் மனதில் அமர்ந்து செய்யும் சேட்டைக்கு அளவே இல்லை என்கின்றார்.

“மௌனம் தகர்த்து

புலன்களை மதித்து

அந்தரங்கம் பேசும்

ஆண்டாளின் குரல் நீ.”

தன் உள்ளக் கீற்றை முதன் முதலில் எழுதி வெளிச்சம் போட்டு காட்டியவள் ஆண்டாள்தானே. ஆண் தான் காதலிக்க வேண்டும் சொல்ல வேண்டும் என்ற மரபை உடைத்தவள் அவள் தானே. பெண்களுக்கும் அவள் உள்ள மொழியை அந்தரங்கத்தைப் பகிர உரிமையுண்டு என்பதை காதலோடுப் பெண்ணிய சிந்தனையும் விதைக்கிறார்.

“உன் சிறகுகளுக்குள்

என்னை சிறை வை

இன்னும் விரியட்டும்

என் வானம் “

என்கிறார் சிறை என்பது நாம் தண்டனை என்போம். ஆனால் காதலியின் மனதில் சிறைபிடித்தால் அதுதான் அவரின் வானமாக விரியும் என்கின்றார். சிறை என்பது நேசிப்பு அவள் எவ்வளவு சிறை பிடிக்கிறாளோ அந்த அளவுக்கு இவர் காதல் வானத்தில் பறக்கலாம். காதலில் ஒருவரை ஒருவர் சிறை பிடித்துக் கொள்வதில் தான் அவர்களுக்கான வானத்தை உருவாக்க முடியும் அதில் எப்போதும் பறவைகளாய் பறந்து வாழ்ந்து களிக்க முடியும்.


என்பதைப்போல் சிந்தனையைத் எனக்குள் தந்து செல்கிறது. இப்படி தித்திப்போ தித்திப்பாக காதலை இனிக்க,இனிக்கத் தந்துள்ளார். இந்த கவிதையைப் படித்து முடித்தவுடன் எனக்குள்ளும் ஒருகவிதைஎழுந்தது.அதுதானே நல்ல படைப்பிற்கான வெற்றி.

இதோ உங்களுக்காக

உன் கரப்பிடிக்குள் ஊஞ்சலாடுகிறது
என் இதயம்.
அப்போது பேசும்
புருவமொழி
வேர்வரைக்கும் சாரல் எனக்குள்ளிருக்கும்
நாணத்தை அறிமுகப்படுத்தி
பட்டாம்பூச்சியின் படபடப்பை கால்களுக்குள் கட்டி
ஒரு வேதியியல் மாற்றம் நிகழ்த்துவாயே
மன்மத அரக்கனைப்போல்
வெட்கமற்று எழுதவும்
வெட்கம் தடை செய்கிறது.
எதைச் சொல்ல
போடா போ

இப்படி அனைவரையும் காதலில் திளைக்க வைத்து கவிஞனாக்கியும் விடுகிறது. ஆரூர்தமிழ்நாடன் ஐயாவின் வலியின் புனைப்பெயர் நீ. என்றகவிதைநூல். அனைவரும் வாங்கிப்படித்து காதலில் திளைத்து கவிஞனாக வாழுங்கள்.

● நவஜோதி ஜோகரரட்னம், லண்டன்



# தமிழில் முதன் முதலில் மருத்துவம் போதித்த மேதையின் 200ஆவது ஆண்டு நினைவு (1822 – 2022)

*மனித சமுதாயத்திற்குத் தொண்டுசெய்யும் குணசீலர்கள் அந்த லட்சியத்துடனேயே வாழ்ந்து விடுகின்றார்கள். அவர்கள் காலத்தால் அழிந்து போவதில்லை. காலத்தின் கோரத்தால் ஏலம் போகாது என்றென்றும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அந்த வகையில் வைத்தியர் சமுல்.பி. கிறீன் அவர்கள் மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்துகொண்டிருப்பவர் ஆவார்.*

அமெரிக்காவில் 'கிறின் ஹில்' என்னும் இடத்தில் 1822ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பத்தாம் திகதி உவில்லியம் ஈ.கிறின் தம்பதிகளுக்குப் புத்திரனாக சமுல் பிறந்தார். தனது பதினொராவது வயதில் தாயை இழந்தார். பத்துச் சகோதரர்களுடன் பிறந்த இவர் பலவித இன்னல்களையும் சமாளித்து உடலுழைப்பால் சம்பாதிக்கப் பழகிக் கொண்டார். விடாமுயற்சியும் சிக்கன முறைகளும் அவரது அன்றாட வாழ்வில் அவரது அருமையான அனுபவங்களாகின. பதின்ம வயதில் குமுறி வரும் உணர்ச்சிகளுக்கு அணைபோட்டு ஆக்க வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவா வைத்தியர் கிறீன்;.

தனது பத்தொன்பதாவது வயதில் நியூயோர்க்கிலிருந்த வண. டாக்டர்; வர்கீஸ் அவர்களிடம் கடமை ஆற்றத் தொடங்கினார். சாதாரண எழுது வினைஞராகவே பணியாற்றத் தொடங்கிய சமுல் கிறீன் அவர்கள் தனது ஓய்வு நேரங்களைப் படிப்பதிலும், வாசிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டேயிருந்தவர். வைத்தியத் துறையில் ஆர்வம் அதிகமாக அவரிடத்தில் மேலோங்கியிருந்தமையினால் வைத்தியக் கல்வியை மேற்கொண்டு சிறந்த வைத்தியராகத் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார்.

நமது நாட்டிலே அடியெடுத்து வைத்துச் சமயத் துறையிலும், கல்வித் துறையிலும் ஈடுபட்டு, ஆலயங்களும், பாடசாலைகளும் நிறுவிய அமெரிக்க மிஷன் ஊழியர்கள் வைத்தியத் துறையிலும் சேவை செய்ய ஆரம்பித்தமை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். 1819 ஆம் ஆண்டிலே வைத்திய சேவையையும் ஆரம்பிப்பதெனத் தீர்மானித்து, யாழ்ப்பாணத்திற்கு ஊழியரை அனுப்பியதுடன், வைத்திய மிஷனரிச் சேவை அங்குரார்ப்பணமும் செய்யப்பட்டது. அமெரிக்க மிஷனில் வைத்திய சேவையை ஆரம்பித்து நடத்தவென டாக்டர் யோன் ஸ்கடர் தம்பதியர் அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தனர். அவர்களின் முதலாவது வைத்திய நிலையம், 1820 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பிலேயே நிறுவப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவலிருந்து வைத்திய சேவை செய்ய வந்த வைத்தியர்கள் பத்து ஆண்டுகளின் பின் அவர்களின் சேவைக்காலம் முடிந்துவிடும். ஒவ்வொரு பத்தாண்டுகளின் பின் வேறு வைத்தியர் அச்சேவையை மேற்கொண்டு முன்னெடுத்துப் பணியாற்றிய பின் தங்கள் தாயகம் திரும்பிவிடுவர். அந்த வகையில் வந்து சேர்ந்தவர்தான் சமுல் கிறீன் வைத்தியா ஆவார்

1847ஆம ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம திகதி அமெரிக்காவிலிருந்து கிறீன் வைத்தியர் செப்டம்பர் மாதம் சென்னையை அடைந்தார். பின் சென்னையிலிருந்து புறப்பட்டு அக்டோபர் மாதம் ஆறாம் திகதி பருத்தித்துறையை வந்தடைந்தார் என்று அறிய முடிகின்றது. அன்று வல்வெட்டித்துறையில் அமெரிக்க மிஷன் நிலையம் ஒன்று இருந்தது. பின்பு அன்றைய மிஷனின் சேவைத்தலங்களாக தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், உடுவில், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களையும் பார்வையிட்டபின் வைத்திய சேவையை ஆரம்பித்தார்.

1848 ஆம் ஆண்டில் வைத்திய நிலையம் மானிப்பாய்க்கு மாற்றப்பட்டதோடு, கிறீன் வைத்தியரும் மானிப்பாய் வந்து சேர்ந்தார். அமெரிக்க மிஷனின் மத்திய வைத்திய நிலையமாக இன்றும் மானிப்பாயே விளங்குகின்றது. கிறின் வைத்தியரின் ஞாபகார்த்த வைத்தியசாலை இன்னும் தொடர்ந்து அருந்தொண்டு புரிவதை நாம் அறியமுடிகின்றது. வைத்திய சேவையை ஆரம்பித்த காலத்திலேயே வைத்தியர் ஸ்கடர் ஆர்வமுள்ள சிலருக்கு ஆங்கில மொழியல் வைத்தியத்தைக் கற்பித்தபோது, யாழ்ப்பாண மக்களுடன் கூடி வாழ்ந்த கிறீன் வைத்தியரே சமுதாயத்தில் மேலநாட்டு வைத்தியமும், விஞ்ஞானமும் தமிழில் பரவினால்த்தான் மக்கள் நிஜமாகப் பயனடைவார்கள் என நம்பினார்.

அமெரிக்காவில் இருந்த காலத்திலேயே வைத்தியர் கிறீன் அவர்கள் தமிழ் மொழியை ஓரளவு கற்க முடிந்ததாக அறிய முடிகின்றது. ஆனால் ஆங்கிலம், லத்தீன், ஜேர்மன், பிரெஞ்சு, கிரேக்கம் ஆகிய மொழிகளைக் கற்று சிறந்து விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கதது.

இவ்விதம் மொழிகளில் ஆர்வம் கொண்ட வைத்தியர் கிறீன் அவர்கள் முதன் முதலில் மொழிபெயர்ப்பதற்கென எடுத்துக்கொண்ட நூல் டாக்டர் 'கொல்வின் கட்லர்' இயற்றிய 'அங்காதிபாதம்' ஆகும். 1851 ஆம் ஆண்டு வைத்தியர் கிறீனினால் மேற்கொண்ட இம்முயற்சி அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் வெற்றியையும் ஏற்படுத்தியது.

இற்றைக்கு நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் விஞ்ஞானத்தைக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்ட கீறீன் வைத்தியர் மொழிபெயர்ப்புப் பற்றிக் கூறிய கருத்துக்கள் இன்றும் பொருத்தமானதாக நினைவிருத்தக்கூடிய ஒன்றாகும். 'எழுத்துக்கு எழுத்தும், சொல்லுக்குச் சொல்லுமாக வாக்கியங்களை மொழிபெயர்த்தல் உண்மையிலேயே சித்திரவதையாகும், உயிரை எடுத்து ஊன உடலை நடமாட விடுவதாகும். மொழிபெயர்ப்பில் கருத்துத்தான் முக்கியம். மூல நூலாசிரியன் கூறும் பொருளை, உள்ளது உள்ளவாறு உயிருடன் தருவதே உண்மை மொழிபெயர்ப்பாகும்' என்கின்றார் வைத்தியர் கிறீன்.

இவ்வித எழுத்து நுட்பங்களைக் கையாண்டு 'அங்காதிபாதம்;', கெமிஸ்தம்', 'மனுஷ சுகரணம்', 'இரண வைத்தியம்', 'வைத்தியம்', 'வைத்திய கைவாகடம்', 'குழந்தைகள்', 'பெண்கள் ஆகியோரின் நோய்கள்', 'கலைச்சொற்கள்', 'அருஞ்சொற்களை அடக்கிய அகராதி' போன்ற பல நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர் வைத்தியர் கிறீன் அவர்கள்.

சமயத் துவீயில் ஊழியஞ் செய்ய அன்று வந்த மிஷனரிமார் அனைவரும் அந்த மன உணர்வுடைய உண்மைத் தொண்டரே! எனினும் வைத்தியமும் விஞ்ஞானமும் கற்றுத் தேறிய கிறிறிஸ் வைத்தியர், சமயப்பண்புடனும் உணர்வுடனும் செயலாற்றித் தனிச் சிறப்பெய்தினார். தமிழுக்குப் புதிரான விஞ் ஞானத் துறையில் நின்று பணி புரிந்தார். தமிழில் விஞ்ஞானத்தை அறிமுகப்படுத்தி அத்துறையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

தமிழுக்கோ அது புதியதோர் துறை. அன்றைய கால கட்டத்தில் தமிழ் கற்றவர்களுக்கு விஞ் ஞானத் துறையில் ஆர்வம் இருக்கவில்லை. ஆங்கில மொழியிலேனும் விஞ்ஞானம் குறித்த பார்வை மக்களிடையே பரவி இருக்க வில்லை. அந்த வகையில் நூற்றிஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே கிறீன் வைத்தியர் தமிழ்த் தொண்டாற்றியமை மிகப் பெரும் பாராட்டுக்குரிய விடயமாகும். இன்று நாம் நவீன காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும், கிறீன் வைத்தியரின் அரும் பெரும் சேவைகளையும், தமிழ் மக்களுக்காற்றிய தமிழ்த்தொண்டினையும் நாம் அனைவரும் இவ்வேளை நன்றியுடன் கௌரவிப்போமாக!

**● ச.ஆனந்த குமார்**

# நினைவுகள்

என் உயிர் எழுத்துக்கள்
உன் மெய் தீண்டலில்களில்தான்
அர்த்தங்கள் உமிழ்கின்றன..
அமிலங்கள் தெறிக்கும்
அகங்கார பார்வைகள்
அழித்து விட முடியவில்லை
பிரியங்களின் வேர்களை..
இருத்தலையுணர்த்தும்
நினைவுகள் நான்கு பக்கமும்
பரவி விருட்சமாய் வளர்ந்து
உன் உடம்பை வளைத்து
நரம்புகள் நொறுக்கப்படலாம்..
இலக்கணங்களுக்குள்
அமராத கவிதையாய் உன்னை
மறக்க விடாமல்..குத்தி கிளறி
வலிகள் சுமக்க கட்டளையிடலாம்..
ஆழ்ந்த குறிப்புக்கள் அடங்கிய
என் வயலின் இசை
இடைவிடாது உன் திசுக்களுக்குள்
அமர்ந்து ஆலாபனை செய்யலாம்..
உன் அலட்சிய புன்னகைகள்
புகைகளாய் மாறி
என் நுரையீரல் தின்று விட
வாய்ப்பில்லை..
என்றாலும் வாழ்ந்த காலங்களுக்குள்
திரும்பவும் அமர்ந்து கொள்ள
என்றாவது வருகையில்..
இலையுதிர் காலமென
வானிலை அறிவிக்கலாம்...
நானும் அலட்சிய பனித்துளியை
சொந்தமாக்க தீவிர முயற்சியில்
இருக்கிறேன்..
பிரிய ஆதவன் முன்
அவை நொடிகளில் உருகி
சிதறுகின்றன..



● நேசன் மகதி

வானிலை அறிக்கை
மிதமானது முதல்
பலத்த மழை வரை
பெய்யக்கூடும் என்கிறது
வானிலை அறிக்கை
எதுவாயினும்
சுகமானதுதானே
வேர்களுக்கு....!

● பெ. விஜயலட்சுமி


## துளிப்பாக்கள்

தள்ளி விடும்போதெல்லாம்
முன்னேற்றி விடுகிறது
நீரில் போடும் துடுப்புகள்
கனமழை
சிறு புன்னகை மலர்கிறது
விடுமுறை அறிவிப்பு
தன் கரங்களை நீட்டி
பார்வைக்கு ஏங்கும்
மொட்டை மாடிச்செடிகள்
மழையிலும் காய்ந்துக்கிடக்கிறது
மனிதம்
சிறிய குடை

● ஐ.தர்மசிங், நாகர்கோவில்..

## பார்வை

இருவரால் வருகிறோம்
நால்வரால் திரும்புகிறோம்
இந்த இடைவெளியில்
எத்தனையோ மனிதர்களை
முகமுகமாக சந்திக்கிறோம்
உறவுகளாக
அன்னியர்களாக
நண்பர்களாக
பகைவர்களாக
பார்ப்பவர்கள்
இந்த சந்திப்புகளையே
"வாழ்க்கை " என்கிறார்கள்
என்னை சந்திப்பவர்கள்
சக பயணிகளாக
தென்படுவதால்
இந்த நிகழ்வை
"பயணம் "
என்கிறேன் நான்...



## கவிஞர் மல்லை.மு.இராமநாதன்

கேணிப் பறியும்
காலணியும் தைத்து
காலம் கடத்துகிறான் கந்தன்.
அன்றைக்கெல்லாம்
தோல் செருப்பு அணிவோர் அதிகம்.
இன்றைக்கு
வறுமைப் பாம்பை
வருமானத்தடியால்
அடிக்க முடியவில்லை'
கார்ப்பரேட் கம்பெனிகளின்
காலணி விளம்பரம்
காட்சி ஊடகத்தில்
குறைந்த விலை
நெகிழி பாதணி வாங்க
கூடி விட்டார் மக்கள்,
வெயில் வந்தால் அவனுக்கு வசந்தம்
மழைக்காலம் வந்தால்
வரும் படி இல்லாத வெறும் மடி.
படிக்கின்ற தன் பிள்ளைக ளா ல்
இடிக்கின்ற இன்னல் போகுமென்று
எதிர்கால கனவில் கந்தன்
பாதணி அ றாதென்று
பாதசாரிகளின் பாதத்தை நடக்க விடும்
அவனுக்கு
நம்பிக்கை கூற ஆளில்லை
பரம்பரையாய்
பாதணி தொழிலில்
பாதம் பதித்த இவன் வாழ்வு
பழுதுபட்ட பாதணி போல்
விளிம்பு சனம் இவர்களுக்கு
விமோச்சனம் என்றோ?

● வாசுகி நடேசன்



# அந்த ஒன்று.......

*கருணாவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.மனம் ஒரு நிலையில் இல்லாது தவித்தது. இண்டைக்கு ரித்தியுடன் கதைக்காமலே விட்டிருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது.*

*".ம்... இனி கழிவிரக்கப்பட்டு என்ன செய்வது...?"*

*" கருணா! வெறுமன முகநூலில உங்கட குடும்பப் படங்களையும் அங்க இங்க வக்கேசன் போனது எண்டு விளம்பரப் படுத்திர படங்களையும் போடாமல் உன்ற மச்சாள் போல உன்ற திறமையக் காட்டுர விடயங்களப் போட்டியெண்டால் உனக்கு ஒரு பெயர் நிலைக்கும் தானே."*

ராதிகா என்ற பெயரை ரித்தி என மாற்றிக்கொண்டு "இன்றைய நாள் நல்ல நாளாக அமைய...." என்று முகநூலில் நாள்தோறும் அறிவுரையை அள்ளித் தெளிக்கும் ராதிகா இன்று கருணாவிற்கு, சிறப்பாக- நேர்முக வருணனையாகக் கொடுத்த அறிவுரையால் கருணா கடுப்பாகியிருந்தாள்.

கருணாவுக்கு மச்சாள் கலைமகளைச் சிறுவயதில் இருந்து பிடிக்காது. அவளோடு போட்டி போட்டு பல சமயங்களில் கருணாவே தோற்றத்தால் உண்டான கசப்பு ஐம்பது வயதைக் கடந்த நிலையிலும் அவள் உள்ளத்தை நிறைத்திருந்தது.

அப்படி என்ன தான் கலை முகநூலில் கிழித்திருக்கிறாள் என்று முகநூலில் கண்ணை மேயவிட்டாள் கருணா.

முகநூலில் கலைமகள் அழகிய ஓவியம் ஒன்றை வரைந்து பதிவிட்டிருந்தாள். அதற்கு பலரிடமிருந்தும் லைக்குகள் குவிந்திருந்தன.

கலைக்கும் கருணாவுக்கும் இப்படிச் சிறிய விடயங்களில் தான் போட்டி...உண்மையில் கலை, கருணாவைத் தனது போட்டியாளாக என்றும் நினைத்ததில்லை என்பது வேறு விடயம்.

கருணா ஒரே பிள்ளை.அதிலும் தாயில்லாததால் தகப்பனான கணபதிப் பிள்ளையால் அதிக செல்லம் கொடுத்து வளர்க்கப் பட்ட பிள்ளை. இதனாலோ என்னவோ சிறுவயதில் தனது அத்தை மகளான கலையை அவள் அப்பம்மாவோ(கலைக்கு அம்மம்மா) அல்லது கணபதிப் பிள்ளையோ கொஞ்சுவதைக்கூட அவளாள் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை.

உறவுக்குள் மட்டும்தான் கருணாவின் மனனிலை இப்படி என்று சொல்வதற்கில்லை.

அவளது நண்பி சுபா( ஒரு காலத்தில் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவள்- கால் நூற்றாண்டின் பின் இவளைத்தேடிப் பிடித்து முகநூலில் நட்பைப் புதுப்பித்துக் கொண்டவள்.இலங்கையில் கல்லூரி ஒன்றில் ஆசிரியராய் இருப்பவள்.) எப்பொழுதும் போல இன்றும் தமிழ் சங்கத்தில் தான் கவிதை வாசித்ததையும் பொன்னாடை அணிவிக்கக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டதையும் படங்களுடன் பதிவிட்டிருந்தாள்.

அவள் ஒரு தற்பெருமைக்காரி. மூச்சு விட்டால்கூட அதை விளம்பரப் படுத்தாமல் விடமாட்டாள். மனதுக்குள் சுபாவை கரித்துக் கொட்டினாள் கருணா.

இதுபத்தாது என்று இவளது பக்கத்துவீட்டில் முன்பு இருந்தவளும் இவளது உறவினளுமான(இவளைவிட இரண்டு வயதுமட்டுமே இளையவள்)சாந்தி போனகிழமை கனடா,அமேரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்ததாக எழுதி அங்கு எடுத்த படங்களை பதிவிறக்கியிருந்தாள். மருத்துவர் ஒருவரை மணமுடித்த அவள் அவுஸ்ரேலியாவில் வங்கி ஒன்றில் வேலை செய்கிறாள்.

தனது அந்தஸ்தைக் காட்டி மற்றவர்களை எரிச்சல் படுத்துவதுதான் அவளது வேலை.இதுதான் அவள் பற்றிய கருணாவின் மனப் பதிவு...

இவளது பள்ளித்தோழி ஈஸ்வரி -கல்லூரிக் குரூப்பில் இருக்கிறாள்.- அவள் இணையத்தளம் ஒன்றில் சிலகதைகளைப் பதிவிட்டிருக்கிறாள்-. அதன் லிங்கை குரூப்பில் பகிர்வாள். அக்கதைகளைப் பற்றி யாரும் வாசித்து கருத்துக் கூறாவிட்டாலும் அவள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தன்னை யாரும் கதையாசிரியை என அங்கீகரிக்க வேண்டும் என்று தான் எதிர்பார்க்கவில்லை என்றும் தனது மனதில் உள்ளவற்றை கதையில் வடிப்பது தன் தர்மம் என்றும் ஏதோதோ எழுதுவாள்.அவளுக்கே தான் கதையாசிரியைதானா என்ற சந்தேகம் இருக்கு போல -- கருணாவுக்கு அப்படித்தான் தோன்றுகிறது.

இவளது இன்னுமொரு தோழி வதனி இத்தாலியில் இருக்கிறாள்.அவளும் தனக்கென ஒரு வேலையைத் தேடிக்கொண்டாள். ஒன் லைனில் புடவை நகை வியாபாரம். ஐம்பதைத் தாண்டிய போதும்- தானே ஒரு மொடல் போல ஆடை ஆபரணங்களில் யொளிக்கின்ற படங்களை முகநூலிலும் குரூப்பிலும் பதிவிடுவாள்..இளமை குன்றா அவள் தோற்றத்தில் கறுணாவுக்கு எப்பொழுதும் பொறாமைதான்.தன் அழுக்காற்றை லைக் எதுவும் போடாது ஓரளவு தணிக்கப் பார்ப்பாள்.

இந்த நட்பு வரிசையில் இந்துமதி இலங்கைக் கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளர்ஞ் சுகந்தி

கனடா வானொலி ஒன்றின் அறிவிப்பாளர்... காயத்திரி இங்கிலாந்தில் பிரபல நடன ஆசிரியை... சர்மிளா -சாதாரணதரம் வரை இவளோடு படித்தவள்.- யாழ் மருத்துவமனையில் வைத்தியராக இருக்கிறாள்.குமுதினி குடும்பத் தலைவியாக யாழ்ப்பாணத்தில் நீர்வேலியில் இருந்தாலும் வீடுத்தோட்டம் அமைத்து அதனால் வருவாயும் பெற்று வருகிறாள். அவளது தோட்டச் செய்கையின் சிறப்பை யூ ரியுப் சனல் ஒன்று வெளியிட்டு அவளைச் சிறப்பித்திருந்தது.

இப்படி அவள் தோழியர் யாவரும் ஏதோ ஒருவகையில் திறமையாளராக இருக்க... ( இன்னும் பல தோழியர் -கருணா பெண்கள் கல்லூரியில் மட்டுமே படித்தவள்- முகநூலிலோ கல்லூரிக் குரூப்பிலோ முகங் காட்ட வில்லை. அவர்களுக்கு என்னென்ன பிரச்சினையோ... ?) அவள் மட்டும் ... .மன வெப்பியாரத்தை அவளால் தாங்க முடியவில்லை...

கருணாவின் தாய் அவளுக்கு மூன்று வயதாக இருக்கும்போதே காலமாகிவிட்டா.அதன் பின் கணபதிப்பிள்ளையின் ஒரே உலகமாக கருணாவே இருந்தாள். இதனால் சிறு பராயத்தில் இருந்தே விரும்பியனவெல்லாம் அவளுக்குக் கிடைத்தன.படிப்பதில் சிறிய ஆர்வம் இருந்ததால் க,பொ. உயர் தரம் வரை(வணிகத்துறையில்) படித்தாள். நடனம் சங்கீதம் எதிலும் நாட்டம் இருக்கவில்லை. அதேபோல் சமையல் தையல் எதிலும் அதிக திறமை அவளுக்கு இருக்கவில்லை. அல்லது அவற்றை அவள் வளர்த்துக்கொள்ள முனையவில்லையோ... ?

உயர்தரம் படித்து முடித்த நிலையில் 1987ஆம் ஆண்டு அவளும் கணபதிப்பிள்ளையும் யாழ் போர்ச் சூழ்நிலையினால் கொழும்புக்கு இடம் பெயர்ந்தனர்.அப்பொழுது அவள் தங்கியிருந்த தொடர்மாடிக் கட்டடத்தில் நாலைந்து பெண்கள் திருமணமாகி வெளிநாடு செல்லுவதற்காகக் காத்திருந்தனர். அவர்களோடு பழகும் வாய்ப்பு கருணாவுக்குக் கிடைத்தது.அப்பொழுதுதான் அவள் மனதில் வெளிநாடு செல்லும் ஆசையும் துளிர்விட்டது.

கணபதிப்பிள்ளைக்கோ தன் ஒரே மகளைப் பிரிந்து வாழ்வது நினைத்துப்பார்க்க முடியாததாய் இருந்தது. அவர் உள்ளூரிலேயே படித்த நல்ல உத்தியோகத்தில் இருக்கும் மாப்பிள்ளையை தன்மகளுக்குக் கட்டிவைக்க விரும்பினார். அதற்கான பணபலமும் அவரிடம் இருந்தது.ஆனால் கருணாவின் கனவு வேறொன்றாய் இருக்கும் போது அவரால் என்னதான் செய்ய முடியும்..'?

கருணாவின் ஆசைப்படி ஜேர்மனி மாப்பிள்ளையான தயானந்தன் அவள் கணவனானான்.

திருமணமாகி ஒருவருடத்தின்பின் ஜேர்மனி வந்தாள் கருணா. தயானந்தன் 'பிரேமன்' நகரில் பாண்கடை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தான். அதி காலை மூன்றுமணிக்கு வேலைக்குக் கிளம்பிப் போய் மதியம் பன்னிரண்டு மணியளவில் வேலையால் திரும்புவான். இந்த நேர ஒழுங்கோ அல்லது தயாவின் வேலையோ கருணாவுக்கு முதலில் பிடிக்கவில்லைத்தான். ஆனால் காலகதியில் எல்லாம் பழகிப்போயின. ஒருவகையில் அது அவளுக்கு வசதியாகவும் இருந்தது.

தயானந்தன் வீட்டு வேலை உட்பட அனைத்திலும் கை கொடுத்தான். கருணா வேலைக்குப் போகவேண்டிய அவசியமிருக்கவில்லை.தயாவும் அவளும் வேலைக்குச் சென்றால் அதிக வருவாய் வரும் தான். ஆனால் வரிப்பணமும் அதிகம் கட்ட வேண்டிவரும். இதனால் கருணா வீட்டிலிருந்து பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டிருப்பது மேல் எனத் தயா சொல்லிவிட்டான்.கருணாவுக்கும் வீட்டு வேலையுடன் வெளியில் வேலைக்குப் போய் வருவது சுமையாக இருக்கும் என்பதால் தயாவின் கருத்தை மனப்பூர்வமாக் ஏறுக்கொண்டாள்.பிள்ளைகளோடு கணபதிப்பிள்ளையும் தமது இறுதிக்காலத்தில் ஜேர்மனிக்கு வந்து மகளுடன் தங்கியதால் பொழுது போவதொன்றும் கருணாவுக்குக் கடினமாகவில்லை.

ஆனால் ஏழுவருடங்களின் முன் கணபதிப்பிள்ளை இறந்து போனார். கருணாவின் மூத்த இரு பெண்களும் திருமணம் செய்து மூத்த மகள் பவித்திரா லண்டனுக்கும் இரண்டாவது மகள் ஆதிரா பேர்லினுக்கும் போய்விட்டார்கள். போன வருடம் மார்ச மாதத்தில் மூன்றாவது மகன் கபிலனும் பல்கலைக்கழகக் கல்விக்காக அமேரிக்கா போய்விட முதல் முதல் தனிமையை உணரலானாள் கருணா.

தயானந்தன் துணை இருந்தாலும் அவரும் வேலைக்குச் சென்றுகொண்டிருந்ததால் தனிமையில் பெரும்

பொழுதைக் கழிக்கும் நிர்ப்பந்தம் கருணாவுக்கு.

அப்பொழுதுதான் முக நூல்,வற்சப் முதலிய சமுக ஊடகங்களில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தத் தொடங்கியிருந்தாள் கருணா. அவளது பழைய நண்பிகள் பலரது தொடர்பு கிடைத்தது. ஆரம்பத்தில் மகிழ்ச்சியாகவும் சுவாரசியமானதாகவும் இருந்தது என்னவோ உண்மைதான். விடுப்பூகத்தோடு நண்பிகள் தமது தற்போதய வாழ்க்கை போக்குகள் பற்றி ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொண்டனர். உண்மையில் கண்ணுக்குத் தெரியாத தராசில் தங்கள் தங்கள் தகுதியை -சேற்றஸ்சை -நிறைகளை -அளந்துகொண்டார்கள். தமது வாழ்கைக் குறைபாடுகளை மறைப்பதில் கவனமாக இருந்தார்கள்.

இந்த விடுப்பூக்கம் (curiosity) ஒருகட்டத்துக்கு மேல் குறைந்தபின் -

கருணா தன்னை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்கியபோது... .மன உளைச்சல்தான் மிஞ்சிநிற்கிறது.

தனது அடிப்படைத்தேவைகள் யாவும் பூரணமாகக் நிறைவேறிவிட்டன என்றும் பிள்ளைகளின் பொறுப்புக்கள் யாவும் முடிந்து விட்டன என்றும் திருப்திபட்டுக்கொள்ளத்தான் கருணா விரும்புகிறாள்.

ஆனால் மனம் எதோ ஒன்றுக்கு இன்னும் ஏங்குகிறது.....நானும் சமூகத்தில் -வேண்டாம் நண்பிகள் மட்டத்திலாவது கணிப்புக்கு உரியவளாக.

ஏதோ ஒன்றைச்செய்து தனது அடையாளத்தை -இருப்பை நிறுவக்கூடியவளாக... .

உணவு, உடை போல மனிதனுக்கு அடையாளம் கூட ஒரு தேவைதானோ..? நவீன ஜனநாயக உலகில் -அதிலும் சமூக ஊடகங்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட உலகில், மனிதர் தம் தம் தகுதிக்கேற்ப தமக்கான அடையாளங்களைத் தேடிக்கொள்ள விரும்புகிறார்கள். தம்முள் எழும் வெற்றிடத்தை ஏதோ ஒருவகையில் இட்டு நிரப்பும் முயற்சி அது... அதற்கு கருணா மட்டும் விதிவிலக்கா என்ன....?

அவள் மனம் இடையறாது தன்னை நிறுவுவதற்கான அந்த ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கிறது.....

● முத்தையா மோகன்

## தேடல்கள்...

இருள்சூழ்ந்த..
வனாந்திரமொன்றில்
எதை தொலைத்தேனென்று
ஏதுமறியாமல்
தேடித்திறிகிறேன் நான்...
எதைத்தொலைத்தேன்
ஏன் தேடித்திறிகிறேன்
ஒன்றும் விளங்கவில்லை...
இருண்டு போனது
என்மனதா வனாந்திரமா
தெளியாத மயக்கம்...
நீர்க்குமிழிபோன்று
திடமில்லா வாழ்வொன்றில்
நீந்தி நெளிகிறது கனவுகள்...
ஆள்வோரின் தெளிவின்மை
ஆண்டோரின் புரிவின்மை
எதில் தொலைந்தேன் நான்..
இனவாத சூழ்ச்சியிலா
மதவாத வஞ்சகத்திலா
எதில் கரைந்தது கனவுகள்...
நாடுகடந்த வாழ்க்கையிலா
கடல்கடந்த கனவுகளினாலா
எங்கே தொலைந்ததென்
தேடித்திறிகிற ஒன்று.........
அம்மணமாய் வந்தேனாம்
போகப்போவதும்
அப்படியேதானாம். பிறவு
எதைத்தேடுகிறேன் நான்...
என்னை அடையாளப்படுத்த
எனக்கானதைத்தேடி
தொடரும் தேடல்கள்...

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

நெகிழியைத் தவிர்த்து நிலத்தை நிமிர்த்து
காற்றுதனை மாசாக்கும் புகையைப் போல
கழிவுநீரால் மாசாகும் ஆற்றைப் போல
ஊற்றுதனை அடைக்கின்ற நெகிழி யாலே
உயிர்காக்கும் மண்ணெல்லாம் மலடாய் ஆகும் !
கூற்றுவன்போல் நிலம்மீது பரந்து நின்று
கொட்டுகின்ற மழைநீரைத் தடுப்ப தாலே
ஏற்றத்தில் நீரிறைக்கும் கிணற்றுக் குள்ளே
எங்கிருந்தோ வரும்நீரும் நின்று போகும் !
மக்காத குப்பையாக நெகிழி நின்று
மண்தாயின் மூக்கோடு வாய டைக்கும்
சக்கையாக மண்சத்தைப் பாழாய்ச் செய்து
சந்ததிக்குச் சாக்காட்டை விருந்த ளிக்கும் !
பொக்கைவாய் தாத்தாபோல் பூமி யாகிப்
பொலிவிழந்து மரம்செடிகள் பட்டுப் போகும்
தக்கபடி நெகிழியினைத் தடுக்கா விட்டால்
தங்காது துளிநீரும் நிலத்திற் குள்ளே !
தாள்களிலும் துணிகளிலும் பைகள் தைத்தும்
தரமான பொருள்வாங்க எடுத்துச் செல்வோம்
பால்தயிர்நெய் எண்ணெயினை வாங்கு தற்குப்
பாத்திரத்தைக் கடைகளுக்கு எடுத்துச் செல்வோம் !
நாள்தோறும் விழிப்புணர்வை மக்கட் கூட்டி
நஞ்சென்றே நெகிழிதனைத் தவிர்க்கச் செய்து
கால்பதிக்கும் வரலாற்றை நமக்க ளிக்கும்
கனிமவள நிலந்தன்னை நிமிர வைப்போம் !



● இரா.மதிராஜ்

# சாரல்



நகரமயமாக்கல்
விளை நிலங்களைப்
பின்னுக்குத் தள்ளி
சாலையோரம் முன்னேறும்
கான்கிரீட் காடுகள்...
ஓரம் கட்டப்படுவது
என்னவோ
உடல் நலமும் தான்!

❊

உடல்கள் தகனமாகி
சம்பலானாலும்
பயிர்களுக்கு.ம்
உரமாகட்டும்
என நினைக்கும்
விவசாயி
வயற்காட்டின் ஊடே
கட்டப்பட்டிருக்கும்
மயானக் கொட்டகைகள் !

❊

சிறிது நேரத்திக்கு
முன் என்னில் பட்ட
மழைத் துளிகள்
இப்போது விழுவதில்லை
நான் பயணிக்கிறேன்,
என்னுள் வந்த நீ மட்டும்
இன்னும் இறங்க மறுக்கிறாய்
இன்னும் பயணிக்கிறாய் !

❊

மூச்சென்பது வெறும் மூச்சல்ல
உயிர் பிழைக்க
அது தான் முயற்சி...
அதுபோல் தான்
முயற்சியென்பது வெறும்
முயற்சியல்ல
வெற்றிபெற
அது தான் உயிர் மூச்சு!

● நௌஷாத் கான்.லி



# குகன் – சுகன்யா மற்றும் பலர்

### ஊர் : சென்னை

### இடம் : சென்னையிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனை

*என்னங்க உங்க அம்மாவுக்கு என்ன ஆச்சு?*

*அப்பா இறந்ததுல இருந்து அம்மாவுக்கு மனசு சரியில்லை,நானும் நர்ஸிங் படிக்க சென்னை வந்துட்டேன்,அண்ணாவும்,அண்ணியும் அம்மாவை கண்ணும்,கருத்துமா பார்த்துக்கலை அதனால தான் அம்மாவுக்கு ரொம்பவும் மனசுக்கும்,உடம்புக்கும் சுகமில்லாம போச்சு.*

*இப்ப நான் நர்ஸிங் எல்லாம் முடிச்சிட்டேன்,அந்த ஆண்டவன் புண்ணியத்துல இந்த மருத்துவமனையிலேயே வேலையும் கிடைச்சிருச்சு.அதான் டிரீட்மெண்ட்க்கு இங்க கூட்டிட்டு வந்து கையோட அம்மாவ பொறுப்பா பார்த்துக்கிட்டு இருக்கேன்.*

*ஓ அப்படியா,உங்க அண்ணன்,அண்ணியெல்லாம் வரலியா?*

*அண்ணனுக்கு ஊர்ல வயல பார்க்கவே நேரம் சரியா கிடக்கு,அண்ணி ரெண்டு குழந்தைகளோட வீட்ல இருக்கா,அம்மா நல்லா இருக்கும் போதே அவங்களை பார்த்துக்க மாட்டா,இந்த நிலைமையிலா பார்த்துக்க போறா.*

அம்மா பழைய நிலைமைக்கு வந்தா போதும்,அவங்க வேலைய அவங்களே பார்த்துக்குவாங்க

உங்களுக்கு என்ன பிரச்சனைங்க,நீங்க எதுக்கு இந்த மருத்துவமனை வந்து இருக்கீங்க.

உங்க அம்மா மாதிரி தாங்க எங்க அம்மாவுக்கும் கொஞ்சம் மனநிலை பாதிக்கப் பட்டு இருக்கு,இந்த மருத்துவமனையில டிரீட்மெண்ட் செஞ்சா சீக்கிரத்துல சரியா போயிடும்னு சொன்னாங்க அதனாலே தான் அம்மாவை அழைச்சிட்டு வந்து இருக்கேன்.

ஓ அப்படியா

உங்க அப்பா வரலையா?

நான் சின்ன வயசா இருக்கும் போதே அப்பா மஞ்சள் காமாலை வந்து இறந்திட்டாரு,வீட்டுக்கு நான் ஒரே பையன் தான்.

எங்க அம்மா தான் கூலி வேலை பார்த்து காப்பாத்துச்சு இப்ப ஏதோ ஓரளவுக்கு படிச்சதாலே திருவண்ணாமலைக்கு பக்கத்துல ஒரு ஊர்ல சின்னதா ஒரு செல்போன் அக்சஸ்ஸரிஸ் கடை வச்சு இருக்கேங்க.

அம்மா டிரீட்மெண்ட்க்காக இன்னைக்கு கடைய மூடிட்டு தான் வந்து இருக்கேன்,உங்களை பார்த்தா ரொம்ப நல்லவங்களா தெரியுது,இந்த மருத்துவமனையில வேற நர்ஸா இருக்கீங்க அப்பப்ப உங்க அம்மாவோட சேர்த்து எங்க அம்மாவையும் பார்த்துக்கோங்க.

வாரத்துக்கு ரெண்டு மூணு தடவை வந்து அம்மாவை பார்த்துப்பேங்க,உங்களுக்கும் வெளியே இருந்து ஏதாவது சாப்பாடு,மளிகை பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் வாங்கிட்டு வந்து தரணும்னா தயங்காம சொல்லுங்க,நான் கண்டிப்பா வாங்கிட்டு வந்து தர்றேங்க..

நீங்க கவலைப்படாம போங்க,உங்க அம்மாவை எங்க அம்மா போல பார்த்துக்குறேன் என்றாள் சுகன்யா.

நாட்கள் செல்ல,செல்ல சுகன்யா மற்றும் குகன் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாய் இருந்ததோடு மட்டுமின்றி தங்களுக்குள் ஒரு நட்பு கடந்த காதலையும் வளர்த்து கொண்டனர்.

ஒரு கட்டத்தில் சுகன்யா அம்மா குணமாகி தன்னுடைய சொந்த ஊரான கும்பகோணத்திற்கு அருகே உள்ள கிராமத்துக்கு சென்று விட்டார்.குகனின் அம்மாவும் குணமாகி திருவண்ணாமலைக்கு அருகே உள்ள வந்தவாசிக்கு சென்று விட்டார்..

தன் தாய் போல குகனின் அம்மாவை சுகன்யா பார்த்து கொண்டதால் அவள் காலத்துக்கும் தன் இணையாக வரவேண்டும் என்று எண்ணினான் குகன்.ஒவ்வொரு விஷயத்தையும் அக்கறையாய் கையாண்டது மட்டுமின்றி அவளுக்கு தேவையானதை அவள் கேட்கும் முன்பே பேரன்போடு வாங்கி உபசரித்த அவனது குணமே இவன் தான் என் கணவனாய் வரவேண்டும் என்ற வேட்கையை அவளுக்குள் விதைத்தது.

குகனின் மீது எல்லையற்ற அன்பும்,பாசமும் இருந்தாலும் ஊரில் அண்ணியின் தம்பியை நினைத்தால் தான் இவளுக்கு பயமாக இருந்தது.ஊரில் இருந்தவரை அவள் போகும் இடமெல்லாம் சுற்றி,சுற்றி வருவான்.

அவன் மீது துளி கூட விருப்பமே இல்லாவிட்டாலும் என்னை தான் காதலிக்கணும்,நீ என்னை தாண்டி கல்யாணம் கட்டணும் என்று முரட்டுத் தனமாய் அவளிடத்தில் விதாண்டாவாதம் செய்வான்.

யோவ் உன் தங்கச்சிக்காரி என் தம்பி விரும்பி,விரும்பி பேசினாலும் பிடி கொடுத்து பேச மாட்றா,

இங்க பாரு உன் தொங்கச்சி மட்டும் என் தம்பிய கட்டிக்கல நீ ஆம்பளயே இல்ல,நான் பெத்த ரெண்டு புள்ளைங்களும் உனக்கு பொறக்கலைன்னு ஊர் சிரிக்க உன்னை நாற அடிச்சிட்டு,நீ கட்டுன தாலிய அறுத்து எறிஞ்சிட்டு போய்க்கிட்டே இருப்பேன்.

இங்க பாரு சொர்ணா நீ எதுக்கும் கவலைப்படாதே,என் தங்கச்சி சுகன்யா உன் தம்பி உத்தமனுக்கு தான்.

நீ பேசுன்ன மாதிரி நடந்தா உன் வாழ்க்கைக்கு நல்லதுன்னு தன் கணவன் குளஞ்சியை மிரட்டி விட்டு சென்றாள் சொர்ணா..

சுகன்யா,சுகன்யா என்று தன் தங்கையை அழைத்தான்

என்ன அண்ணா

நம்ம உத்தமனை உனக்கு கல்யாணம் பண்ணனும்னு நானும்,உங்க அண்ணியும் ஆசைப்படுறோம்.

நீங்க ஆசைப்பட்டா போதுமா,நானும் ஆசைப்படணும்லே

இங்க பாரும்மா எல்லாருக்கும் ஆசைப்பட்ட மாதிரி வாழ்க்கை அமையுறது இல்லை,கிடைச்ச வாழ்க்கையை ஏத்துக்கிறது தான் பொம்பளை புள்ளைக்கு அழகு.

அந்த குடிகார பயல எப்படின்னே எனக்கு கல்யாணம் கட்ட உனக்கு மனசு வருது.இதுமட்டுமா அவனுக்கு சில பொம்பள சகவாசமும் இருக்கு.அப்பா உயிரோட இருந்தா இப்படிப்பட்ட பையனை எனக்கு மணமுடிக்க ஆசைப்பட்டு இருக்கவே மாட்டாரு.

இங்க பாரும்மா பெரும்பாலான ஆம்பளை கல்யாணத்துக்கு முன்னாடி அப்படி,இப்படின்னு தான் இருப்பானுங்க,நாம்ம தான் அட்ஜஸ்ட் பண்ணி வாழ கத்துக்கணும்.உனக்கு வேணும்ன்னா கல்யாணத்துக்கு அப்புறம் உன் அன்பால அவனை திருத்து..

எல்லாரையும் எல்லாராலும் திருத்த முடியாது அண்ணா

இங்க பாரு சுகன்யா,நானும் உங்க அண்ணியும் ஆசைப்பட்டுட்டோம்.நீ அவனை தான் கல்யாணம் பண்ணனும்.உன்கிட்ட உன் விருப்பத்தை கேட்கலை,நீ நாங்க சொல்லுறமாதிரி கேளுன்னு கட்டளையிடுறோம் அவ்வளவு தான்.

இங்க பாரும்மா மனசை போட்டு எதுவும் குழப்பிக்காதே கல்யாணம் ஆனா உத்தமன் கண்டிப்பா திருந்திடுவான்.இது உன் வாழ்க்கை மட்டுமல்ல உன் அண்ணனோட வாழ்க்கையும் சம்பந்தப்பட்டது.

நீ என் எச்சில் பால் குடிச்சு வளர்ந்தவ,அண்ணனும் ஒரு வகையில அப்பன் மாதிரி.உனக்கு கனவிலும் கெட்டது செய்யணும்னு நினைக்க மாட்டேன்..

இந்த ஆடி முடிஞ்சு அவனை கல்யாணம் பண்ணிக்கோ மா

அண்ணே நீங்க சொல்லுறதை நான் கேட்குறேன் ஆனா அதுக்கு முன்னாடி நான் நினைச்ச மாதிரி நர்சிங் படிச்சு முடிச்சு சென்னையில ஒரு வருஷம் வேலை பார்க்குறேன் அதுக்கப்புறம் அந்த அனுபவத்தை வச்சு நம்ம ஊரிலேயே வேலை வாங்கிட்டு வந்ததுக்கு அப்புறம் உத்தமனை கட்டிக்குறேன் என்று பொய் சொல்லிவிட்டு சென்னைக்கு வந்து எப்படியோ படிச்சு முடிச்சு,நர்ஸிங் வேலையிலும் சேர்ந்து இப்போதைக்கு ஓரளவுக்கு நல்லபடியாகவே இருக்கிறாள்..

பெத்த கடனுக்காக அம்மாவையும் நல்லபடியாய் கவனித்து அவளை பழைய நிலைமைக்கு கொண்டு வந்து விட்டாள்.சுயமாக சம்பாதிக்கிறாள்,இப்போது யாரையும் சாராமல் அவளால் வாழ முடியும். இருந்தாலும் அண்ணன் தொலைபேசியில் டார்ச்சர் செய்வதை அவளால் சமாளிக்க முடியவில்லை. ஊருக்கு சென்றால் நிச்சயம் அந்த குடிகார பன்னாடைக்கு நிச்சயம் திருமணம் செய்து விடுவான் என்ற பயத்தில் சென்னையிலேயே தங்கி விட்டாள்.

தனக்கு பிடித்தமான,மனதுக்கு நெருக்கமான குகனோடு காலமெல்லாம் கைகோர்த்து வாழ அவள் மனம் ஏங்கியது.அண்ணியின் தம்பி மற்றும் அண்ணனை நினைத்து உள்ளுக்குள் பயந்தாலும் இந்த சென்னையில் வந்து அவர்களால் என்ன செய்ய முடியும் என்ற எண்ணம் அவளுக்குள் தைரியத்தை வரவழைத்தது.

தன் மனதில் உள்ள எண்ணங்களை தன்னை போலவே எண்ணும் குகனிடம் காதலோடு சொன்னாள்.

ஒரு பெண் காதலை சொல்லி எந்த ஒரு ஆணும் மறுத்ததாய் இதுவரை வரலாறில்லை.தான் நேசித்த பெண் தானே வந்து காதலை சொல்வது குகனை பொறுத்தவரை பெருமகிழ்ச்சி தான்.

குகனும் அவள் காதலை மனதார ஏற்றுக்கொண்டதோடு மட்டுமின்றி தன் காதலையும் அவளிடத்தில் இரட்டிப்பாய் சொன்னான்.

இங்க பாரு குகன் என்னை உனக்கும் பிடிச்சிருக்கு,உன்னை எனக்கும் ரொம்ப பிடிச்சு இருக்கு.நம்ம ரெண்டு பேரோட எண்ணம்,விருப்பம் எல்லாமுமே ஒண்ணா தான் இருக்கு.நீயும்,நானும் வாழ்க்கையில காலம் முழுதும் ஒற்றுமையா,உண்மையான அன்போட நல்ல கணவன்,மனைவியா வாழணும்.ஆனா என் குடும்பத்துல நம்ம காதலை ஒத்துக்கிடறதுக்கு ஒரு சதவிகிதம் கூட சான்ஸே இல்லை அதனால நீயும் -நானும் ஏதாவது ஒரு கோயில்ல சிம்பிளா கல்யாணம் கட்டிக்கிட்டு ஒண்ணா வாழலாம்.

என் வீட்ல இருந்து பிரச்சனை வராமல் இருக்கணும்ன்னா நாம்ம இந்த சென்னையிலேயே இருந்திடலாம்.

இங்க பாரு சுகன்யா நீ ஒண்ணும் கவலைப்படாதே என் வீட்டை பொறுத்தவரைக்கும் என் அம்மா மட்டும் தான்,கண்டிப்பா எங்க அம்மா உன்னை மருமகளா ஏத்துப்பாங்க.நாம்ம கல்யாணம் முடிச்ச கையோட ரிஜிஸ்டர் ஆபிஸ்ல நம்ம கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ணிடலாம்.

சுகன்யா -குகன் நினைத்த மாதிரியே சென்னையிலுள்ள ஒரு கோயிலில் திருமணம் செய்து கொண்டனர்.குகன் திருமணத்தில் அவனது தாய் கலந்து கொண்டு இருவரையும் வாழ்த்தினாள். ஆனால் சுகன்யா வீட்டில் திருமண பேச்சை தொலைபேசியில் சொன்ன போதே அவளது தாய் வானுக்கும்,மண்ணுக்கும் குதித்தாள்.

இங்கே பாருடி அவன் வேணா சாதியில கொஞ்சம் உசந்தவனா இருக்கலாம் ஆனா அந்தஸ்த்துல அவன் பிச்சைக்காரன்டி,அந்த ஈன பயல போய் கல்யாணம் பண்ணி இருக்கியே,நாசமா போனவளே என சாபம் கொடுத்து போனை துண்டித்தாள்.

அண்ணி சொர்ணாவும்,அண்ணன் குளஞ்சியும் எதுவும் பேசாமல் போனை துண்டித்தனர்.

தன் குடும்ப நபர்களுக்கு தனி,தனியாய் போன் செய்தும் தன் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் இப்படி நடந்து கொள்கின்றனரே என வருத்தப்பட்டாள் சுகன்யா.

சில மாதங்கள் கடந்தன.

இப்போது சுகன்யா நான்கு மாத கர்ப்பவதியாக இருக்கிறாள்.குகன் தாய்க்கு மேலாக அவளை பார்த்து கொண்டான்.

அப்போது சுகன்யாவின் போன் ஒலித்தது.

ஹலோ

சுகன்யா நான் அண்ணன் குளஞ்சி பேசுறேன்ம்மா,மனசுல எதுவும் வச்சுக்காதே உன் மேல அண்ணனுக்கு துளியும் கோபமில்லை.ஒரு அண்ணனா உனக்கு செய்ய வேண்டிய சீர்வரிசை கடமை இருக்கும்மா.நீயும்,மாப்பிள்ளையும் விருந்துக்கு ஊருக்கு வாங்க

அண்ணா அதெல்லாம் நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம்ன்னா.நீங்களும்,நம்ம குடும்பமும் நல்லா இருந்தாலே போதும்.என் வீட்டுக்காரர் கூட எதையும் எதிர்பார்க்க மாட்டார் அண்ணா

இங்க பாரும்மா மாப்பிள்ளைக்கு நம்ம வீட்டு சொந்தக்காரங்க எல்லாம் தெரிய வேணாம்மா.இன்னும் எத்தனை காலத்துக்கு தான் வீம்பு பிடிச்சுக்கிட்டு அந்த சென்னையிலேயே இருப்ப.தீபாவளிக்கு முன்னாடி நீயும்,மாப்பிள்ளையும் நம்ம வீட்டு விருந்துக்கு வர்றீங்க.அண்ணன் உனக்கு கழுத்துக்கு நெக்லெஸ்சும்,கைகளுக்கு வளையலும்,காலுக்கு கொலுசும் வாங்கி வச்சு இருக்கேன்மா.உன் மேல அண்ணனுக்கு துளி கூட கோபமில்லை.அம்மா முன்னாடி உன்னை திட்டிக்கிட்டு கிடந்திச்சு,இப்ப

அம்மா கூட உன்னை பார்க்கணும்ன்னு சொல்லுதம்மா.

எங்க கோபமெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்க போகுது.நீ ஒரு மருமகனையோ,மருமகளையோ பெத்து கொடுத்தா எல்லாம் கோபமும் சீக்கிரத்துல எல்லாருக்கும் குறைஞ்சிட போகுது.இன்னொரு ஜென்மம் நீயும் -நானும் அண்ணன் தங்கச்சியாவா பொறக்க போறோம்.இந்த ஜென்மத்துலேயே எல்லாத்தையும் மறந்திட்டு ஒற்றுமையா அன்பா இருப்போம்மா.அண்ணன் மனசுல உள்ளதை எல்லாத்தையும் உன்கிட்ட கொட்டிட்டேன் அதனால அண்ணன் சொல்லுறதுக்கு மறு வார்த்தை பேசாம கண்டிப்பா விருந்துக்கு வரணும்மா என்று சொல்லி போனை வைத்தான்.

தான் கர்ப்பமான செய்தியை ஊருக்கு போகும் போது சொன்னால் குடும்பத்தாரின் ஒட்டு மொத்த கோபமும் குறைந்து விடும் என்று நம்பினாள் சுகன்யா.

என்னங்க நாம்ம ரெண்டு பேரும் எங்க ஊருக்கு போறோம் என்றாள்.

குகன் மௌனமாக பதிலேதும் பேசாமல் நின்றான்.

நீங்க என்ன நினைக்குறீங்கன்னு எனக்கும் புரியுது ஆனா எங்க அண்ணனுக்கும்,எங்க குடும்பத்தாருக்கும் உங்க மீது துளி கூட கோபமில்லையாம்.அண்ணன் போனில் பேசிய எல்லா விஷயங்களையும் அவனிடத்தில் சொன்னாள்.

குகன் கொஞ்சம் ஆசுவாசப்படுத்தி கொண்டு தன் மனைவியின் விருப்பத்திற்க்காக அவளோடு ஊர் செல்ல ஒத்துக்கொண்டான்.

சென்னையிலிருந்து கும்பகோணம் செல்லும் பஸ்ஸில் ஏறினர்.ஒரு ஐந்து மணி நேர பயணத்திற்கு பிறகு முன்பு கும்பகோணத்திற்கு அருகே உள்ள அவர்கள் ஊரில் இறங்கினர்.

வீட்டிற்கு சென்றதும் அம்மா இவளை கண்டபடி பேசினாள்.உனக்கு எப்படியெல்லாம் கல்யாணம் பண்ணனும்னு கனவு கண்டேனடி,இப்படி ஊர்,பேர் தெரியாதவனை கட்டிக்கிட உனக்கு எப்படிடி

மனசு வந்தது.

இங்க பாரும்மா வீட்டுக்கு வந்த புள்ளைய கண்ட படி பேசாதே நீ வாம்மா என்று தன் தங்கையை அன்போடு அழைத்தான் குளஞ்சி.

நாட்டுக்கோழி வாங்கி வந்து இருக்கேன் மா,நீயும்,மாப்பிள்ளையும் குளிச்சு,முடிச்சிட்டு பிரஷ்ஷா வாங்க,மதியம் சாப்பிட்டு முடிச்சிட்டு விலாவரியா பேசுவோம் என்று தன் தங்கையினோடு வாஞ் சையுடன் பேசினான் குளஞ்சி.

அண்ணே என்னை மன்னிச்சிடு,அண்ணியோட தம்பிய எனக்கு பிடிக்கலை அதான் மனசுக்கு பிடிச்சவனை கட்டிக்கிட்டேன் மத்தப்படி உன் பேச்சை கேட்ககூடாதுன்னு எல்லாம் எனக்கு எண்ணமில்லை.எங்க என் காதலை சொன்னா நீ ஏத்துக்க மாட்டியோன்னு தான் சென்னையிலேயே குகனை கட்டிக்கிட்டேன்.இப்ப நான் நாலு மாசம்ன்னே.அப்பனுக்கு அப்பனா,அண்ணனுக்கு அண்ணனா என்னை மன்னிச்சு உன் மனசார வாழ்த்துன்னா.

கிறுக்கு புள்ள இதுக்கு எல்லாம் எதுக்கு மன்னிப்பு,நீ நல்லா இரும்மா என வாழ்த்தினான்.

அண்ணே அண்ணி எங்கண்ணே?

நீ என்னைக்கு உன் மனசுக்கு பிடிச்சவனை கட்டிக்கிட்டு போனியோ அன்றைக்கே ரெண்டு புள்ளைகளையும் தூக்கிக்கிட்டு அவ ஆத்தா வீட்டுக்கு போய்ட்டா அவ தம்பி கடைதெருவுல பார்த்தா பாசமா மாமான்னு பேசுவான்.நீ கல்யாணம் பண்ணதுக்கு அப்புறமும் கூட அதே காதலோட உன் மேல கிறுக்கு பிடிச்சு தான் அலையுறான் புள்ள.

அவள் மௌனமாய் அந்த இடத்தை விட்டு கடந்து சென்றாள்.

மதியம் குளஞ்சி,மாப்பிள்ளை குகன்,சுகன்யா மூவரும் நல்லபடியாக சிரித்து மகிழ்ந்து உண்டனர்.

வயிறு நிறைய மனசு நிறைய உண்டனர்.தன் அண்ணன் தன்னை மன்னித்து விட்டான் என முழுமையாக நம்பினாள் சுகன்யா.

மாப்பிள்ளை வாங்க கடை தெரு போயிட்டு வெத்தலை பாக்கு வாங்கி சாப்பிடுவோம்.நாம்ம சாப்பிட்ட நாட்டுக்கோழி சீக்கிரம் செரிமானம் ஆகணும் இல்லையா,சாயங்காலம் அணைக்கரை இறால் வேற வரும் நைட்டு இதுபோல சாப்பிடணும் இல்லையா அதனாலே கொஞ்சம் காலார நடந்திட்டு வருவோம் என அவனை அழைத்தான்..

குளஞ்சி முன்னே சென்றான் பின்னே குகன் வந்தான் அவன் வாசல் படியை தாண்டும் முன்பே குளஞ்சியின் அருவாள் அவன் கழுத்தை பதம் பார்த்தது அவன் துடிக்கும் போதே இன்னொரு கரங்கள் அவன் கழுத்தை துண்டாய்யாக்கியது.

யோவ் மாமா இப்ப தான்யா நீ என் உண்மையான மாமா.என் அக்கா உன் தங்கச்சியையும் இது போல கொடூரமா பொளந்து போட்டதுக்கு அப்புறம் உன்னோடு வந்து வாழுவா.

அட பாவி பசங்களா இப்படி நம்ப வச்சு சின்ன புள்ளைங்கள கழுத்தறுத்துடீங்களே ஏண்டி நீயாவது இந்த பாவி பசங்க கிட்ட இருந்து தப்பிச்சு போய் வாழுடி என்று கத்தி கொண்டே வாசல் கதவை தாழிட்டாள் சுகன்யாவின் தாய்.தன் கணவன் கழுத்து துண்டாய் போன நிலைமையில்,இரத்த வெள்ளத்தில் கண்டவுடன் அலறித்துடித்தாள்.

உத்தமனும்,குளஞ்சியும் கதவை இடித்தனர்.

டே மாப்ள இந்த நாய்ய தான் கழுத்தை அறுத்தாச்சுலே அவள விட்டிடுடா

யோவ் மாமா நீ கடைசி நேரத்துல இப்படி பேசுவேன்னு தெரியும் அதனால இந்த கஞ்சாவை இழுத்திட்டு வா,இந்த பந்த பாசமெல்லாம் உன் கண்ணுக்கு தெரியாது.

இந்த அவுசாரி முண்டை மேல உள்ள பாசத்தால எங்கே இவளை கொல்லாம விட்டிடுவோன்னு பயந்துக்கிட்டு நாலு ட்ரிப் கஞ்சா இழுத்துக்கிட்டு வந்து இருக்கேன்.இவனைனாச்சும் கழுத்தை தான் வெட்டுனோம் ஆனா உங்க தங்கச்சி குச்சிக்காரியை என் ஆத்திரம் தீர கண்டம்,துண்டமா வெட்டினா தான் என் மனசு ஆறும்.

மிருகத்தனமாய் கதவை இடித்து தள்ளினர்.தனக்காக இல்லையென்றாலும் தன் வயிற்றில் உள்ள குழந்தைக்காக பின் கொல்லை வழியாக வந்து சுவற்றில் ஏறி,தாவி குதித்து பஸ் போகும் மெயின் ரோட்டுக்கு அழுது கொண்டே ஓடினாள்.

வெறி கொண்ட கழுகின் பார்வைக்கு இரை தப்பாது என்பார்கள்.மனித உயிர் குடிக்க துடிக்கும் மிருகத்தின் கைகளில் ஒரு வழியாய் அந்த பெண் மான் சிக்கியது.

அவளின் நீளமான கூந்தலை அருவாளால் அறுத்து எறிந்தது,முடி போன போதும் வயிற்றில் இருக்கும் குழந்தை உயிர் காக்க மிருகங்களின் காலில் விழுந்து மண்டியிட்டு உயிர்பிச்சை கேட்டாள்.

இரக்கமில்லாத இரண்டு மிருகங்கள் அவள் முதுகில் இரண்டு வெட்டு,கழுத்தில் ஒன்று,வயிற்றில் ஒன்று என்று ஆட்டை அறுப்பது போல கொடூரமாய் வெட்டி கொன்றது.இறுதியாய் அவள் உயிர் போகும் தருணத்தில் அவள் முகம் நோக்கி முத்தத்தை தந்தான் உத்தமன் என்ற மனித மிருகம்.

மேப்பில் அந்த ஊர் பெயரை தேடினாலே கிடைக்காது அப்படி பட்ட பெயர் தெரியாத அந்த கிராமத்தை ஊர் முழுக்க மட்டுமல்ல உலகம் முழுக்க அவப்பெயரை வாங்குமளவுக்கு வரலாற்றில் ஒரு கருப்பு புள்ளியை வைத்து விட்டது அந்த இரண்டு மிருகங்கள்.

அந்த இரு உயிர்களின் சிதறிய உடல்கள் தான் இரண்டு வாரத்திற்கு எல்லா டிவி மீடியாக்களின் டி.ஆர்.பி தீனி.

பணம்,காசு,அந்தஸ்து,சாதி,மதம்,மொழி,இனம் இவை மட்டுமல்ல காதல் என்றாலும் சில மனித ஜென்மங்களுக்கு பிரச்சனை தான் போலிருக்கு.




● இளையவன் சிவா

*நதியின்*
*பிம்பத்தில் நாணல்கள்*
*வளைகின்றன.*
*நீள்மலைகள் துண்டுகளெனப்*
*பிரிகின்றன.*
*கரையோரத் தென்னைகள்*
*கைகளில் சிக்குகின்றன.*
*அலையாடும் படகெல்லாம்*
*ஆட்டத்தில் மிதக்கின்றன.*
*உதிக்கும் சூரியன்*
*கொதிப்பைக் குளிப்பாட்டி*
*நதியை வெளிச்சமூட்டுகிறான்.*
*ஒவ்வொரு துளியிலும்*
*பால்யத்தில்*
*என்னை உயிர்ப்பித்த*
*நதி*
*நீர்ச்சங்கிலி பிளவுண்டு*
*மணல் வயிறை*
*விரித்தபடி*
*பாலைவனத்தின்*
*தலைப்பிள்ளையென*
*மரணித்துக் கிடக்கிறது இப்போது.*

● க. புனிதன்

# விளையாட்டு

புல்லாங்குழல் வாசித்தபடி
ஆநிரை மேய்த்த
மாயோனை போலவும்
இளைத்த குட்டியை
தோள் மீது போட்டு கொண்ட
தேவனின் அன்பை போலவும்
கொழுந்து புல் தரும் போது
ஆட்டுக்குட்டி மேல் தட்டானையும்
ஆநிரைக்கு
நீர் காட்டும் போது
தாழியில் வானத்தையும் ரசிக்கும்
மகனின் விளையாட்டையே
தாயும் விரும்புகிறாள்



● கவிஜி

## அனிச்ச மலர் ஆக்கம்

எலி வால் அளவே
என் வாழ்வு
துளி வானம் போதும்
என் மீது
தனக்குள் தான் காணுதல்
கவிதைக்கு தாள் தீருதல்
உள்ளே வெகு தூரம் கடக்க
வெளியே சிறு தூறல் கவனி
மிகு புனைவுக்குள்
பழங் கண்ணாடி
உடைத்துடைத்து விளையாடும்
எம் நவீனம்
அனிச்ச மலர் ஆக்கம்
அடிமனதில்
அப்படியே சொல்கிறேன்
எழுதி பார்க்க இனியும் இருக்கு
சிறகு பொருத்து
இனிக்கும் கிறுக்கு

● ரகுநாத் வ, மதுரை


## கடவுளின் கடைசிப் பயணச்சீட்டு

உப்பிற்கு கடல்
மிச்சமிருந்தாலும் சக்கரைக்கு
நிலமில்லையென்கிறது நிலம்
ஒழுக்கம் உயிரெனில்
அழகில் விளையாத காமம் வினவுகிறது காதல்
விற்காத பூவின் மொழி
கொடி மலரிடம்
அவிழாமல் இருத்தலை
உரைக்கிறது
உலகத்தரம் வாய்ந்த உள்ளாடை மனதன்றி
வேறென்ன
பசி புராணம்
வாசிக்காதவர்கள்
பொன்னியின்
செல்வனைத் திணிக்கிறார்கள்
இவ்வாறே கடவுளிடம்
கடைசிப் பயணச்சீட்டை நீட்டியவர்கள்
எதையும் எதிர்ப்பார்ப்பது இல்லை.


● பாரியன்பன் நாகராஜன்

## இருத்தல்

இருள் கிழிய
அடிவானில் வெளிச்சமப்ப
பசியின் கரும்புள்ளியழிய
யுத்தம் துவங்கியதை
இனிதாய் இசைக்குமொரு
குயில்.
வாழத் தெரியாதவர்களும்
தகுதியற்றவர்களும்
அடிமை விலங்கு அறுபட
விவாதப் பெருக்கில் விம்மியெழ
விதி நெருப்பு வீறிட்டெரிய
உலை கொதிக்கப் பட்டினி வயிறு
பசியடங்கப் பூரணமாய்
விடியுமந்த கிழக்கு.
தவணை முறையில்
செலுத்தினாலும் தீராது
அது ஆயுளுக்கும் அடையாது
கிழட்டுக் காற்றின் உயிர்க் கடன்.
அமைதியைப் பானமாக்கியருந்திய
காற்றற்ற இதயத்தில்
இனி இருக்காது ஓட்டைகள்.
போதையில் விழ்ந்தவனின்
மொழியும்
புத்தி பேதலிப்பில் வாழ்பவனின்
மொழியும்
ஒன்றில் ஒன்றாக
அவனைப் போல இவனும்
இவனைப் போல அவனும்
இருக்கின்றன வரை
ஆறாமறிவைத் துச்சமாக்கி
பைத்தியமாய் இருந்து கொள்ள
இரக்கமற்று இசைகிறது
இப்பாழ் உலகு.



● பொன். குமார்



# உரைநடைக் கவிதை - ஓர் அலசல்

கவிதையின் வடிவம் காலம் காலமாய் மாறியே வந்துள்ளது. புதிது புதிதாய்ப் பரிணாமத்தையும் பெற்றே வந்துள்ளது. வடிவமாறுதலே வளர்ச்சி எனவும் அனுமானிக்கப் படுகிறது. தொடக்கம் முதல் தற்காலம் வரையிலான கவிதை உருமாற்றங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமகிறது. இருபதாம் நூற்றாண்டிலேயே கவிதை என்னும் சொல் பயன்பாட்டுக்கு வந்தது. தொடக்கம் செய்யுளே. சங்க காலமே செய்யுளின் தொடக்கம். பாடல் எனவும் அழைக்கப்பட்டது. ஆசிரியம்,விருத்தம்,கலி,பரி என்று திட்டமிட்ட வடிவங்களில் செய்யுள்கள் இயற்றப்பட்டன. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்களாகும். அகமும் புறமும் என இருவகைப்பட்டது.

அறுகுணத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்

உறுமிடத் ததுவா துவர்நில மூட்டியும்

வரையா மரபின் மாரி போலக்

கடாசு யானைக் கழற்கால் பேகன்

கொடைமடம் படுத லல்லது

படைமடம் படான்பிறர் படைமயக் குதிரை

இது புறநானூற்றுப்பாடல். எழுதியவர் பரணர். இலக்கண அடிப்படையில் எழுதப்பட்டது. சங்ககால வடிவத்துக்கு சான்று. தொடர்ந்து நீதி இலக்கியம், காப்பியம், பக்தி இலக்கியம் என பற்பல வடிவங்களில் செய்யுள்கள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. சிற்றிலக்கயத்தின் காலம் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முந்தையது ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை நீடித்தாலும் இலக்கணத்துக்குட் பட்டு இருந்தாலும் வடிவங்கள் பலவாயிருந்தன. ஒரு வரி(ஆத்திச்சூடி), இரு வரி(திருக்குறள்), மூவரி (மூவடி) நாவரி (நாலடி) என ஒவ்வொரு புலவரும் ஒவ்வொரு மாதிரி எழுதி இருந்தனர். இவை மரபு.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கவிதையின் பயணத்தில், அதன் வடிவத்தில் மாறுதல் ஏற்பட்டது. 'கால வேகத்தில் மாறுதல் கவிதைக் துறையில் இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாமம் இது' என்கிறார்'புதுக்கவிதைத் தோற்றமும் வளர்ச்சியும்' நூலில் வல்லிக்கண்ணன். யாப்புகளிலிருந்து கவிதை மீறியிருந்ததால் 'யாப்பில்லாக் கவிதை' என்றே அழைக்கப்பட்டது. வசன நடையில் இருந்தால் 'வசனக் கவிதை' என்றும் கூறப்பட்டு வந்தது. மகாகவி பாரதியோ 'புதுக்கவிதை' என்ற பெயரோட தன் கவிப்பயணத்தைத் தொடங்கியுள்ளார்

சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது

சொற் புதிது, சோதி மிக்க

நவ கவிதை

என்பது கவிதையைப் பற்றிய கவிதையானாலும் பாரதி தந்த புதுவடிவமாக கவிதையைக் காண முடிகிறது. 1930களில் ந. பிச்சமூர்த்தியின் வரவால் வடிவம் சற்று மாறுபட்டது.

இருளின் மடல்கள் குவிந்தன

வானத்து ஜவந்திகள் மின்னின

காவிரி நாணல்கள் காற்றில் மயங்கின

மேற்கே கடலலையின் ஓயாத மூச்சு

காலன் செய் சூளுக்மத்தில் உடல் நெய்யாகும் காட்சி

கிழக்கே பெண்களின் மட்டற்ற பேச்சு

கட்டற்ற சிரிப்பு

காவிரி மணலில் குழந்தைகள் கொம்மாளம் என

அழகியலாக வடிவம் கொண்டிருந்தாலும் வசன கவிதையாகவே வகைப்படுத்தப்பட்டது. வசன கவிதையை விமாப்சனம் செய்து க. நா. சு. எழுதிய ஒரு 'வசன கவிதை'

எதுகையும் மோனையும்

வேண்டவே வேண்டாம்

சீரும் கீரும்

சுத்த சனியன்கள்

*வெண்பாவும் கிண்பாவும்*

*விருத்தமும் திருத்தமும்*

*வேண்டாத தொல்லைகள்*

*மட மடவென்றும்*

*கட கட வென்றும்*

*மள மள வென்றும்*

*வசன கவிதை*

*எழுதித் தள்ளுவோம்*

*'ததாஸ்து'*

வசன கவிதை என்னும் தலைப்பிலேயே எழுதப்பட்ட வசன கவிதையானாலும் இதுவொரு வடிவமாகவே இருந்தது. 1959ம் ஆண்டு சி. சு. செல்லப்பாவின் 'எழுத்து' இதழ் தொடங்கிய பிறகே 'புதுக்கவிதை' என்னும் பதம் பயன்படுத்தப்பட்டது.

*வேலிகட்டா வானத்தில்*

*வெள்ளிப்பயிர் வளர்க்க*

*தாலிகட்டிக் சக்தியினை*

*ஈர்ப்பென்ற நீர்பாய்ச்சிக்*

*காலமெல்லாம் காத்திருக்க*

*வைத்துவிட்டாய், வைத்துமென்ன?*

*ஊழியென்ற பட்சி அவள்*

*அமர்ந்திருக்கும் வேளையிலே*

*வேலிகட்டா வானத்தில்*

*வெள்ளி விதைகளெல்லாம்*

*அள்ளி விழுங்கும்வரை*

*நீர்பாய்ச்சி என்ன பயன்*

*வேர்முளைக்கக் காணாமே என*

தரும சிவராமு எழுதியது புதுக்கவிதையில் குறிப்பிடத்தக்கது. புதுக்கவிதை வரலாற்றப்ல் ஒரு திருப்பு முனை ஏற்படுத்திய காலம் கட்டம் இது. 1970களில் கசடதபற,வானம்பாடி என்னும் இரு இதழ்கள் புதுக்கவிதைக்கு ஓர் உத்வேகத்தை, ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தின. இரண்டின் போக்கும் வேறு வேறானாலும் புதுக்கவிதையை முன்னெடுத்துச் சென்றது என்பது சுட்டத்தக்கது

*இமயச் சிகரங்களின் வெண்புதர் புற்றுகளில்*

*சில்லென்று தலைநிமிர்ந்தும் பணிப்பாம்புகளில்*

*பிளவுண்ட நாலுனிகளின் விவக்ஷக்கடிகளால்*

*இந்த தேசத்தின் தேகம் நீலம் பாரித்துப்போன*

*ஒரு மயக்க இருள் தழுவிய முயக்கத்தில்*

*இந்த மண்ணின் ஆத்மா உறைந்துவிட்ட*

ஒரு மரணநிழல் படிந்த முற்றத்தில்

விதவைத் தெருவின் புழுதியின் மேலே

வஞ்சிக்கப்பட்ட எம் பூமியின் மழலை

எப்படிப் படுத்திருக்கும்?

எப்படிப் படுத்திருக்கும்?

என்பது அக்னிபுத்திரனின் கவிதை. இந்நிலை நீடித்தது. புதியவர்கள் பலரை இலக்கிய உலகிற்கு கொண்டு வந்தது. புதுக்விதையே பின்னர் உள்ளடக்கத்தில் மாறுபட்டு பல புதிய புதிய வடிவங்களில் படைக்கப்பட்டு நவீறின கவிதை என பெயர் பெற்றது. நவீனத்துவம் தொடர்ந்து பின் நவீனத்துவமும் வந்தது. இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் புதுக்கவிதையின் பயணம் தொடர்கிறது என்பது அதன் ஆற்றலைக் காட்டுகிறது. இக்காலகட்டத்தொடந்து எழுதப்பட்ட கவிதைகள் சில நவீன கவிதை என அடையாளப்படுத்தப்பட்டன. வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் ஒரு புதுயுத்தியைக் கையாண்டிருந்தன.

க்ளினிக் வாசலில்

கடைசியைக் காக்கா

கொத்தக் கொத்த அண்ணாந்து

சாகக்கிடந்த அந்தக்

கழுதை

கயிறு கட்டி அவன்

ஆத்துக்கு

இழுத்துப்போகையில்

கண்ணுருட்டிய பரிதவிப்பை

எழுதவும்

க்ளினிக் வராண்டாவில்

எல்லை குறித்த

சிந்தனையைத் தூண்டி

தொப்புள் மறைத்துச்

சொருகிய அந்த

பேனாவைத் தொட்டு

எழுத தருவாளா

அந்த நர்ஸ்

என்பது கவிஞர் திருமேனி எழுதிய ஒரு நவீனக்கவிதை. இடம் பெற்ற இதழ் நவீன கவிதை 1.

இலக்கிய வகைகளில் கவிதைக்கே முதன்மையான இடம் எனினும் புதுக்கவிதைக்கு முன்னரே தோன்றியது உரைநடை. மரபுக்கவிதை ஆட்சிப் பெற்றிருந்த கால கட்டத்திலேயே உரைநடை இலக்கிய உலகத்தில் புகுந்து தன் இலக்கியப்பங்களிப்பைத் தொடர்ந்தது. 1950களில் உரைநடை வடிவத்தில் சிறுகதையே முன்பு படைக்கப்பட்டது. பின்பு நாவல் தொடர்ந்து கட்டுரைகளும் உரைநடை வகையில் உருவானது. முதல் சிறுகதை ஆசிரியர் சு. சதாசிவம் பிள்ளை. முதல் நாவலாசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. உரைநடைக்கும் வசனகவிதைக்கும் ஐம்பது ஆண்டுகள் வித்தியாசம். இன்று கவிதை உலகில்

ஒரு புதுமை ஏற்பட்டுள்ளது. ஒரு புது அத்தியாயம் தொடங்கியுள்ளது. 'உரை நடைக்கவிதை' என்னும் ஒரு புதிய கவிதை மரபு. ஒரு புதிய வடிவம் இலக்கிய உலகில் அறிமுகமாகி கவனிப்பைப் பெற்றுள்ளது.

அது கோடைக்காலம். வாதமரத்தின் கீழ்,இருவர் பேசியபடி,

இலைகளில் மாலைவேளை மறைந்து வருகிறது. இரவு, அவள்

வீட்டில் காத்திருக்கிறது. அவன் பார்க்கிறான். காலையில்

அந்தியைக் கரைத்தபடி அவள் பிரிந்து செல்கிறாள். அவன்

பிதற்றுகிறான். வாதமரத்தின் பழுத்த இலைகள உதிர்கின்றன.

அவன் இதயம் படபடக்கிறது. அவளின் நீண்ட நிழலைத் தீண்ட

பழுப்பு இலைகள் பரபரத்து ஓடுகின்றன. அதன் மேல் நரம்புகளாகி,

காமத்தில் அவன் வார்த்தைகள் பைத்தியம் பிடித்த படி ப்றக்கின்றன.

இந்த உரைநடைக்கவிதையின் தலைப்பு 'காமத்துவ இலைகள்'. எழுதியவர் ராணி திலக் (புதிய பார்வை - 16- 31 டிசம்பர் 2004).

கவிஞர் ரிவஷியின் ஓர் உரைநடைக்கவிதை.

ஒரு நீண்ட நடைப்பணத்திலிருந்து அப்பொழுதுதான் மீண்டு

வந்திருந்தாள். பாப்வோடு தலைகோதி வரவேற்று களைபாற்றத்

தெரியவிலலை அவனுக்கு. வருத்தம்தான் அவளுக்கு, என்றாலும்

அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அதே நாளில்

வேறொருவருக்கு அவன் விருந்துபசரித்ததை அறிந்தும்

ஆத்திமடையவிலையென்றால் அவனைப் போலவே அவளும்

அசட்டை செய்வதர்கத்தானே ஆகிவிடும்? - என்று தர்க்கம்

செய்யும் மனதின் துக்க நீலம் பாய்த்து தொண்டக்குள் சிக்கி நிற்கும்

இறந்த காலம்.

இதற்கு தலைப்பில்லை (புதியபார்வை. அக் 1. 15. 2005)

மழை பொழிந்ததன் விளைவாய் குழல் விளக்கைச் சுற்றி மொய்க்கின்றன விதமாய் பூச்சிகள். உணவில் நீரில் வந்து விழுகினற்ன விசிறி சுழல.. தொலைக்காட்சித் திரையில் பிம்பம் மறைக்கின்றன. ப்'க்ய்ங் கென்று ரீங்கரித்து காதருகில் பாடுகின்றன அபஸ்வரங்களாய்.... எங்கே போனது? வழக்கமாய் வளைய வரும் வீட்டுப்பல்லி.

அய்யோ பூச்சிகள் பூச்சிகள்...

பல்லிக்கும் பூச்சிக்கும்

இடையில்

கண்ணாடி ஜன்னல் என்னும் ஹைபுன் உரைடையில் தொடங்கி ஹைக்கூவில் முடியும் ஒரு வடிவமாக உள்ளது. உரைநடையே எனினும் இறுதியில் ஹைக்கூவே உச்சம். (நறுமுகை - அன்பதாவன்)

உரைநடைக்கவிதைகளை இயற்றி வருபவர்கள் ராணி திலக், ரிவஷி போன்ற ஓரிருவரே. இந்தக் கவிதைகளை வெளியிடுபவை புதியபார்வை, காலச்சுவடு போன்ற ஓரிரு சிற்றிதழ்களே. இவைகள் வடிவத்தில் உரைநடையாகவே உள்ளன. கவிதைக்கான பொருள் உள்ளது. ஆனால் கவிதையாக இல்லை. புதுக்கவிதையையே மரபுக்கவிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. 'உரைவீச்சு' என விமர்சிக்கின்றனர்.

இந்நிலையில் கவிதையே உரைடையாக உரைநடைக்கவிதை என வருவது பரிசீலனைக்குரியது. ஓரிருவர் தவிர, ஓரிரு சிற்றிதழ்கள் தவிர உரைநடைக் கவிதையைத் தொடராதது அதற்கு வரவேற்பில்லை எனக் காட்டுகிறது.

தார்த்தாரிப்

பரந்த

புல்

வெளியிலே

பல்

லாயிரம்

பெண்

பாப்கள்

தொடர

நிமிர்ந்து

நடை

போட்ட

தொல்

காப்பியம்

பேசும்

என க. நா. சு. வும்

சனித்து விட்டது

மினியுகம், ஒழிந்தது

நனி பெரும் மனிதர் கொற்றம்

இனி

மினி மக்கள் காலம்

மணி தனை விட்டு

மினி தனைப் பாடு போற்று

குனி என் பேச்சைக் கேள் ஏ

னெனி லெனக்குத் தெரியும் நானொரு

மினி மேதை

என சி. மணியும்

கவிதை வடிவங்களில் சோதனை முயற்சிச் செய்தனர். ஆனால் சோதனை முயற்சிகள் தொடரவில்லை. உரைநடைக்கவிதை கவிதையில் ஒரு சோதனை முயற்சி என்றளவில் ஏற்றுக்கொள்ள முடிகிறதே தவிர தொடர்வதற்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. கவிதையில் சோதனை முயற்சி கவிதைக்கே சோதனையாகி விடக்கூடாது.

● த. நரேஸ் நியூட்டன்




# உலக நாயகனின் 'விக்ரம்' திரைப்படம் இந்திய தமிழ் திரைத்துறையில் மற்றொரு பரிணாமம்

## அறிமுகம் (Introduction)

*கமல் ரசிகர்களின் நீண்ட கால எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் கடந்த ஆனி மாதம் 3ஆம் திகதியன்று உலகம் பூராக உள்ள பல திரயரங்குகளில் வெளிவந்த திரைப்படம் உலக நாயகன் கமல்ஹாசன் நடிப்பில் உருவான 'விக்ரம்' திரைப்படம். இந்த திரைப்படம் வெளி வந்ததைத் தொடர்ந்து பல்வேறு விமர்சகர்களால் இப்படத்திற்கான திறனாய்வுகள் வெளியிடப்பட்டு வருவது நாம் அறிந்ததே. அவர்களைப்போலவே நானும் இந்தப்படத்திற்கான திறனாய்வு ஒன்றை எழுதும்பொருட்டு எடுத்த முயற்சியின் வெளிப்பாடே இந்த கட்டுரை. சாதாரணமாக ஒரு படத்தை முதல் காட்சியிலேயே பார்க்க வேண்டும் என்ற எண்ணம் சில படங்களுக்குதான் ஏற்படும். அவ்வாறான எண்ணம் இந்தப்படத்தின் மீதும் ஏற்பபட்டதால் முதல் நாள் முதல் காட்சியை நீண்ட நாட்களுக்கு முன் முன் பதிவு செய்து பார்த்துவிட்டு வெளியே வந்தால் எப்படியும் மீண்டும் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மனதை உறுத்தி;கொண்டிருக்க*

இரண்டாவது மூன்றாவது தடவையும் பார்த்துவிட்டேன். இதற்கு முன் இப்படி அடுத்தடுத்து மூன்று தடவை எந்தப்படத்தையும் பார்த்ததில்லை. இதுவே முதற் தடவை ஆனாலும் இன்னும் ஒரு தடவை பார்க்கக் கிடைத்தால் பார்த்துவிடவேண்டும் என்ற ஆதங்கம் இன்னும் மனதில் உள்ளது. இந்த ஒரு விடயமே படம் எப்பேற்பட்டது என்பதை கட்டியம் கூறிவிடும். இருந்தாலும் இன்னும் சற்று ஆளமாக படத்திற்குள் புகுந்து படம் பற்றிய பல விடயங்களை ஆய்ந்து இந்த கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

## திரைப்படக்குழு (Film Team)

### பிரதான குழு (Main Team)

முதலில் திரைப்படத்தில் முக்கிய பங்காற்றிய திரைப்படக்குழுவில் அங்கம் வகித்தவர்கள் யார் யார் எனப்பார்த்தால், இந்தப் படத்தை கமலஹாசன் தனது 'ராஜ்கமல் பிலிம் இன்டர்நசனல்' (சுயதமயஅயட குடைஅ ஐவெநசயெவழையெட) என்ற திரைப்படத் தயாரிப்பு விநியோக நிறுவனத்துக்கூடாக தயாரித்திருக்கிறார். படத்திற்கான திரைக்கதை வசனம் எழுதி படத்தை இயக்கியிருப்பவர் படிப்படையாக தனது திரைத்துறைத் திறணை சிறப்பாக வெளிப்படுத்திவரும் லோகேஸ் கனகராஜ். இந்த திரப்படத்திற்கான இசையை வழங்கியிருப்பவர் அனிருத் ரவிச்சந்திரன். கிரிஸ் கங்காதரன் ஒளிப்பதிவாளராகவும் பிலோமின் ராஜ் படத்தொகுப்பாளராகவும் செயற்பட்டுள்ளனர். இந்த படத்தினுடைய விநியோகத்தை ரெட் ஜெயன்ட் மூவீஸ் சார்பில் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டுள்ளார். விஸ்ணு இடவன் மற்றும் ஹைசன்பேர்க் ஆகியோர் பாடலாசிரியர்களாகவும் ரவி ஜி பாடகராகவும் ஈடுபட்டுள்ள அதேவேளை இவர்களுடன் இணைந்து கமல்ஹாசன் அவர்களும் பாடலாசிரியராகவும் பாடகராகவும் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### நடிகர்கள் குழாம் (Artists)

விக்ரம் திரைப்படத்தில் கதாநாயகனாக அருண்குமார் பின்பு விக்ரமாக அடையாளப்படுத்தப்படும் பிரதான பாத்திரமேற்று நடித்திருப்பவர் கமல்ஹாசன். கொலைகாரர்களை அடையாளம் காணும்பொருட்டு பொலிசாரால் நியமிக்கப்பட்ட பிளக் ஸ்குவாட் (ஙிறீணீநீளீ ஷிஹீஹிணீபீ) ஆய்வு அமைப்பின் பொறுப்பாளராக அமர் என்ற பாத்திரமேற்று பஹத் பாசில் நடித்துள்ளார். இந்தப்படத்தின் நேரடியான வில்லனாக சந்தானம் என்ற வேடமேற்றுள்ளார் விஜய்சேதுபதி. கௌரவ வேடம் என்று குறிப்பிடப்பட்டாலும் மிகப்பிரதானமான வேடம் இவருடையது என்ற பிம்பத்தை ரசிகர்களிடம் தோற்றுவித்த றொலக்ஸ் என்ற பாத்திரத்தில் சூரியாவும் இதேபோல வீட்டில் வேலைக்காரியாக டீனா என்ற பாத்திரத்தில் ரசிகர்கள் மனதில் அதிர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக நடித்திருக்கும் மற்றொருவர் வசந்தி. இவர்களுடன் காளிதாஸ் ஜெயராம், நரைன், அர்ஜூன்தாஸ், ஷிவானி நாராயணன், காயத்திரி சங்கர், சந்தான பாரதி, மாயா என்று ஒரு பெரும் நடிகர் பட்டாளமே இத் திரைப்படத்தில் நடிகர்களாக தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

### கதைச்சுருக்கம் (Story)

விக்ரம் திரைப்படத்தின் கதை மிகவும் வித்தியசமான கோணத்தில் கருவை மையப்படுத்தியதாக தொகுக்கப்பட்டுள்ளது. அதாவது ஏற்கனவே ஒரு குழுவினால் மற்றொரு போதைப்பொருள் கடத்தல் குழுவிற்கு சொந்தமான போதைப்பொருள் கடத்தப்படடுள்ளது. அதை யார் கடத்தினார்கள் அது எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பதை தேடி படத்தின் நேரடி வில்லன் தனது தேடலை ஆரம்பிக்கிறான். இந்த வில்லன் தான் விஜய்சேதுபதி தனது மூன்று மவீவிகளுடன் குதூகலமாக வாழ்க்கை நடாத்துவதோடு மிகப்பெரிய போதைப்பொருள் வலையமைப்பை உருவாக்கி வர்த்தகத்தில் ஈடுபடுபவன் இவன். அந்த போதைப்பொருள் கடத்தல் குழாமை பிடித்து கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடும் பொலிஸ் குழாமின் முக்கியஸ்தர்களை ஒரு முகமூடிக் கும்பல் கொலை செய்து அதனை ஒளிப்படாமாக்கி பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கிறது. இதில் கொல்லப்படுபவர்களில் முக்கியமானவர்களாக காண்பிக்கப்படுபவர்களில் ஒருவர் கமலின் வளர்ப்பு மகன் அதாவது கமலை தந்தையாக தத்தெடுத்தவர் மற்றொருவர் பொலிஸ் அல்லாத படத்தின் கதாநாயகனான கமல். இந்த கொலைகளை செய்தவர்கள்

*யார், ஏன் செய்கிறார்கள், இவர்களின் பின்புலம் என்ன என்பவற்றை தேடி ஆய்வுக்காக பொலிஸ் பொறுப்பதிகாரி செம்பன் வினோத் ஜோஸ்ஜீன் வேண்டுதலுக்கமைவாக தனது குழுவுடன் புறப்படுபவர் தான் அமர் என்ற பஹத் பாசில். அவரது ஆய்வின் மூலமாக சரியான காரணங்களையும் நபர்களையும் நெருங்கும் போது எதிர் பாராத அதிர்ச்சி தரும் ஆச்சரியத்துடன் பாதிப்படம் நிறைவுக்கு வருகிறது. முதல் பாதி நிறைவில் ஏற்பட்ட ஆச்சரியங்களுக்கும் அதிர்ச்சிகளுக்கும் விடையளிப்பதாக அமைவதே படத்தின் மீதிப்பாதி. கைதி படத்தின் கதை, 1996இல் வெளிவந்த விக்ரம் படத்தின் கதை இதற்கு பின்னர் எப்படித் தொடரக்கூடும் என்பவை படக்கதையுடன் தொடர்புபடுத்தி பிணைக்கப்பட்டுள்ளன. மிக ஆழமாகச் சென்று கதையை இன்னும் தெளிவாக குறிப்பிடப்போனால் படத்தை பார்க்க செல்பவர்களின் இரசனைக்கு குந்தகம் ஏற்படும், அத்தோடு திரைப்படத் தயாரிப்பாளர்களின் எதிர்பார்ப்பாகிய அனைவரும் படத்தை திரையில் பார்க்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கு பாதிப்பு ஏற்படும் ஆகவே கதையை இத்தோடு மட்டுப்படுத்தியிருக்கிறேன்.*

## கதையின் நகர்வு (Story Movement)

*விக்ரம் படத்தின் கதையைப்பொறுத்தவரை திரைக்கதையை எழுதிய லோகேஸ் கனகராஜ் இதற்கு முன்னர் வந்த ஏனைய படங்களின் கதாசிரியர்கள் கையாளாத முறையில் கதை நகர்வை கையாண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். கதையின் பல இடங்களிலே ஆச்சரியங்களை உருவாக்கி ரசிகர்கள் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்க வேறொரு கோணத்தில் கதையை நகர்த்தியிருப்பது அவரது சிந்தனை போக்கின் புத்தாக்கத் திறனை வெளிக்கொணர்ந்திருக்கிறது. உலக நாயகனும் படத்தின் நாயகனுமான கமலை ஆரம்பத்திலேயே கொலை காரர்கள் கொலை செய்வது போல் நிதர்சனமாக காண்பிக்கும் இவர் அந்த இடத்திலேயே ரசிகர்கள் மத்தியில் முதலாவது ஆச்சரியத்தை ஆரம்பித்து வைக்கிறார். இதன் பின்னர் கொலைகாரர்களை கண்டு பிடிக்கப் புறப்படும் பிளக் ஸ்கொட் ஏஜன்ட் கொலை காரர்களை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் கையாளும் நுட்பங்களை பிரமாதமாக உள்ளே நுளைத்துள்ளார்.*

*ஏற்கனவே லோகேஸ் கனகராஜால் இயக்கப்பட்டு வெளிவந்த கைதி திரைப்படத்துடனும் 1986இல் வெளிவந்த விக்ரம் திரைப்படத்தின் கதையுடனும் இந்தக் கதையை பிணைத்திருப்பதானது அவரின் கதை கோர்ப்பு ஆளுமையை சிறப்பாக வெளிப்படுத்துகிறது. முன்பு வெளிவந்த படங்களுடன் இந்தப்படத்தின் கதையை பிணைப்பதற்கு மிக ஆழமாக சிந்தித்து தொடர்புபடுத்துவதற்காக நீண்ட காலத்தை செலவளித்திருந்தால் மட்டுமே இது கைகூடும். ஏனைய இயக்குனர்கள் வழக்கமாக கையாளும் ஒரு கதையை தொடங்கி அப்படியே அடுத்தடுத்த காட்சிகளை தொடர்ச்சியாக அடுக்கிக்கொண்டு போகும் கதைப் பாணியை கைவிட்டு பல சந்தர்ப்பங்களில் திருப்பங்களையும் ஆச்சரியங்களையும் நுளைத்து வெவ்வேறு கோணங்களில் கதையை திசை திருப்பி திசை திருப்பி நகர்த்தியிருப்பது ரசிகர்கள் படத்தினை தொய்வில்லாமலும் சோர்வில்லாமலும் உற்சாகத்துடன் தொடர்ந்து பார்ப்பதற்கு ஏதுவாக அமைந்திருக்கிறது.*

*இங்கு உள்ளே கொண்டுவரப்பட்டிருக்கும் டீனாவின் பாத்திரம் எதிர்பார்க்க முடியாத ஒரு அதிர்ச்சியை கொடுத்திருந்தாலும் பல கேள்விகளுக்கு வழிசமைத்துக் கொடுத்திருக்கிறது. அந்த வீட்டில் டீனா போன்றதோர் பாத்திரம் கொண்டுவரப்பட்டதற்கான வலுவான காரணங்களை கதைக்குள் காண முடியவில்லை. கதா நாயகன் தனது மகனுக்கும் மருமகளுக்கும் பேரப்பிள்ளைக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதற்காக அந்தப் பாத்திரம் உருவாக்கப்பட்டதா? அப்படியாயின் ஏன் மகனை காப்பாற்றுவதற்கான முனைப்புகள் காண்பிக்கப்படவில்லை? பேரனை மட்டும் பாதுகாப்பது நோக்கமாயின் கொலை செய்யப்பட்டவர் கதா நாயகனின் உண்மையான மகன் இல்லையா? இதன் பின்புலத்தில் வேறு ஏதாவது ஒரு காரணம் மறைக்கப்பட்டுள்ளதா? பேரனுக்கு இப்படியான பெரிய ஆபத்து வரும் என்பது நாயகனால் முற்கூட்டியே கணிக்கப்பட்டிருந்ததா? அதற்கான சான்றுகள் ஏன் கதையில் காண்பிக்கப்படவில்லை? கதானாயகனின் மருமகள் அவளுடைய பிள்ளையில் பெரியளவான அக்கறையோ பாசமோ காட்டாது கதை நகர்த்தப்பட்டிருப்பதில் ஏதோ ஒரு மர்மம் மறைக்கப்பட்டுள்ளதா? போன்ற பல்வேறு கேள்விகள் எழுந்துகொண்டே இருக்கிறது. இவற்றுக்கு விடைகள் இந்தப்படத்தின் அடுத்த*

பாகத்திற்காக மறைக்கப்பட்டுள்ளதா என்ற எதிர் பார்ப்பும் கதையில் தூண்டிவிடப்பட்டிருக்கிறது.

பொதுவாக நாயகன் பேரப்பிள்ளை மீது காட்டும் பாசமும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் மாபியாக்களின் செயற்பாடுகளும் அவர்களுடன் மறைமுகப் பிணைப்பில் செயற்படும் பொலிஸ் பிரதானியின் செயற்பாடுகள் பற்றிய விடயங்களும் இறுதியாக அந்த பெரிய போதைப்பொருள் மாபியாவை அடக்குவதற்கான முனைப்பில் கதாநாகன் ஈடுபடும் போக்குகளும் கதையாக நகர்த்தப்பட்டிருக்கிறது. இறுதியாக கதைக்குள் நுளைக்கப்பட்டிருப்பது மாபியாக்களின் தலைவன் றொலெக்ஸ் (சூரியா). கதையில் இவர் பற்றிய சந்தேகமும் எழாமலில்லை. இவர்தான் உண்மையான தலைவனா? அல்லது இதற்குள் ஏதாவது மர்மம் புதைக்கப்பட்டு அது அடுத்த பாகத்தில்தான் வெளிவருமா என்ற பெரும் மர்மம் சூட்சுமமாக திணிக்கப்பட்டிருக்கிறது போன்றே தோன்றுகிறது.

## பாத்திரங்களும் பாத்திரப்பகிர்வும் (Artists and role distribution)

ஒரு வித்தியாசமான கதையமைப்பை கோர்வையாக வெவ்வேறு கோணங்களில் இருந்து சம்பவங்களை தெரிவு செய்து கொண்டுவந்து அவற்றுக்குள் உறுதியான பிணைப்புக்களையும் தொடர்புகளையும் புகுத்தி கதையை அமைத்த கதாசிரியர் அந்த கதைக்கு அமைவாக பொருத்தமான கதாபாத்திரங்களையும் உருவாக்கியிருப்பதோடு அந்தப் பாத்திரங்களுக்கிடையிலான நடிப்பங்குகளையும் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் சிறப்பாகவும் பொருத்தமாகவும் தேவைக்கமைவாகவும் பொருத்தியிருக்கிறார். அதேபோலவே திரைப்படத்தில் வரும் கதாநாயகன் முதற்கொண்டு அனைத்துப் பாத்திரங்களும் தங்களது பொறுப்பை இயக்குனரின் எதிர் பார்ப்புக்கமைவாக சிறப்பாக செய்து முடித்திருக்கிறார்கள்.ஒவ்வொரு கதா பாத்திரத்திற்கும் உரிய நடிகர்கள் இயக்குனரால் சுழியோடி திரைக்கதைக்கு பொருத்தமாக கண்டு பிடிக்கப்பட்டு புகுத்தப்பட்டிருக்கிறார்கள். இங்கு அனைத்துப் பாத்திரங்களையும் கதைத் தேவைக்கேற்ப முழுமையாக அதேவேளை, சமமாக பயன்படுத்தியிருக்கிறார் இயக்குனர். கதாபாத்திரங்களின் தனித்தன்மைகள் முழுமையாக தவிர்கப்பட்டு இயக்குனரின் எதிர்பார்ப்புக்கமையவே பாத்திரங்களின் நடிபங்கு மேற்கொள்ப்பட்டிருப்பதை இந்தப் படத்தில் சிறப்புத் தன்மையாக பார்க்கலாம்.

கதா நாயன் கமலை பொறுத்தவரை அவரது தனித்தன்மையில் இயக்குனரின் இந்த செயற்பாடு எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். காரணம் கமலைப்பொறுத்தவரை மற்ற கதாநாயகர்களைப் போல் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி வைத்துக்கொண்டு அதில் தனது சுயத்தை வெளிப்படுத்துபவரல்ல மாறாக பாத்திரத்தின் தன்மைக்கேற்ப தனது சுயத்தை மாற்றிக்கொள்வதையே அவர் பெரிதாக விரும்புவதுண்டு. ஆகவே அவருடைய அந்த மனப்பாங்கு இங்கு அவருக்கு பெரியளவில் வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாத்திரத்தில் தனது நடிப்பால் ரசிகர்களை மெய் சிலிர்க்க வைத்திக்கிறார். ஒரு இளம் வயது நடிகருக்கு நிகராக தானும் இளைஞராக மாறி சகல சண்டைக்காட்சிகளிலும் தனது ஆற்றலை தொய்வின்றி தெறிக்கவிட்டிருக்கிறார். நடிப்பில் நடிகர் திலகத்திற்கு அடுத்து உலக நாயகன்தான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார்.

பாத்திரப் பகிர்வில் முதற் பாதியில் கமலை காணவில்லை என்ற பல ரசிகர்களின் தவிப்பு இந்த படத்தை பொறுத்தவரை நியாயமானதாக எனக்கு தெரியவில்லை. கதையமைப்புக்கமைவாக அவர் படத்தின் முதல் பாதியில் பல இடங்களில் வந்துள்ளார். அந்த காட்சிகள் அப்படி அமைக்கப்பட்டிருக்காவிட்டால் படத்தின் இரண்டாம் பாதி முற்றாக சோபை இழந்ததாகவே இருந்திருக்கும். இந்த வகையிலான பாத்திர அமைப்பு கையாள்கை கூட இயக்குனரின் சாதுரியமென்றே எடுத்துக்கொள்ள முடிகிறது.

சந்தானம் என்ற பெயரில் வில்லன் பாத்திரத்திரமேற்று நடித்திருக்கும் விஜய்சேதுபதி தனக்கென ஒரு நடிப்பு பாணியை உருவாக்கி வைத்துக்கொண்டு அப்படியே நடிப்பவரல்ல. அநேகமாக அவரும் கமலைப்போலவே படத்திற்கேற்ப தனது நடிப்புத் திறனை கதைக்கும் இயக்குனரின் எதிர்பார்ப்புக்கும் ஏற்ற வகையில் இயல்பாகவே உருவாக்கிக்கொள்பவர். அதனை விக்ரம் படத்திலும் கையாண்டு உலக நாயகனின் நடிப்புக்கு நிகராக தனது நடிபங்கை வழங்கியிருக்கின்றமை மிகச் சிறப்பு.

கொலை காரர்களை கண்டுபிடிக்கும் ஆய்வுப்பணியில் ஈடுபடும் பிளக் ஸ்குவாட் அமைப்பின் பிரதானியாக அமர் என்ற பெயரில் பாத்திரம் ஏற்று நடித்திருக்கும் பஹத் பாசில் ஏனைய அனைத்து

நடிகர்களுக்கும் சற்றும் சளைத்தவனல்ல என்று எண்ணும் விதமாக அவரது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருப்பது படத்தின் வெற்றிக்கு இன்னும் உரமூட்டியிருக்கிறது. இவருடைய பாத்திரம் கதைக்கருவுக்கு அமைவாக சரியான இடத்தில் மிகச் சரியாக லேகேஸினால் புகுத்தப்பட்டுள்ளது. ஒரு ஆய்வாளருக்குரித்தான சிறப்புத் தேர்ச்சி அவரிடம் இருப்பதை அவரது அபார நடிப்புத் திறன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அடுத்து பாத்திரம் மற்றும் பாத்திர பகிர்வுக்குள் ஒருவராக பங்கெடுத்துக்கொள்பவர் இப்படத்தில் டீனா என்ற பெயரில் வேலைக்காரி வேடமேற்று நடித்திருக்கும் வசந்தா. இதற்கு முன் பல படங்களில் நடனக் கலைஞராக இவரை பார்த்த ரசிகர்களிற்கு அதிர்ச்சியளிக்கும் விதத்தில் இவரது பாத்திரத்திற்குள் மிகப்பெரிய மர்மத்தை புகுத்தியிருக்கும் இயக்குனருக்கு கடுகழவு ஏமாற்றத்தைத்தானும் கொடுக்காது ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தும் விதமாகவும் இவரது நடிப்பைபற்றி விசேடமாக குறித்து பேசுமளவுக்கு தனது பாத்திரத்தை நடித்திருக்கிறார்;

மற்றொன்று இப்படத்தின் சிறப்பு பாத்திரமாக இறுதிப்பகுதியில் இயக்குனரால் உள்ளே சேர்க்கப்பட்டு யாரும் எதிர்பாராத நேரத்தில் தனது கர்ஜனையுடன் கூடிய நடிப்பால் திரையரங்கையே அதிர விட்ட சூரியாவின் றொலக்ஸ் என்ற பாத்திரம். மூன்று நிமிட காட்சி என்று சொல்லப்பட்ட போதிலும் அந்த சொற்ப நேரம் படத்தின் பெரும் பகுதியை ஆட்கொண்டது போன்று காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. இயக்குனர் மிகக் கச்சிதமாக ரசிகர்கள் மத்தியில் அடுத்த படத்திற்கான எதிர்பார்ப்புக்களை சூரியா மூலம் ஆழமாக விதைத்து வேரோடவிட்டு படத்தை நிறைவு செய்திருக்கிறார்.

கதைக்கும் காட்சிக்கும் ஏற்றாற்போலவும் அடுத்த படத்திற்கான எதிர்பார்ப்பு மற்றும் முன்னைய கைதி படத்துடனான தொடர்பு போன்றவற்றையெல்லாம் பிணைத்துவிடும் வகையில் மேலும் பல பாத்திரங்கள் இந்தப் படத்தில் புகுத்தப்பட்டு அனைவருக்கும் காட்சிகள் தேவைக்கமைவாக பகிரப்பட்டு படம் செதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் நடிபங்கை எதிர் பார்க்கைகளுக்கும் மேலே பல படிகள் முன்னேறி வெளிப்படுத்தியருப்பது மெய்ச்சப்படவேண்டியதே.

## இசையமைப்பு (Music)

படத்திற்கான பின்புல மற்றும் பாடல்களுக்கான இசையமைப்பு படத்திற்கு தற்காலத்து இளைஞர்களின் ரசனைக்கு ஏற்றாற்போல வளர்ந்துவரும் இசையமைப்பாளர் அனிருத்தினால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவரது இசையால் திரையரங்கமே அதிரும்படியாக இசையமைப்பு அமைந்திருந்தது மெய்ச்சத்தக்கது. பாடல்களுக்கும் இசையால் உரமூட்டியிருக்கிறார் அனிருத். இருப்பினும் முன்னைய விக்ரம் படத்தின் இசையுடன் ஒப்பிடுகையில் இன்னமும் பல புதுமைகளை இவர் தனது இசையமைப்பில் புகுத்துவதற்குரிய அனுபவங்களை பெறவேண்டியிருக்கிறது என்பதும் புலப்படுகிறது.

## நடனம் (Dance)

படத்தில் வரும் பாடல்களில் நடனக் காட்சியமைப்பை நடன இயக்குனர் சான்டிதான் மேற்கொண்டிருக்கிறார் என்பது பத்தல பத்தல பாடலின் நடனத்தை பார்க்கும்போதே புரிந்துகொள்ளமுடிகிறது. பொதுவாகவே கமல் நடனத்தில் சளைத்தவர் அல்ல. ஆகவே இந்தப் பாடலில் கமலுடைய சொந்த நடனமுறைமையையும் சில இடங்களில் புகுத்தியிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

## கலை இயக்கம் (Art Direction)

படத்தின் ஒவ்வொரு காட்சிக்கும் ஏற்ற முறையில் பொருத்தமான காட்சியமைப்புக்களை கலை இயக்குனர் மேற்கொண்டிருக்கிறார். மிகவும் குறிப்பிட்டுக் கூறுவதாயின் பாடல் காட்சிகள், போதைப்பொருட் கடத்தல் காரர்களின் இடங்கள், ஆய்வாளர் ஆய்வு மேற்கொள்ளும் காட்சிக்குரிய இடங்கள் மற்றும் சண்டைக் காட்சிகள் இடம்பெறும் இடங்கள் யாவும் அந்தந்த காட்சிகளுக்கு தேவையான வகையில் காட்சியமைப்புகளை சிறப்பாக மேற்கொண்டிருக்கிறார் கலை இயக்குனர்.

மிக முக்கியமாக இறுதி சண்டைக்காட்சிக்கான இடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் காட்சிப்படுத்தல் மிக நுட்பமாக சிந்தித்து கையாளப்பட்டுள்ளமைக்கு கலை இயக்குனர் சதீஸ் குமாரை வெகுவாக பாராட்ட வேண்டும்.

## ஒளிப்பதிவு (Camara)

விக்ரம் திரைப்படத்தில் ஒளிப்திவு செய்வதற்காக புதிய வகை ஒளிப்படக் கருவி பயன்படுத்தப்பட்டிருந்தமையால் பல காட்சிகள் ஒரே வீச்சில் செயலி கட்டளை மூலம் படமாக்கப்பட்டமை காட்சியமைப்புகளை தத்ரூபமாக வெளிக்கொணர்ந்திருக்கிறது என பொதுவான ஒரு அபிப்பிராயம் இருந்தாலும் ஒளிப்பதிவாளரின் மதிநுட்பமான படப்பிடிப்பு முறைமை இன்றி இது கைகூடாது என்ற சொல்லக்கூடிய அளவுக்க படத்தின் ஒவ்வொரு காட்சிகளையும் அங்குலம் அங்குலமாக ரசித்து படப்பிடிப்பை மேற்கொண்டிருக்கிறார். காட்சியமைப்புக்களும் மிகச்சிறப்பாக பொருத்தமான கோணங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. படத்தின் வெற்றிக்கான முக்கியமானவர்களுள் இவரும் இணைத்துக்கொள்ளப்படவேண்டியவர் என்றால் அது மிகையாகாது.

## படத் தொகுப்பு (Editing)

இயக்குனரின் எதிர் பார்ப்புக்களை கச்சிதமாகக் கையாளக்கூடிய படத்தொகுப்பாளர் ஒருவர் லோகேஸ் கனகராஜூக்கு கிடைத்திருப்பது பாக்கியமே என்றுதான் கூறவேண்டும். அந்தளவுக்கு கனகச்சிதமாக ஒவ்வொரு காட்சிகளையும் தொகுத்திருக்கிறார். வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கும் சம்பவங்களை எந்தவிதமான தொய்வுமின்றி பொருத்தமான காட்சிகளை பொருத்தமான இடத்தில் பொருத்தமான சந்தர்ப்பத்தில் புகுத்தி அவற்றுக்கிடையிலான தொடர்பை அல்லது பிணைப்பு போன்றவற்றை சிறிதளவும் பிசகாமல் தொகுத்திருப்பது தமிழ் சினிமா வரலாற்றிலேயே மிகமுக்கியமாக குறித்துரைக்கப்படக்கூடியதாகவே இருக்கிறது. இந்தளவுக்கு தரமாக படத்தொகுப்பு மேற்கொள்ளப்படவில்லையாயின் இந்தப்படம் இவ்வளவுதூரம் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லையெனக் கூறலாம். அவ்வளவு பிரமாதமாக படத் தொகுப்பாளர் பிலோமின் ராஜ் தனது திறனை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தப்படத்தில் கணணி மூலமாக கிராபிக் வேலைகளுக்கு பெரிய அளவில் இடம் தராமல் முழுக்க முழுக்க படத் தொகுப்பிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி தரமான தொகுப்பாக படத்தை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

## தொகுப்பு

என்னைப்பொறுத்தவரை எந்தவொரு திறனாய்வும் அதன் படைப்பாளரை அவரது ஆர்வம் முயற்சி போன்றவற்றில் இருக்கும் ஆர்வத்தை குறைத்துவிடாது அவரை மென்மேலும் ஊக்குவிப்பதாக அமையவேண்டும் என்பதில் அதிக விருப்பமுடையவன். குறைகள் இருப்பினும் அந்த குறைகளை நேரான முறையிலே சாதகமான மாற்றங்கள், திருத்தங்களை எடுத்துக்காட்டி அவற்றை திருத்துவதற்கான அல்லது மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவதே நல்ல திறனாய்வுக்கு அழகு. அதையே இந்த திறனாய்விலும் நான் முயற்சித்துள்ளேன். இந்த ஆய்வில் நான் மேலே குறிப்பிட்ட சிறப்பான பலவிடயங்களையும் அதேபோல் சில கவனத்தில் பதிவதற்குரிய சிறிய திருத்தங்கள் மற்றும் சந்தேகங்கள் போன்றவற்றையும் குறிப்பிட்டிருக்கின்றேன். அவை தவர வேறு ஆழமான கருத்துப் பிறழ்வான மற்றும் காட்சிப் பிறழ்வான விடயங்கள் இப்படத்தில் கண்டுகொள்வது மிகக்கடினமே. மொத்தத்தில் இவ்வாறானதொரு சிறந்த படைப்பபை தந்த லோகேஸ் கனகராஜ் எதிர் காலத்தில் பல விருதுகளுக்கு உரித்துடையவர் என்பதே எனது கருத்து. அவர் மட்டுமல்ல இப்படத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்த ஒவ்வொரு நடிகர்களும் தங்கள் திறனை மிகச் சிறப்பாகவே வெளிப்படுத்தியிருக்கிறார்கள் அவர்களுக்கு எந்த முறையிலும் சளைத்தவர்களில்லை என்பதை திரைப்படத்தின் வெற்றிக்கு துணையாக இருந்த ஏனைய படக்குழுவினரும் தங்கள் திஙனை வெளிப்படுத்தியுள்ளனர். மொத்தத்தில் திரைப்படம் பேஸ் பேஸ்.

● கே.எம்.சண்முகம் (அமெரிக்கா)



# கலாச்சாரம்

*ரெட்வுட் சர்வதேச உயர்நிலைப் பள்ளி... ஒக்லேண்ட்... கலிபோர்னியா அமெரிக்கா.. கலையுணர்வுமிக்க பெரிய கட்டிடங்களை உள்ளடக்கி முப்பது ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து அமைந்திருந்தது. பிரம்மாண்டமான வாயிற்கதவில் நுழைந்ததும் நடைபாதையை ஒட்டி இருபுறமும் வரிசையாக ஓக், பைன், சைப்ரஸ், மேகனோலியா, மேபிள் போன்ற மரங்கள் ஓங்கி வளர்ந்து இருந்தன. பள்ளிக்கு பின்புறம் இருந்த பூங்காவில் ரோஸ், டாலியா, டெய்சி, லில்லி, கார்னேஷன்,*

*மேரிகோல்டு போன்ற விதவிதமான பூக்கள் கலர் கலராக பூத்துக் குலுங்கி கண்களைப் பறிக்கும் வண்ணம் அழகாக இருந்தன. அங்கிருந்த மாதுளம், சப்போட்டா, ஆப்பிள், ஆரஞ்சு மரங்களில் கொத்து கொத்தாக பழங்கள் பறிப்பார் யாருமின்றி தொங்கிக்கொண்டிருந்தன. அங்கு மாணவ மாணவியர் படிக்க மிகப் பெரிய நூலகம், விளையாட பெரியதும், சிறியதுமாக மைதானங்கள், ஓரத்தில் வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள், பள்ளி வாகனங்கள், அமர்ந்து பேச பூங்கா, வழிகாட்ட அறிவிப்பு பலகைகள் என ஒரு கல்லூரிக்குரிய வசதிகளுடன் பள்ளி அமைந்திருந்தது. இதே பள்ளியில் தான் மார்க், பில், ராஜ் மூவரும் பள்ளி இறுதி ஆண்டான பன்னிரண்டாம் வகுப்பில் படித்து வருகின்றனர்.*

மூவரும் ஒரே பள்ளியில் கடந்த ஏழு வருடங்களாக ஒன்றாகப் படித்து வரும் மாணவர்கள் என்பதால் மிகவும் நெருங்கிய நண்பர்களும் கூட.

"மார்க் உனக்கு என்னவாயிற்று? எப்போதும் கலகலப்புடன் எதையும் மறைக்காமல் பேசும் உன்னிடம் வழக்கமான உற்சாகம் இல்லையே?.யூ ஆர் அன்யூஸ்வல் அன் டைட் லிப்பிடு..எதையோ பறிகொடுத்தவன் போல் இருக்கிறாய்..

நாம் இந்த ஒரு வருடம் தான் ஒன்றாக இருக்கப் போகிறோம்.என்ன பிரச்சினை என்றாலும் நீ எங்களிடம் சொல்லலாம்..எங்களால் முடிந்த உதவியைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.அது தான் உனக்கும் நல்லது"என்று மிகுந்த அக்கறையுடன் பேசினான் பில்.

அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த ராஜ்,பில் மார்க்கிடம் சொன்னதை வழிமொழிந்து பேசினான்."உண்மை தான் மார்க்...உன் முகத்தைப் பார்த்தாலே மனதில் உள்ள உன் சோகம் தெரிகிறது.. நண்பர்களிடம் மனம் விட்டு பேசினாலே உன் கவலைகள் பாதியாக குறைந்து விடும்.எங்கள் இருவரிடமும் நீ எதையும் மறைக்க வேண்டியதில்லை"

மார்க் தன் நண்பர்கள் பில் மற்றும் ராஜ் பேசியதை மௌனமாக கேட்டுக் கொண்டான்..நண்பர்கள் மூவரும் பள்ளி மைதானத்தின் ஓரத்தில் இருந்த பெரிய ஓக் மரத்தின் கீழ் இருந்த இருக்கைகளில் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர்.ஆண்டு விடுமுறை முடிந்து புதிய வகுப்புகளில் சேர்ந்த மாணவர்கள் பட்டாம்பூச்சிகள் போன்று அங்கும் இங்கும் அலைந்து வகுப்பின் ஆசிரியர்களிடமும் உடன் படிக்கும் மாணவ மாணவியரிடமும் தங்களை அறிமுகப்படுத்தியவாறு உற்சாகத்துடன் பேசிக்கொண்டு இருந்தனர்.சுற்றியுள்ள யாரையும் எதையும் பார்க்கும் மனநிலையில் மார்க் இல்லை.அவன் கண்களில் சாரைசாரையாக நீர் வழிந்தது.உணர்ச்சி மிகுதியால் பேசமுடியாமல் தவித்தான்.

சில நிமிடங்களுக்கு பிறகு மார்க் மனதை தேற்றிக் கொண்டு நண்பர்கள் இருவரையும் ஏறிட்டு பார்த்தபடி பேசினான்.

"நீங்கள் இருவரும் சொல்வது சரிதான்.ஐ ஏம் வெரி லக்கி டு ஹேவ் யூ ஏஸ் மை பிரண்ட்ஸ்..என் நிறத்தையும் ஏழ்மையையும் பொருட்படுத்தாமல் என்னுடன் நெருங்கி பழகும் உங்களை நினைத்து நான் பெருமைப் படுகிறேன்..உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? கடந்த மாதம் ஹைவே 356ல் எல் காமினோவில் போலீஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் என் தந்தை பீட்டர் கொல்லப்பட்டது உங்களுக்குத் தெரியாதா?"

" வி ஆர் ரியலி வெரி சாரி பார் யூ மார்க்.. நீ கவலைப்படாதே;

.ஆமாம் இந்த சோகச் செய்தியை நீ எங்களிடம் போனில் சொல்லியிருக்கலாம்..அல்லது எங்களுடன் வாட்ஸ்அப்பில் பகிர்ந்திருக்கலாமே? இது போன்ற வேளையில் தானே நாங்கள் உனக்குத் துணையாகவும் ஆறுதலாகவும் இருக்க வேண்டும்?உனக்கு தேவையான உதவிகளைச் செய்ய நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்..நம் நாட்டில் இந்த துப்பாக்கி சூடு சம்பவங்கள் வாரத்தில் ஒரு முறை அல்லது இருமுறை பள்ளி,கல்லூரி,வணிக வளாகங்கள்,சூப்பர் மார்க்கெட் போன்ற பொதுமக்கள் கூடும் எல்லா இடங்களிலும் சர்வசாதாரணமாக நடக்கிறது.அதனால் தானோ என்னவோ தெரியவில்லை.இந்த துப்பாக்கி சூடு குறித்த செய்தி எங்கள் கண்களில் படவேயில்லை..சரி.இதை நீ எங்களிடம் சொல்ல இவ்வளவு நாட்கள் காத்திருக்க வேண்டுமா?".என்று பில் அக்கறையுடன் பேசினான்.

"உண்மை தான் எனக்கும் புரிகிறது.நான் பலமுறை உங்கள் இருவரிடமும் பேச நினைத்தேன்.. ஆனால் ஆண்டு விடுமுறையில் நீ சுவிட்சர்லாந்துக்கும்,ராஜூ இந்தியாவுக்கும் செல்வதாக என்னிடம் சொல்லி விட்டுத் தானே சென்றீர்கள்? அதனால் இந்த செய்தியை உங்களிடம் சொல்லி உங்களை வேதனைப்படுத்த நான் விரும்பவில்லை.ஐ டிட் நாட் வான்ட் டு ஸ்பாயில் யுவர் ஹாலிடேய்ஸ்.."மனதில் தீராத வேதனையுடன் தொடர்ந்து பேசினான் மார்க்.

"என் அப்பாவை துளியும் மனச்சாட்சி இல்லாமல் ஒரு வெள்ளை நிற போலீஸ் அதிகாரி சுட்டுக் கொன்றார்.. கருப்பினத்தவராய் பிறந்தது தான் எங்கள் குற்றமா? ஒவ்வொரு வருடமும் சுமார் 45000

பேர் துப்பாக்கி சூட்டில் கொல்லப்படுகிறார்கள் என்றால் அதில் பாதிக்கும் மேற்பட்டோர் மக்கள் தொகையில் பதிமூன்று சதவிகிதம் மட்டுமே உள்ள சிறுபான்மையினரான எங்கள் கருப்பின மக்கள் என்பது எவ்வளவு துயரமான செய்தி?இந்த சாவு எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகமாகிக் கொண்டு போகிறது.அடிமைத்தனத்தை மறைமுகமாக நிலைநிறுத்தும் செயல்கள் தானே இவை?."கண்களில் நீர் வழிய பேசினான் மார்க்

"உண்மை தான் மார்க்.ஐ எக்ரி வித் யூ இன் புல்.. செவிடன் காதில் சங்கு ஊதியது போல மக்களின் எண்ணங்களை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேயில்லை.. பாப்கார்ன் வாங்குவது போல் பணத்தைக் கொடுத்தால் மிக எளிதாக யார் வேண்டுமானாலும் ஆயுதங்களை வாங்கலாம் என்பதால் கள்ளச் சந்தையில் துப்பாக்கி வியாபாரம் இங்கே செழித்து வளர்கிறது. சரி..உன் தந்தையை போலீஸ் அதிகாரி சுடுமளவுக்கு உன் தந்தை என்ன தவறு செய்தாராம்?"பில் தன் மனதில் உள்ளதை வெளிப்படையாகப் பேசினான்.

மார்க் தன் தந்தையை சுட்டுக் கொன்ற சம்பவத்தைக் கூறியபோது ஒரு குறும் படத்தைப் பார்ப்பது போல் இருந்தது.

❊ ❊ ❊

"டேட். மாம் ஹேஸ் சிவியர் செஸ்ட் பெயின் அன் வி ஹேவ் டு டேக் ஹெர் டு ஈ.ஆர் இமீடியட்லி." என்று மார்க் சொன்னதும் அடுத்த வினாடியே தனது சீருடையைக் கூட மாற்றாமல் தன் மேலதிகாரியிடம் மெடிக்கல் எமர்ஜென்சிக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டு தனது ஃபோர்டு காரில் ஏறி விரைந்தார்,பீட்டர்.

பீட்டர் தன் அலுவலகம் இருந்த ஆல்பெர்ட் அவென்யூ எக்ஸிட்டில் இருந்து புறப்பட்டு டம்பர்டன் பிரிட்ஜ் மீதேறி பாம்பு போல் வளைந்து நெளிந்து குறுக்கும் நெடுக்குமாக ஓடிய பிரம்மாண்டமான மேம்பாலங்களின் வழியாகச் சென்று கீழிறங்கி எல் காமினோ எக்ஸ்பிரஸ்வே சென்றடைந்தார். கார்களும் மிக நீண்ட கனரக வாகனங்களும் ஐந்து வரிசைகளில் எதிரெதிர் திசைகளில் பறந்து கொண்டிருந்தன. போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்ட பீட்டர் மேலும் தாமதிக்காமல் இரண்டு பேருக்கும் மேலே பயணிக்கும் ஹெச்.ஓ.வி..கார் பூல் பாதையை தேர்ந்தெடுத்து காரை திசை மாற்றி ஆக்ஸ்லேட்டரை அழுத்தி பிடித்தார்.. கார் இப்போது எண்பது மைல் வேகத்தில் சீறிப்பாய்ந்தது.

பாதையின் ஓரத்தில் இருந்த அறிவிப்பு பலகையில் பளிச் பளிச்சென்று ஆரஞ்சு வண்ணத்தில் மின்னிய திரை "வேகக் கட்டுப்பாடு ஐம்பத்தி ஐந்து மைல்; உங்கள் காரின் வேகம் எண்பது மைல்; ரேடார் என்போர்ஸ்டு; அபராதம் 281 டாலர்" என்று அறிவித்தது.. சிவப்பு விளக்கை மதிக்காமலும் ஒன்வேயிலும்,ஹெச்.ஓ.வி கார் பூல் பாதையிலும் சென்றால் அபராதம் 381 டாலர் என்பதையெல்லாம் பீட்டர் பொருட்படுத்தவேயில்லை. மனைவி எலிசபெத்தை மருத்துவமனைக்கு உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பது மட்டுமே பீட்டரின் மனதில் இருந்தது..

இனியும் பத்து நிமிட பயணத்தில் அபார்ட்மெண்ட்டில் தயாராக இருக்கும் மனைவியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விடலாம் என்று நம்பிக்கையுடன் காரைச் செலுத்தினார்.பீட்டர். அந்த நேரத்தில் போலீஸ் ரோந்து வாகனம் ஒன்று மஞ்சள்,நீலம்,சிவப்பு நிறங்களில் கலர் கலரான வெளிச்ச மின்னல்கள் மாறி மாறி தெறிக்க, அச்சுறுத்தும் சைரன் ஓசைகளோடு பீட்டரின் காரை மிக வேகமாக கடந்து சென்று,காரை இடைமறித்து நின்றது.

அதிலிருந்த ஆஜானுபாகுவான வெள்ளை நிற போலீஸ் அதிகாரி கீழே இறங்கி பீட்டரை நோக்கி வேகமாக வந்து சாலைப் போக்குவரத்து விதிகள் பலவற்றை மீறியதற்காக டிக்கெட் கொடுப்பதாகவும் அதற்கான கைது வாரண்ட் உள்ளதாகவும் கூறினார்.

"சார் என் மனைவியை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல காரில் வேகமாக வந்ததைத் தவிர நான் வேறு எந்த தவறும் செய்யவில்லை"என்று பீட்டர் பயம் கலந்த பதற்றத்துடன் காரில் அமர்ந்து

கொண்டே பேசினார்.

"உன்னால் காரை விட்டு கீழிறங்கி வந்து பேசமுடியாதா? என்று அதட்டிப் பேசியவாறு கார் சாவியை அந்த போலீஸ் அதிகாரி வலுக்கட்டாயமாக பீட்டரிடம் இருந்து பறித்துக் கொண்டான். காரில் இருந்து இறங்க மறுத்த பீட்டரிடம் அவன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி இறங்கவும் திரும்பி நின்று கைகளை மேலே தூக்குமாறும் கத்தினான்..வேறு வழியின்றி கீழே இறங்கிய பீட்டரின் கைகளில் விலங்கை மாட்டினான்.அதற்கு பீட்டர் பலமாக எதிர்ப்பு தெரிவித்தார்...

"எனக்கு விலங்கு மாட்ட உங்களுக்கு அதிகாரமில்லை;என் நிறத்தைப் பார்த்து எதையும் முடிவு செய்யாதீர்கள்.நெஞ்சு வலியால் துடிக்கும் என் மனைவியை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.இப்போது வழியை விடுங்கள்.நான் டிராபிக் அட்டர்னி மூலம் பார்த்துக் கொள்கிறேன்"என்று போலீஸ் அதிகாரியிடம் சொல்லி விட்டு மீண்டும் காரில் ஏறிச் செல்ல முற்பட்டார் பீட்டர்.அப்போது ஏற்பட்ட கைக்கலப்பில் போலீஸ் அதிகாரி தவறி கீழே விழுந்தார்.

விழுந்த வேகத்தில் எழுந்த போலீஸ் அதிகாரி "என்னை ஏமாளி என்று நினைத்தாயா"என்று கோபமாக சொல்லிக் கொண்டே துளியும் மனச்சாட்சி இன்றி துப்பாக்கியை எடுத்து பீட்டரைச் சுட்டுக் கொன்றான்;ஒரு பாவமும் அறியாத பீட்டர் குண்டு பாய்ந்து கீழே விழுந்து துடிதுடித்து இறந்தார். பீட்டர்,தான் வைத்திருந்த துப்பாக்கியால் போலீஸ் அதிகாரியை மிரட்டி சுட முயற்சித்ததாகவும் அதனால் தன் தற்காப்புக்காக பீட்டரைச் சுட்டதாகவும் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.இச்சம்பவத்தை கண்டித்து நாடு முழுவதும் கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.

மார்க் மனவருத்தத்துடன் தொடர்ந்து பேசினான்.

"இதுவரை நாங்கள் துப்பாக்கியைத் தொட்டுக் கூட பார்த்ததில்லை.எங்களைப் போன்ற ஏழைகளுக்கு அதை வாங்குவதற்கும் வசதியில்லை.ஆனால் வீண் பழி சுமத்தி எந்த வம்பு தும்புக்கும் போகாத அப்பாவியான என் தந்தையை சுட்டுக் கொன்று விட்டார்கள்"

❊ ❊ ❊

எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த பில் சொன்னான்:

"நம் நாட்டின் ஜனத்தொகையை விட பொதுமக்களிடம் துப்பாக்கிகள் எண்ணிக்கை அதிகம்.சட்டத்தின் ஆட்சியில் மக்களுக்கு துப்பாக்கிக்கான தேவை என்ன? ஆனால் அதை வைத்துக் கொள்ள இங்கே எந்த கட்டுப்பாடும் இல்லை"

அருகில் இருந்த ராஜூவும் தன் மனதில் இருந்த எண்ணங்களை பகிர்ந்து கொண்டான்.

" துப்பாக்கிச் சூடு சம்பவங்களைத் தடுக்க அரசு இதுவரை உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு இந்த மனநோயாளிகள் அற்ப காரணங்களுக்காகவும் சில நேரங்களில் காரணமே இல்லாமலும் காக்கா குருவியை சுடுவது போல் ஒருவருக்கொருவர் சுட்டுக் கொல்கிறார்கள்."

இதைக் கேட்ட மார்க்கும் அரசின் செயலின்மையைக் கண்டித்துப் பேசினான்.".ஜனநாயகக் காவலன் என்று தம்பட்டம் அடிக்கவும் மனித உரிமைகள் இனவெறி பற்றியும் உலகிற்கு பாடம் நடத்தவும் மற்ற நாடுகளை விமர்சிக்கவும் நமக்கு என்ன தகுதி உள்ளது?"

" நம்மில் சிலர் நாம் அனைவருமே வந்தேறிகள் என்பதை மறந்து தங்களை ஏதோ பூர்வீக குடிமக்களாக கருதிக் கொண்டு பிறர் மீது வன்முறையை கட்டவிழ்த்து வெறுப்பை உமிழ்கிறார்கள். இங்கு ஜனநாயக கட்சியும் குடியரசு கட்சியும் மாறிமாறி துப்பாக்கி கலாச்சாரத்தை ஒழித்துவிடுவோம் என்று வெற்றுப் பிராச்சாரம் தான் செய்கின்றனர்.இந்த அரசுகளின் கையிலாகாத்தனம் என் மனதில் மிகுந்த கோபத்தையும் வேதனையையும் தருகிறது.. இதற்கு முடிவு கட்ட நாம் எதாவது செய்ய வேண்டும்

“பில் மன உறுதியுடன் பேசினான்.

“பள்ளிக் கூட மாணவர்களான நம்மால் என்ன செய்ய முடியும்?” மார்க் சந்தேகத்துடன் கேட்டான்.

“பில் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது; இதைப் பற்றிப் பேசவும் இதற்காகப் போராடவும் அரசியல்வாதிகளும் சமூக இயக்கங்களும் உள்ளன” ராஜூவின் பேச்சிலும் அவநம்பிக்கை தான் இருந்தது.

.

“அவர்களின் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் தொலைக்காட்சி விவாதங்களும் இதுவரை சாதித்தது என்ன? இளைஞர்களான நம்மால் எதையும் சாதிக்க முடியும். நம் மனதில் உறுதியான நம்பிக்கை இருந்தால் இந்த உலகில் எதுவும் சாத்தியம் தான்.இந்த துப்பாக்கி கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க நாம் மூவரும் ஆலோசித்து மிகவும் கவனமாக ஒரு திட்டம் தீட்ட வேண்டும்..யாராவது ஒருவர் இந்த பூனைக்கு மணி கட்டத் தானே வேண்டும்..நாம் இதை ஆரம்பித்து வைப்போம்.இந்த வேள்வியில் நம் உயிரே போனாலும் பரவாயில்லை” பில் இளங்கன்று பயமறியாது என்பது போல் மனதில் ஒரு தீர்மானத்துடன் பேசினான்....

நீண்ட விவாதங்களுக்கு பிறகு மார்க்கும் ராஜூவும் பில் பேசியதை ஒரு மனதாக ஏற்றுக் கொண்டனர்.

“இங்குள்ள பெடரல் லைசன்ஸ் பெற்ற பத்து துப்பாக்கி மற்றும் தளவாடங்கள் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தான் அமெரிக்கா காவல்துறைக்கும் ராணுவத்திற்கும் மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கும் விதவிதமான துப்பாக்கி,ரைபில் பிஸ்டல்..போன்றவற்றை ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்கிறது.அந்த கூட்டமைப்பின் தலைவர் தான் என் தந்தை.. அவர் அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்கு உடையவர்.. என் பெற்றோருக்கு ஒரே வாரிசு நான் தான்.எனக்காக என் பெற்றோர் எந்த எல்லைக்கும் செல்வர்.அதனால் அடுத்த வாரத்தில் ஒரு நாள் நீங்கள் இருவரும் என் கார் டிரைவரை ஏமாற்றி என்னை ராஜூவின் காரில் மறைத்து கடத்திக் கொண்டு போய் கொரோனா காலத்திற்கு பின்பு செயல்படாமல் இருக்கும் ராஜூவின் குடும்பத்திற்கு சொந்தமான மருந்து குடோன்களில் அடைத்து வையுங்கள்..நம் திட்டம் செயல்படும் இரண்டு நாட்களுக்கு முன்பே நம் மூவரின் செல்போன்களை அணைத்து விடலாம்.. நாம் நம் கோரிக்கைகளை மனுவாக எழுதி என்னை நீங்கள் கடத்தும் நாளன்று என் தந்தைக்கு,நாட்டின் அதிபருக்கு,

காங்கிரஸ்,செனட்,பிரதிநிதிகள் சபை,நீதித் துறை மற்றும் சமூக ஊடகங்கள் என சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அரசு தபால் நிலையம் மூலம் அனுப்பி வைப்போம். எல்லோருக்கும் அழுத்தம் கொடுத்து அனைத்து வழிகளிலும் நமக்கு நிவாரணம் கிடைக்கும்வரை நாம் போராடலாம்..

“நமது கோரிக்கைகள் என்னவென்று நீ சொல்லவேயில்லையே?” மார்க்கும் ராஜூவும் கேட்ட கேள்வியில் ஆர்வமும் பதட்டமும் இருந்தது.

“ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள துப்பாக்கிகளை அனைவரும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும்; துப்பாக்கி வைத்திருப்பதற்கான வயது குறைந்தது இருபத்தி ஐந்தாக உயர்த்த வேண்டும்; கள்ளத் துப்பாக்கி உற்பத்தியாளர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும்; துப்பாக்கி லைசென்ஸ் வேண்டுவோர் அதற்கான காரணங்களை தெரியப்படுத்தி உடல் நலம் மனநலம் குறித்த மருத்துவ சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்; மனுவைப் பெற்ற அதிகாரிகள் மனுதாரரர்களின் பின்புலத்தை ஆராய்ந்து

தேவை தான் என உறுதி செய்தபின் உரிமம் வழங்கவேண்டும்.. உரிமத்தை வருடத்திற்கு ஒருமுறை உரிய மருத்துவ சான்றிதழ்களுடன் மீண்டும் சமர்பித்து புதுப்பித்துக் கொள்ள வேண்டும்..நாம் வேறு கோரிக்கைகளை இதனுடன் சேர்க்க வேண்டுமா என்பதை நீங்களும் யோசித்து சொல்லுங்கள்”..தனது அறிவுக்கு எட்டிய ஆலோசனைகளை சொன்னான் பில்.

பலகட்ட பேச்சுக்களுக்கு பின் கடத்தல் நாடகத்தை எங்கு எப்போது எப்படித் துவங்கி எப்படி முடிப்பது எனத் தீவிரமாக விவாதித்து திட்டத்தை இறுதி செய்தனர்

❊ ❊ ❊

மதியம் மூன்று மணி.. வெயிலின் உக்கிரம் சிறிதும் குறையாமல் கடுமையாகவும் காற்று வீசாமல் எவ்வித சலனமும் இன்றி இருந்தது பெரும்பாலான மாணவர்கள் தங்கள் வகுப்புகளில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்க நண்பர்கள் மூவரும் இனியும் பூங்காவில் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர்.அப்போது இருபத்தி இரண்டு வயது முன்னாள் பள்ளி மாணவன் ஜோசப் தன் தோள்பையில் மறைத்து வைத்த தானியங்கி துப்பாக்கியுடன் பள்ளிக்குள் நுழைந்தான்... பள்ளியில் படித்தபோது தான் ஒருதலையாகக் காதலித்த மேரி தற்போது அங்கு ஆசிரியராக பணிபுரிகிறார். பள்ளியின் பழைய மாணவர் என்னும் போர்வையில் மேரியை பார்க்க அவ்வப்போது அங்கு வருவதும் மேரி அவனைக் கண்டித்துப் பேசி அவமதித்து திருப்பி அனுப்புவதும் உண்டு.ஆண்டு விடுமுறையில் மேரியை சந்திக்க இயலாத ஜோசப் பள்ளி திறந்தவுடன் பழிவாங்கும் எண்ணத்தில் அங்கு மேரியைத் தேடிப் பார்த்தான்.. அங்கும் இங்கும் ஓடி வழியில் எங்கும் மேரியை பார்க்க முடியாத கோபத்தில் கண்ணில் தென்பட்ட மாணவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டதில் பல மாணவர்கள் குண்டு பாய்ந்து கீழே விழுந்தனர்.

இச்சம்பவத்தை தூரத்தில் இருந்து பார்த்த மேரி 911 எண்ணை அழைத்து தேர் ஈஸ் ஏன் ஆக்டிவ் ஷூட்டர் இன் தி ஸ்கூல் என்று பதட்டத்துடன் தகவல் சொன்னார்.பின்,மற்ற குழந்தைகளைக் காக்கும் பொருட்டு சிறிதும் தாமதிக்காமல் தன் அறையில் இருந்து ஓடிச் சென்று எச்சரிக்கை மணியை இயக்கினார்.. அதைக் கேட்ட மாணவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் கூச்சலிட்டவாறு ஓடிக்கொண்டு இருந்தனர்...

அங்கு பூங்காவில் இருந்த நண்பர்கள் மூவரும் பள்ளியின் எச்சரிக்கை மணியையும் அதைத் தொடர்ந்து எழுந்த கூச்சலையும் கூக்குரல்களையும் கேட்டு என்னவோ ஏதோ என்று பள்ளியை நோக்கி ஓடி வந்தனர்.


மூவரும் அங்கங்கே இறந்து கிடந்த மாணவர்களின் உடல்களைப் பார்த்து கதறி அழுதனர்.அப்போது ஜோசப் மேரியை நோக்கி ஆக்ரோஷமாக துப்பாக்கியுடன் ஓடிச் செல்வதைப் பார்த்த பில்,மேரியைக் காப்பாற்ற ஜோசப்பை நோக்கி பாய்ந்தோடினான். பில்லை பின்தொடர்ந்து மார்க்கும் ராஜூவும் ஓடினர். தன்னை நோக்கி ஓடி வந்த மூவரையும் ஜோசப் மூர்க்கத்தனமாக எதிர்கொண்டு துப்பாக்கியால் சுட மூவரும் வரிசையாக பலியாகி கீழே விழுந்தனர்.. துப்பாக்கி கலாச்சாரத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க நினைத்த அதே நாளில் நண்பர்கள் மூவரும் அடுத்தடுத்து நெஞ்சில் குண்டு பாய்ந்து தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தனர்.. பின்னால் ஓடி வந்து செய்வதறியாது திகைத்த நின்ற மேரியும் ஜோசப்பின் துப்பாக்கி குண்டுக்கு கடைசியாக இரையானார்..

மேரியின் அவசர அழைப்பு மூலம் சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் பள்ளி வளாகத்தை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு கண்காணிப்பில் ஈடுபட்டனர்.கொடூரச் செயலில் ஈடுபட்ட ஜோசப்பைப் பார்த்ததும் போலீசார் சுட்டுக் கொன்றனர்.துப்பாக்கியால் துவங்கியதை வழக்கம் போல் போலீசார் துப்பாக்கியால் சுட்டு கணக்கை நேர் செய்தனர்.

அதைக் கண்டு அங்கிருந்த அனைவரும் அச்சத்தில் உறைந்து போய் திகைத்து நின்றனர்.. பலத்த காயமடைந்த ஐந்து பேர் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்..தகவல் அறிந்த பெற்றோர் பதறிப்போய் நேரில் வந்து குண்டடிபட்டு இறந்து கிடந்த தங்கள் குழந்தைகளின் உடல்களின் மேல் விழுந்து கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.வழக்கம் போல் ஊடகங்களில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன.அனைத்து அச்சு ஊடகங்களிலும் இச்சம்பவம் தலைப்பு செய்தியாக இடம்பெற்றது.. அரசின் காவல்துறையைக் கண்டித்து அமெரிக்கா முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் பரவலாக நடந்தன. அமெரிக்க அதிபர் "கடுமையான சட்டங்கள் மூலம் இந்த துப்பாக்கி தொற்று நோயை முடிவுக்கு கொண்டு வர போராடுவேன்"என்றார்..

அமெரிக்கா வெள்ளை மாளிகை மற்றும் அரசு கட்டிடங்களில் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறந்தன..

● முபீன் சாதிகா



1

# குரல்

அவளுக்கு அவனுடைய குரல் பிடிக்கவில்லை. மணமான நாளிலிருந்தே இந்தப் பிரச்சினையை அவள் சந்தித்து வந்தாள். ஒரு நாள் அவனிடம் தனக்கு அவன் குரல் பிடிக்கவில்லை என்பதைச் சொல்லிவிட்டாள். அவன் குரல் அவளை அருவறுப்பு கொள்ளச் செய்வதாகச் சொன்னாள். இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த அவன் ஒரு மருத்துவரைப் பார்த்து தன் குரலை மாற்றும்படி கேட்டுக் கெஞ்சினான். அவனுடைய குரலை மாற்றினால் அது பெண் குரல் போல மாறிவிடும் என எச்சரித்தார். அதை ஏற்றுக் கொண்டு அறுவை சிகிச்சைக்குப் போனான். சிகிச்சை முடிந்த சில நாட்களில் கிளிக்குரலில் பேசத் தொடங்கினான். முன்பிருந்ததே மேல் என நினைத்தாள். மீண்டும் ஒரு முறை குரலை மாற்றச் சொன்னால் அவனுக்குச் சிரமமாகிவிடும் எனப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டாள். ஆனாலும் அதைத் தாங்க முடியாமல் அவன் குரலை மாற்றும்படி சொல்லிவிட்டாள். மீண்டும் மருத்துவரிடம் மன்றாடினான். இப்போது மாற்றினால் புலி போல் உருமும் குரல் வரலாம் என மருத்துவர் சொல்லிவிட்டார். அதையும் ஏற்றுக் கொண்டான். சிகிச்சை முடிந்த சில நாட்களில் புலியின் கர்ஜனை ஒலித்தது. அந்தக் கர்ணகடூரத்தை அவளால் பொறுக்க முடியவில்லை. அது மட்டும் அல்லாமல் அவன் மனிதனே இல்லை என்ற எண்ணத்தையும் அவளுக்குள் அது ஏற்படுத்திவிட்டது. இதற்கு மேல் என்னத் தீர்வு இருக்க முடியும் என யோசித்துப் பார்த்தாள். அவனைப் பிரிந்து போக மனம் ஒப்பவில்லை. உடனிருப்பது பெரும் அசௌகரியத்தைத் தந்தது. இவளுடைய தர்மசங்கடத்தை அவன் புரிந்துகொண்டான். மருத்துவரிடம் போனான். தனக்குக் குரலே வராதவாறு அறுவை சிகிச்சை செய்துவிடுமாறு வலியுறுத்தினான். மருத்துவருக்கு அது தன்னுடைய தொழில் தர்மம் எனத் தோன்றவில்லை. குரல் வராதவர்களுக்கு உதவும் வகையில் தான் கண்டுபிடித்த மின்னணு குரல் கருவியை அவனுக்குப் பொருத்திவிட்டார். அவன் இதை எதிர்பார்க்கவில்லை. அவன் பேசினால் எந்திர மனிதன் பேசுவது போல் குரல் ஒலித்தது. அது அவளுக்குப் பெரிதும் பிடித்தது.



2

# ரத்த யுத்தம்

*நீ*ல ரத்தம் கொண்டவர்களும் பச்சை ரத்தம் கொண்டவர்களும் மோதிக் கொண்டார்கள். இரு ரத்த நிறங்களும் மாறுபட்டிருப்பதைக் கண்டு இரு ரத்த நிறக்காரரர்களும் தங்களின் இனம் சார்ந்தவர்களை ஒன்று திரட்டினார்கள். தாய் நீல ரத்தமும் மகன் பச்சை ரத்தமும் கொண்டிருந்தாலும் அவர்கள் இருவரும் எதிரெதிர் அணியில் சேரவேண்டியவர்களானார்கள். நீல ரத்தம் கொண்டவர்களால் அழிவு ஏற்படும் என ஓர் அறிவியல் கண்டுபிடிப்புச் சொன்னவுடன் இந்த யுத்தம் வெடித்தது. நீல ரத்தம் கொண்டவர்கள் வேற்றுக்கிரகவாசிகளின் மரபணுக்களைக் கொண்டவர்களாகவும் அவர்கள் அந்த வேற்றுக்கிரகவாசி இனத்துடன் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பிருப்பதாகவும் அந்த இனம் இந்தக் கிரகத்திற்கு வந்துவிட்டால் அவர்கள் பச்சை ரத்தம் கொண்டவர்களை அழித்துவிடுவார்கள் என்றும் சொல்லப்பட்டது. இதனால் நீல ரத்தம் கொண்டவர்களை அந்த வேற்றுக்கிரகவாசிகள் இருக்கும் கிரகத்திற்கு அனுப்பிவிடலாம் என முடிவெடுக்கப்பட்டது. இதில் யுத்தம் தீவிரமடைந்தது. நீல ரத்தம் கொண்டவர்கள் அந்தக் கிரகத்திற்குப் போக முடியாது எனவும் பச்சை ரத்தம் கொண்டவர்களை அழித்துவிடலாம் எனவும் முடிவு செய்தார்கள். எல்லோரும் கத்திகளையும் கூர்மையான ஆயுதங்களையும் ஏந்தினார்கள். யார் உடலில் என்ன நிற ரத்தம் உள்ளது என வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கீறிப் பார்த்து அந்தந்த நிற ரத்தத்திற்கு எதிரானவர்களைக் கொல்லத் தொடங்கினார்கள். அதற்குப் பழிவாங்க எதிரெதிர் நிற ரத்த இனங்கள் மோதின. இதனால் அந்தக் கிரகம் வளம் இழந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வேற்றுக்கிரகவாசிகள் வந்தார்கள். நீல ரத்தம் கொண்டவர்களைத் திரட்டிக் கொண்டு தங்கள் கிரகத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். பச்சை ரத்தம் கொண்டவர்களுக்கு நீல ரத்தம் உள்ளவர்கள் இல்லாமல் யுத்தம் முடிவுக்கு வந்ததை ஏற்க முடியவில்லை. அதனால் அந்த வேற்றுக்கிரகத்திற்குச் சென்று யுத்தத்தைத் தொடர முடிவெடுத்தார்கள்.

● கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ்
கிண்ணியா - 07




# பெண்ணியம் பேசும் சிறுகதைகள் : நவீன சீதை (கவிச்சுடர் சிவரமணி)

சிறுகதைகள் என்பது இலகுவில் எவர் கவனத்தையும் தன்பால் ஈர்த்தெடுக்கும் ஒரு விசையுரு தன்மையை தன்னிடத்தே கொண்டுள்ளது. வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை விபரித்துச் சொல்வதிலும் வாழ்வியல் அம்சங்களை புடம்போட்டுக் காட்டுவதிலும் வரலாற்று ஆவணங்களை வகைப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. படிப்பனையுடன் கூடிய சிந்தனைச் சிதறல்களும் அதில் அடங்கியுள்ளதால் இதன் தனித்துவம் பாதுகாக்கப்பட்டு என்றும் தலைநிமிர்ந்து தனக்கான இடத்தை தக்கவைத்துக் கொண்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இந்த வகையில் திருகோணமலையைச் சேர்ந்த கவிச்சுடர் சிவரமணி எழுதிய 'நவீன சீதை' சிறுகதைத் தொகுப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. 21 சிறுகதைகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள இந்நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் நூலுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல் பதிப்பாக 156 பக்கங்களுடன் அழகிய அட்டைப்படம் தாங்கி வெளிவந்திருக்கும் இந்நூலுக்கான ஆசிச் செய்தியினை

எம்.சி.எல். பெர்ணான்டோ

செயலாளர்

கல்வி அமைச்சு

கிழக்கு மாகாணம்

வழங்கியிருக்கின்றார். அவர் தனது செய்தியில்,

'கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற பல்லின எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் வினைத்திறனுடன் செயற்பட்டவரும் இத்திணைக்களமானது, கலைஞர்கள், எழுத்தாளர்களை ஊக்கமளிக்கும் வகையில் அவர்களின் கையெழுத்துப் பிரதிகளை அச்சுருவாக்கும் செய்து காத்திரமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. 2021 ஆம் ஆண்டிலும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் எமது மாகாணத்தின் கலைஞர்களுக்காக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மகிழ்ச்சியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வெளியீட்டுச் செய்தி

திரு.சரவணமுத்து நவநீதன்

மாகாணப் பணிப்பாளர்

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

கிழக்கு மாகாணம்

அவர் தமது செய்தியில்

'கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் காத்திரமான செயற்பாடுகளில் கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தல் என்பது பெறுமதிவாய்ந்த பணியாகும். காத்திரமான கருவைக் கொண்ட கையெழுத்துப் பிரதிகளையும், தமது கையெழுத்துப் பிரதிகளை வெளியீடு செய்வதற்கு பொருளாதார ரீதியான இடர்பாடுகளை எதிர்நோக்குகின்ற கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை நூலுருவாக்கம் செய்யும் செயற்பாடு வருடா வருடம் நடைபெற்று வருகின்றது' எனக் குறிப்பிட்டு நூலுருவாக்கத்தின் அவசியம் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

கவிஞர் சிவரமணி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர். எழுத்துத் துறையில் சிறந்து விளங்கும் இவரது மூன்றாவது நூலாக 'நவீன சீதை' சிறுகதை தொகுப்பு அமைகிறது. 2015 இல் 'தொடுவானின் சிதறல்கள்' கவிதைத் தொகுப்பும், 2006 இல் 'தனித்தீவு' எனும் நாவலும் ஏற்கனவே வெளியிடப்பட்டு வாசகர் மத்தியில் பிரபல்யம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

படைப்பிலக்கியங்களுக்காக பல்வேறு பரிசில்கள், பட்டங்கள், சான்றிதழ்களை கிராமிய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பெற்றுள்ளதுடன், எழுத்துலக பயணத்தை நம்பிக்கையுடன் தொடர்ந்து செல்கின்றார். வாழ்வியல் மற்றும் பெண்ணியம் போன்றவற்றில் அதிகம் முனைப்புக் காட்டும் இவரை நோக்கியதாய் பலரது கனவமும் திரும்பியுள்ளதில் சிறப்பும், பெருமையும் பெற்று பாராட்டுக்குரியவராகின்றார்.

கவிச்சுடர் சிவரமணி 25 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டவர். உள்ளதை உள்ளபடி எழுதாமல் அதை உணர்ந்து எழுத வேண்டும் என்ற கொள்கையில் நிலைத்திருக்கும் இவரின் உறுதியும், திடனும் வானளாவி நிற்கின்றது.

சிவரமணியின் சிறுகதைகளில் 'தவறு யார் மீது' எனும் கதை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வயது முதிர்ந்த ஒரு தாயும் தகப்பனும் தாங்கள் கொண்ட தீராத அன்பின் வெளிப்பாட்டை இதன் மூலம் வெளிப்படுத்துவதில் வாசகர் கண்களில் நீரை வரவழைக்கின்றார் நூலாசிரியர். வெளிநாடுகளில் வாழ்கின்ற பிள்ளைகள் தங்களது சுய நலனுக்காக எவ்வாறெல்லாம் பெற்றோரை பாவிக்க முனைகின்றனர் என்பதை கதை சொல்லிச் செல்கிறது.

கதையில் எனது மனசு தொட்ட சில வரிகள்....

எல்லோரும் தீர்க்க சுமங்கலியாய் இருக்க விரும்புவார்கள் நான்

நீயிருக்கும் போது போக ஆசைப்படுகிறேன்.

'உண்மைதான்க நாம இவர்கள் சுகம் பெரிதென வாழ்ந்தோம்.

இவர்களோ ஒரு வேலைக்காரர் போல நினைக்கிறார்கள்.

தாங்கலடி கமலம் தாங்கல

இருப்பா நாம ஒன்னா இந்த உலகத்தைவிட்டு போயிடுவோம்

யாருக்கும் பிரச்சினை இல்ல நமக்கும் கவலை இல்ல

சரியாச் சொன்னாய் வேதனை தாங்குற வேதனை இல்ல'

வயதானவர்களின் உள்ளம் எப்படியெல்லாம் நோகிறது, வேதனைப்படுகிறது.

❊ ❊ ❊

வாழ்க்கையின் அத்திவாரம் நம்பிக்கை

ஒருமுறை உடைந்தாலும் ஒட்டவைப்பது கடினம்.

என்ற கருப்பொருளை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது. நவீன சீதை சிறுகதை. சந்தேகப்படுவதால் எழுகின்ற விளைவுகள் இதில் கதையாகச் சொல்லப்படுகிறது.

இயலாத நிலையிலுள்ள கணவனைக் காப்பாற்றி, அவன் தன் நிலை மீள சுயநலம் பாராது உழைக்கும் ஒரு மனைவியின் செயற்பாடுகளை கதை விளக்கிச் செல்கிறது. கதையில் பெரிய எதிர்பார்ப்புகள் இல்லாவிட்டாலும் சுமாராக நகர்ந்து செல்கிறது. வாசகருக்குப் பிடித்த கதைகளில் இதையும் ஒன்றாகச் சேர்க்கலாம்.

❊ ❊ ❊

என்றுமே உடையது மாறாது

எல்லைகள் மீறலாம் ஆனால் மாறாது.

வருத்தத்தை வகுக்கப் புத்தி வேண்டும். புத்தியிருந்தால் மாற்றத்தையும் மாற்றலாம். எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு கதை சொல்லப்படுகிறது.

ஆக்கிரமிப்புகள், வக்கிர உணர்வுகள் என்பன நிலைப்பதில்லை என்பதை உறுதிப்படுத்துவதாய் கதை அமைகிறது.

❊ ❊ ❊

விருந்தாளி கதை விறுவிறுப்பாகச் செல்கிறது. 'நீ இந்த வீட்டு எஜமானி அவ விருந்தாளி' என்ற வரிகள் மனசு தொடுகிறது. நாகரீகம் இல்லாமல் நடந்து கொள்பவர்களுக்கு நல்ல பதிலடியாக கதை சொல்லப்படுகிறது. கருவும் கதையோட்டமும் நன்று.

❊ ❊ ❊

சிறந்த கதைகள் பலவற்றை சிறப்பாகத் தந்த கவிச்சுடர் சிவரமணியின் எழுத்தாற்றல் உயர்வானது. இதுபோல் இன்னும் பல இலக்கிய படைப்புகளை அவர் வெளிக்கொணர வேண்டும் என வேண்டி வாழ்த்துகளும் தெரிவிக்கப்படுகிறது.

நூல் - நவீன சீதை
நூல் தொகுப்பு - கவிச்சுடர் சிவரமணி
வகை - சிறுகதை
வெளியீடு - பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்
கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ். கிண்ணியா - 07



● பாரதி சித்ரா

நெரிசல் மிகுந்த நகரத்தின் சாலையில் குட்டியை கவ்விக்கொண்டு திரியும் பூனை போல தன் குழந்தையை சுமந்து கொண்டு பொம்மை விற்கிறாள் ஒரு இளம்தாய்...

மஞ்சளும், குங்குமம்மாய் மாறி மாறி ஒளிர்ந்து அவளை போஷிக்கிறது சிக்னல் விளக்கு...

துவண்ட மலரென தூங்கும் குழந்தையை தொடும் சாக்கில் நீளும் கைகளின் கயமை கண்டு பிள்ளையை மாராப்பாக்கிக் கொண்டாள்..

பரிதாபத்தினால் உணவோடு நீளும் கரங்களை புன்னகையோடு கடந்தாள்..

அவளை நோக்கி உதவியென நீளும் கரங்களில் உடையோடும், பணத்தோடு நெழிகிறது தூண்டில் புழுக்கள்...


எரிக்கும் விழியால் விலக்கி நடக்கிறாள் நிலமதிர...

போக்குவரத்துக்கு குறைந்த உச்சிப்பொழுதில் பிள்ளைக்கு பசியமர்த்திவிட்டு தானும் பசியாறுகிறாள் நீராகாரத்தில்...

சற்றே ஓய்ந்து பள்ளிச்சுவற்றில் சாய்ந்து அமர்ந்த அவளை தன் நெஞ்சில் தலைசாய்த்தபடி பாடுகிறான் பாரதி..

“பாதக... செய்பவரை கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா.. மோதி மிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்துவிடுபாப்பா..“

● ந. கிருஷ்ணசிங்கம்



# வாங்கி வளர்த்தவன்

*சுதந்திரன் ஒரு வளர்ப்புமகன். அவனை சிவசாமியும் அவரின் மனைவி மகேஸ்வரியும் தத்தெடுத்து வளர்த்தனர். கைக்குழந்தையாக இருந்தபோது அவனின் பெற்றவர்களால் அவன் விர்க்கப்பட்டவன்.*

கலியாணம் முடித்து பத்து வருடங்கள் கழிந்தபின்னும் தமக்குப் பிள்ளை பிறக்காததால் சிவசாமி தனது மனைவியாரின் விருப்பத்தோடு.. தமது ஊரான நுவரெலியாவில் வாழும் ஒரு குடும்பத்திடம் சட்டரீதியாக இவனைத் தமது வளர்ப்பு மகனாகக் கையேற்று.. சுதந்திரன் என்று பெயரிட்டு அன்பைச் சொரிந்து வளர்த்தனர். அந்தப் பிள்ளை அழுதால் மகேஸ்வரி துடித்துப்பதைத்து எழுந்து ஓடிப்போய்த் தொட்டிலில் கிடக்கும் குழந்தையைத் தோளில் சாய்த்துத் தாலாட்டுப்பாடி.. அழுகையை ஆற்றுவாள்.

பாலூட்டி வளர்க்க முடியாத தாயாக இருக்கின்றேனே என்னும் குறையானது எந்தநேரமும் அவளின் நெஞ்சை வருத்த.. பால்மாவைக் கரைத்துப் போச்சில்விட்டு ஊட்டுவாள்.

கொழும்பு மாநகரிலுள்ள ஆமர்வீதியில் இவர்களின் வீடு இருந்தது. சனநெருசல் மிகுந்த இடமான அந்த அயலில் ஊத்தைநீர் ஓடும் அகன்ற கால்வாய் இருக்கின்றது. அதனால் நூளம்புத் தொல்லை தாங்கமுடியாத அளவுக்குப் பெருகுவதால்.. பிள்ளை வளர்ப்புக்கு அது இடைஞ்சல்தரும் என்று அஞ் சியவர்கள் வங்கியில் கடன்பட்டு.. வெள்ளைவத்தையில் வசதியான தொடர்மாடி வீடொன்றை வாங்கி.. அங்கு குடியேறினர்.

காலம் நகர்ந்தது. மகேஸ்வரி கருவுற்று ஒரு பெண்குழந்தையைப் பெற்றார். தனக்கொரு தங்கச்சி பிறந்ததால் சுதந்திரன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. பாடசாலை முடிந்து வந்ததும் தனது தங்கையான சாருமதியோடு செல்லங்கொஞ்சி அவன் மகிழ்வான்.

இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் மகேஸ்வரிக்;கு இன்னுமொரு பெண்குழந்தை பிறந்தது. இரண்டு பிள்ளைகளையும் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பு சுதந்திரனிடம் வந்தது. இதனால் விளையாட்டையும்.. நண்பர்களையும் அவன் தவிர்த்;துக்கொண்டான்.

தந்தையார் சிவசாமி வெள்ளைவத்தையில் உள்ள ஒரு பிரதான வீதிக்கரையில் அங்காடிக் கடைகள் இரண்டை அக்கம்பக்கமாக நடத்திவந்தார். நான்கு பேர்களைக் கூலிக்கமர்;த்திப் பெரும் எடுப்பில் வியாபாரம் செய்துவந்த அவர்.. இதனால் நிறைந்த வருவாயைப் பெற்றுவந்தார். குடும்ப வாழ்க்கை குதூகலமாக நடந்துவந்தது.

இருந்தும் இவர் காலப்போக்கில் பெருத்த குடிகாரராகவும்.. வீண்செலவாளியாகவும் மாறியதால் கடையின் வியாபாரம் படுத்துவிட்டது. கொள்வனவும் விற்பனையும் குறைந்துவரவே திக்குத்தெரியாது திணறியவர்..

சுதந்திரனின் படிப்பைப் பத்தாம் வகுப்பில் நிறுத்தவைத்து அவனைத் தனது கடையில் வேலைக்கு அமர்த்திவிட்டார். இதனால் மனைவியார் பெரிதும் நொந்து வருந்துவதை அவர் உணர்ந்தபோதும் கடையில் வேலை செய்வோரைக் குறைக்கவேண்டியது கட்டாயமாகிவிட்டதை எடுத்துக்கூறி மகேஸ்வரியை அவர் சமாளித்தார்.

இந்தநேரத்தில் மகேஸ்வரியின் அண்ணண் மகேஸ்வரன் ஜேர்மன்னி நாட்டிலிருந்து விடுமுறையில் தாயகத்திற்கு வந்தார். தனது தமைக்கையாரின் குடும்பத்தின் இடர்களையும்.. வறுமை சூழ்ந்த வாழ்வையும் கேட்டும் கண்டும் கலங்கியவர்.. அவர்களின் ஒப்புதலோடு தனது பணத்தை அள்ளிவீசி.. ஆவன அனைத்தும் செய்து.. சுதந்திரனை ஜேர்மன்னி நாட்டிற்கு அழைத்துவந்தார்.

அந்த நாட்டில் வந்து இறங்கி நடந்த சுதந்திரன்

அங்கு பொறுக்கமுடியாத குளிர் காற்றோடு.. பொழியும் பனித்திரள்கள் உடலைக் குளிப்பாட்டவே வெகுண்டு மாமனாரை நோக்கியவன்..

மாமா! சரியாக்குளிருது.

என்று சொல்லவும்.. சிரித்தவாறு மகேஸ்வரன்

ஓம்! இந்தக்குளிரிலும் பனியிலும்தான் நின்று பிளைப்பு நடத்தவேண்டும். புயலும் வீசும். பொறுக்கமுடியாத வெயில்காலமும் வரும் எல்லாத்தையும் தாக்குப்பிடித்து மனத்தைத் தைரியப்படுத்தி.. உழைப்பு ஒன்றே நோக்கமாகக் கொண்டு பயணிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

என்றவரின் வாக்கை ஏற்றுக்கொண்ட சுதந்திரன் அன்றிலிருந்து எட்டுவருடங்களை இங்கு வாழ்ந்து முடித்துவிட்டான்.

நித்திரை நேரத்தைக் குறைத்து அதிகாலையில் எழுந்து.. பேப்பர் போடும் வேலைக்குப் போவான். அதன்பின்பு வந்து பெரிதொரு வர்த்தக நிலையத்தில் மூட்டைகள் இறக்கும் கூலிவேலையாளாக இயங்குவான். மாலையில் அந்த நிறுவனத்தை கூட்டிக்கழுவிச் சுத்தம் செய்வோரில் ஒருவனாகப் பணியாற்றுவான்.

இத்தனையும் செய்து உழைத்துப் பெற்ற பணத்தை வீட்டுக்கு அனுப்புவான். ஆனவாகில் ஆகாரம் உண்ணவோ.. நண்பர்களோடு சேர்ந்திருந்து.. கதைத்து மகிழவோ அவனுக்கு நேரம் இருக்காது. இடைக்கிடை வீட்டினர்களோடு அலைபேசியில் கதைத்து ஆறுதலடைவான்.

அன்று.. அம்மாவோடு உரையாடியபோது.. அவர் சற்று விலகிச்சென்று கதைத்தார்.

எடதம்பி! கொப்பர் இப்ப சரியாக் குடிக்கிறார். கடையையும் வித்துப்போட்டுக் கண்டவன்களோடை கூடித்திரியிறார்.

உன்ரை தங்கச்சி சாருமதி சாமத்தியப் பட்டுவிட்டாள். போனகிழமை இது நடந்தது. மற்றவளும் இண்டைக்கோ நாளைக்கோ பெரியவளாகலாம். இந்த மனிசனுக்கு இதுகளைப்பற்றி ஒரு பொறுப்புணர்ச்சியும் இல்லை.

என்று தாயார் சொல்லவும்.

தங்கை சாருமதியை அழைத்துப் பேசினான்.

என்ரை செல்லத்துக்கு நிறையக்காசு அனுப்புவேன். விரும்பின எல்லாம் வாங்கு. உன்னாலை எனக்கு வலுசந்தோசம். இந்தநேரத்தில் அம்மாதாற சாப்பாடுகளை மறுக்காமல் வாங்கிச் சாபிப்பிடு. அப்பத்தான் உடம்பிலை தைரியம்வரும்.

என்று அவன் சொல்லவும்.. இளைய தங்கை வெண்மதி இடைநுளைந்து..

அண்ணா! எனக்கும் காசுவேணும் அனுப்பு.

என்று சொல்லிச் சிணுங்கவும்..

ஓம் எல்லோருக்கும் சேர்த்துப் பெருந்தொகைக் காசு நாளைக்கே அனுப்பிவிடுகிறன்.

என்று சொல்லவும்.. குறும்புக்காரியான சின்னவள் எழுந்து சிரித்து ஆடுவதும் அலைபேசித் திரையில் தெரியவே.. சுதந்திரனும் சிந்தை நிறைந்து மகிழ்ந்தான்.

தந்தையாரைப் பார்த்ததும் அவன் அதிர்ந்துபோனான். சென்றதடவை கதைக்கும்போது எப்படி இருந்தவர் இப்படி மெலிந்து பொழிவிழந்து போனாரே.

ஏன்னப்பா இப்படித் தெம்பிழந்தவர் போலை தெரியிறியள். ஏதும்பிரச்சினையே. கடையை விற்றுவிட்டீர்கள் என்று இண்டைக்கு அம்மா சொன்னவ. அது நல்லது.

ஓமடா தம்பி! முன்னம்போலை இப்ப கொழும்பு இல்லை. தமிழர்கள் தெருவோரக் கடையள் போட்டு நடத்திறது பெரும் கஸ்டம். வலியவந்து சோலிக்கு இழுக்கிறான்கள். நான் கிழவன். அவன்களோடை மல்லுக்கட்ட ஏலாது. நல்ல விலைக்குத்தான் வித்தனான்.

அப்பா! வித்தகாசை என்னசெய்தனியள்..

உன்ரை தங்கச்சிமார் இவ்வளவை இரண்டு பேருக்கும் பிரித்துக் கொடுத்திட்டன். அவையள் அதை பாங்கிலை போட்டிட்டினம்.

நல்லது. எதுக்கும் அப்பா ஒருக்கால் டொக்டரிடம் போய்ச் செக்கப் செய்யுங்கோ.

நான் உங்கடை செலவுகளுக்கு அடிக்கடி காசு அனுப்புவன். சந்தோசமாக இருங்க. எனக்கு வேலைநேரம் வந்திட்டுது. வாறகிழமை கதைக்கிறன்.

என்றுகூறிய சுதந்திரன் அலைபேசியை நிறுத்தினான்.

இவனின் மாமனர் மகேஸ்வரன் ஜேர்மனியப் பெண்ணை மணம் முடித்ததால்.. அவருக்கு இலகுவில் வதிவுரிமை கிடைத்துவிட்டது. ஆனால் சுதந்திரன் இங்குவந்து எட்டுவருடங்களை எட்டிவிட்டபோதும் இன்னும் விசாகுறித்த எந்தமுடிவும் கிடைக்கவில்லை. வேலை செய்வதற்கான அனுமதிமட்டும் கிடைத்துள்ளது. மாமாவோ சிறியதொரு வீட்டில் வழ்வதால்.. அங்கு அவன் தங்கமுடியாது.

தமிழ் நண்பர்கள்; மூவரோடு இணைந்து ஒரு மாடிவீட்டு அறையில் வாழ்ந்து வருகின்றான். அவர்களுக்கும் விசாக் கிடைக்கவில்லை. எல்லோரும் கழுவல்வேலை செய்பவர்கள்தான்.

சமைத்துச் சாப்பிட அறையில் வசதியில்லாதபடியால் கடைச் சாப்பாடுதான். தமிழர் ஒருவரின் உணவகம் அருகில் இருப்பதால் அங்குதான் தனது இரவுச் சாப்பாட்டைச் சுதந்திரன் உண்ணுவான். சரியாக விடியுமுன் எழுந்து பேப்பர்போடச் செல்பவன் பசியைப்போக்க எதையாவது வாங்கிச் சாப்பிடுவான்.

மதியநேர உணவை கழுவல்வேலை செய்யும் வர்த்தக நிலையத்தில் மலிந்த விலையில் உள்ள சாப்பாடுகளை வாங்கியுண்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளுவான்.

ஓவ்வொரு நிமிடமும் உழைப்பதற்கே என்று தீர்மானமெடுத்த இவன்.. ஓடியோடி உழைப்பதைக்கண்ட நண்பர்கள் அவனைக் கிண்டல்பண்ணிப் பலவாறு கதைக்கும்போது..

எனக்கு வயதுவந்த தங்கைகள் இருவர் இருக்கின்றார்கள். அப்பா வருத்தக்காரர் ஆகிவிட்டார். அவரால் வேலைக்குப்போக முடியாது. என்ரை உயிரான அம்மா பாவம். அவ அப்பம்சுட்டு வித்துத்தான் அன்றாடச் சீவியத்தைக் கவனிக்கின்றா. நான் நிறைய உழைக்கவேணும். என்னை எதிர்பார்த்தே அவர்களின் எதிர்காலம் இருக்கின்றது.

என்று சொல்லி நண்பர்களின் வாயை அடைத்தவனை நோக்கி அவர்கள்..

இன்றைக்கு இரவு எங்களுக்கு எக்ஸ்ரா வேலையிருக்கு. கடையொன்று வேறையிடத்துக்கு மாற்றப்படுகின்றது. சாமான்களைத் தூக்கிப் பறிக்கவேணும்.

நீயும் வாறியா! நல்ல காசு கிடைக்கும்.

நான் வரவில்லை.

என்று சுதந்திரன் சொல்லவும்.

நாங்கள் விடிய அப்படியே எங்கடை வேலைத் தலங்களுக்குப் போறம்.

என்றவர்கள் போனபின் அவன் வெள்ளணவே படுத்துவிட்டான். நள்ளிரவு அவனின் ரெலிபோண் அடித்தது. எடுத்தவனிடம்..

அண்ணை! உடனேவா. அப்பா செத்துப்போனார்.

என்று இரண்டு தங்கச்சிமாரும் சொல்லிக் குழறியழுதார்கள். திடுக்கிட்டவன்.. அவர்களோடு சேர்ந்து தானும் அழுதான்.

● அலெக்ஸ்பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

# ஒரு நிமிட சபலம்...



ஊர்மத்தியின் தெருக்களில்
அலைந்து திரிகிறான் ஒரு யாசகன்
எதுவித முகவரிகளுமற்று.

கந்தல் உடையும் கசங்கிய கேசமும்
அழுக்குகள் படிந்த மேனியுமாய்
அலையும் அவன் பாதங்கள்...
தெருக்கள் எங்கும் திசைதெரியா நடையாக...


ஊர்பார்த்து ஒதுக்குகிறது அவனை.
பேர்கேட்டுச் சிரிக்கிறது சமூகம்.
அவன்முன் தொடுக்கப்படும்
அத்தனை வினாக்களுக்கும்
பதிலாகிப் போகிறது அவனது மௌனம்.

"சரியான லூசுபோல..."

எள்ளல் நகைப்பொலிகளுக்கு நடுவில்
யாசகத்தகுதியோடு இணைகிறது லூசு நிலை.

சூரியனின் பார்வைபெற்று ஜனனிக்க
அவனொன்றும் கர்ணன் அல்ல.
அவனை ஈன்றவளும் குந்திதேவியுமல்ல.
நாளைய உலகுபற்றி எதுவித நம்பிக்கையுமற்று
வேளைக்கு விரும்பும் ஒருகவள உணவிற்கு
வாழ்க்கையாகிப்போன
அவனது பின்புலம்...?

யாரோ இருவரது
ஒருநிமிட சபலத்தின் நிமித்தம்...
உறிஞ்சிய விந்தை யோனி துப்பியபோது
தத்தெடுத்துக் கொண்டது அவனை
தெருவில் கிடந்த ஒரு குப்பைத்தொட்டி.



## ● காரையன் கதன்

விழுந்து நிலம் தோண்டும் மழைநீருடன்
சேர்ந்த காற்று
தூவானமாய்
ஒரு பாடலை பாடிவிட்டு போகிறது.
யாருக்கான பாடல் என்று தெரியாமல்
அதை எழுதிவிட
முனைகிறேன்.
இடையிடையே நுளம்புகளின்
தொந்தரவால்
திசைமாறும் பாடல்
இறுதியில் எனக்கானதாக மாறிவிடுகிறது.
நேற்றைய மழையிலும்
இன்றைய மழையிலும்
நனைந்து காயும்
கூரை சொல்கிறது
நிலம் மட்டும்தானே மழையை
கொண்டாடிக் கழிக்கிறது.

## ● லலித்தா

நகர்கின்ற
ஒவ்வொரு கணமும் வானம்
ஏதோவொன்றினால் நிரம்பலுறுகிறது.
முகில்களால்;
மழையினால்;
பறவைகளினால்;
மேலும்
விமானங்களினால்.
நிரம்பலுறாத வானத்தின்
ஒரு துண்டை கண்டுபிடி.
நான் அங்கு
யாதொன்றும் அற்றிருப்பேன்
நீ நிரம்பிய நேசத்துடன்.
கணத்தில்
கரைந்து போவேன்
கடந்து செல்லும்
வால்வெள்ளியென.

● மாரி மகேந்திரன். இலங்கை.

# மரணத்தின் போது...

இந்த இரவில் கூட மினுக்குடன் அது நிகழ்ந்துவிட கூடும்..
மழையின் வெண்நிற வண்ணத்தில் துளிகள் குழந்தையின்
காலடியில் பட்டு தெளிக்கிறது...
அம்மாவின் பேச்சற்ற வெற்று அறைகளில்...
எனது வீட்டில் அப்பாவின் இறுதி மரண படுக்கையில் அவரின்
கட்டில் விளிம்பில் கீழை விழ சென்ற தருணத்தில்..
அப்பா விழுந்து விட போறீங்க என்று நான் சொன்ன போதும்
மரணத்தின் வலியிலுமா அவர்
சற்றும் தளராமல் சொன்னார்...
“தம்பி... நான் விழ மாட்டேன்...”
என்ற ஈன குரலில் ஏதோவொரு ஆழ்ந்த நம்பிக்கை மட்டுமே...
ஆனால் அப்பாவின் இறுதி வார்த்தை கூட
அது மட்டுமே மீதமாக
கிளங்கன் வைத்தியசாலை கட்டிலில் உயிர் அடுத்த கனமே
பிரிந்தது..
அப்பாவின் இறுதி வார்த்தை மட்டும் இன்னும் காதில்
அத்தனை உறுதியாக ஒலித்தப்படி உள்ளது..
நித்திய ஜீவனுள் பிரவேசிக்கும் தங்க நிற வர்ணங்கள் அங்கே
அவர் சரீரத்தில் பரவி அந்த தங்க ஒளி அப்படியே என்னை
ஒரு முறை பார்த்து விட்டு மறைந்த பிறகு ஏனோ அப்பாவின்
சரீர பிரிவுக்கு பிறகு அழாமல் இருக்கவும் முடியாது போனது...
தங்கநிற ஒளியில் அப்பாவின் மெல்லிய புன்னகை அங்கே
நித்திய வீட்டில் ஒரு பரிசுத்தவானின் மரணத்தின் தடத்தை
பூமியில் விட்டு சென்ற நினைவுகள்.....
எனது விசுவாச ஓட்டத்தில் அப்பாவின் நம்பிக்கை வருகிறது
கூடவே அவரது மெல்லிய சன்னமான குரல்...
இப்போதும் எனக்குள் கேட்கிறது..
அப்பாவின் மரண குறிப்புகள்.

● உடுமலை கி.ராம்கணேஷ்

# அகராதி அறியாத பெயர்

*கோபுரத்தின் உச்சியில்*
*காற்றடித்தால் ஓடி ஒட்டிக்கொள்கிறாய்*

*இலக்கியம் என்றால் தெரியுமா உனக்கு?*
*படைப்பாளிகளின் படைப்புகளுக்குச் சொந்தம் கொண்டாடுகிறாயே !*
*படைக்கத் தெரியாத உனக்கு பட்டப்படிப்பும் ஏறவில்லை*
*பட்டறிவும் பெறவில்லை*
*அறிவின் சுவடும் உன்மீது படவில்லை*
*வாழத் தெரியாத ஒன்றின்*
*எச்சிலாய் வந்து விழுந்து கிடக்கிறாய்*
*நெருப்பாய் நினைத்துக் கொண்டிருக்கிறாய்*
*உன் நெருப்பு என்னை என்ன செய்து விடும்*
*எரித்தால் மீண்டுவரும் பீனிக்ஸ் பறவையல்ல நான்*
*நீறாய்ப்போய் நீர்த்து விடமாட்டேன்*
*நீராய் மாறி அணைத்து விடுவேன்*
*"பூத்தாலும் காயாத மரம் நீ*
*பாத்தி விதைத்தாலும் நாறாத வித்து நீ "*
*முதிர்ச்சியை வயதில் மட்டும் கொண்டிருக்கிறாய்*
*யாருடைய படைப்பையோ நீ பிரசவித்ததாய்*
*மார் தட்டிக் கொள்கிறாய்*

*முற்றிப்போன முள்மரமாய் இருக்கக்கூட தகுதி இல்லாத நீ*
*அருவருப்பாய் இருக்கக் கூட அருகதை இல்லை உனக்கு*

*எனக்குள்ளும் இருக்கின்றது கருவாகி ஆயிரம் கெட்ட வார்த்தைகள்*
*உருவாகிப் பிரசவிக்கக் கூடாது என்பதற்காக மென்று மென்று செரிக்கின்றேன்*

*இருட்டில் வெளிச்சம் தரும் விளக்கல்ல*
*குப்பையைக் கூட்டி எறியும் விளக்குமாறும் அல்ல*
*உவமை கூட உன்னைப் பற்றி எழுத*
*சிரித்து என்னைச் சீண்டுகிறது அகராதி கூட அறியாத பெயர் உன் பெயர்*
*இனி எப்போதும்.........என்று இருக்கட்டுமே...*

● மு.ஆறுமுகவிக்னேஷ்

# நிகழ்பாடல்

நான் ஒவ்வொரு நிகழ்வையும்
ஒரு கவிதை என நினைப்பவன்
இன்றும் கூட எங்கோ
மறந்து வைத்து விட்ட
அலமாரி சாவியைத் தேடுங்கால்
என் நினைவில்
ஒரு கவிதைத் தொகுப்புத்தான்
வந்து நின்றது
'கைமறதியாய்
வைத்த நாள்' -
யுவன் சந்திரசேகர்
கோயில் மணியோசையைக்
கேட்க நேர்ந்த போது
'காட்டில் எங்கோ
மணியோசை
யானையோ
என அச்சம் கொள்கிறது
நாட்டு மனம்' என்று
சொல்லிக் கொண்டு
காலப்ரியா மனத்திரையில்
தோன்றுகிறார்
கூண்டுக் கிளியை
கூண்டைத் திறந்து
சிந்துஜா பறக்க விட்ட போது
'சிறகுகள் விரித்து
வெளிவரும் பறவை
கூண்டிற்கு விடுதலை' என்று
ஆனந்த யாழை மீட்டிக் கொண்டு
நா.முத்துக்குமார்
என்னையும் பறக்க அழைக்கிறார்
எத்துப் பல் தெரிய எழிலி
சிநேக புன்னகை பூத்த போது
'பிறவிக் குரூபத்திற்கும்
கவர்ச்சி உண்டு' என
லா.ச.ரா
காதுகளில் ஓதுகிறார்
மூங்கில் துளைகளைப்
பார்த்த போது
'உடற்துளைகள் என்பன
பிரபஞ்சத்துடன்
உடல் கொள்ளும்
தொடர்புக்கான வாயில்கள்'
என்று மாண்ட்டோ
ஒன்பது துளையிட்ட
எண்சாண் கோயிலை
ஞாபகப் படுத்தினார்
உணவில் உப்பு
அதிகம் இருந்தால் கூட
இப்போதெல்லாம் அவளுடன்
சண்டையிடுவதில்லை
'கூடல் சமையலில்
கூடுதல் சுவை தரும்
ஊடல் உப்பை
உருவாக்கும்
நிலம் மருதம் ' என்ற
அப்துல்ரகுமானின்
கவிதையை மட்டுமே
அவளிடம் சண்டமாருதமாய்
வீசிச் செல்கிறேன்
அவளுங் கூட என்னுடைய
சிறு தவறுகளை எல்லாம்
பொருட்படுத்தாது
'எழுதுங்கால் கோல்காணக்
கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட
விடத்து' என்ற
வள்ளுவனுக்கு ஏற்ற
வாசுகியாய் வாழப்
பழகிக் கொண்டாள்.

● ஸ்ரீவி. முத்துவேல்

# திருப்பாவை பாடல் -07 (ஹைபுன் வடிவில்)

*கீசுகீசு என்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து*

*பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!*

*காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து*

*வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்*

*ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?*

*நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி*

*கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?*

*தேசம் உடையாய்! திறவேலோர் எம்பாவாய்.*

*பொருள்: அறிவில்லாதவளே! ஆனைச்சாத்தன் என்றழைக்கப்படும் வலியன்குருவிகள் கீச்சிடும் குரலும், அவை தங்கள் துணையுடன் பேசும் ஒலியும் உனக்கு கேட்கவில்லையா? வாசனை மிக்க கூந்தலை உடைய ஆய்க்குலப் பெண்கள் மத்து கொண்டு தயிர் கடையும் ஓசையும், அப்போது அவர்களது கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் இணைந்து ஒலியெழுப்புவது இன்னுமா கேட்கவில்லை? எல்லோருக்கும் தலைமையேற்று அழைத்துச் செல்வதாகச் சொன்ன பெண்ணே! நாங்கள் நாராயணான கேசவனைப் புகழ்ந்து பாடுவது உன் காதில் கேட்டும் உறங்கும் மர்மமென்ன? பிரகாசமான முகத்தைக் கொண்டவளே! உன் வீட்டுக்கதவைத் திற.*


*ஆனைச்சாத்தான் அல்லது கரிச்சான் குருவி அல்லது ரெட்டைவால் குருவி எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் குருவி தான் அதிகாலை **3.30** முதல் **4** மணிக்கே எழுந்து விடுமாம். இந்தக் குருவிக் பிறகே மயில் அகவும் அதற்கு பிறகு மற்ற குருவிகளின் சத்தம் கேட்கும்.*

*கடிகாரம் இல்லாத ஸ்ரீ ஆண்டாள் என்ற ஸ்ரீ நாச்சியார் வாழ்ந்த காலகட்டத்தில் கடும் பனிக்காலமான மார்கழி மாதத்தில் பாவை நேன்பு இருந்த கன்னிப் பெண்கள் கரிச்சான் குருவிச் சத்தம் கேட்டுத் தான் எழுவார்களாம். இக்காட்சியையே ஹைக்கூவாக எழுதி இருக்கிறேன்.*

*மார்கழி மாதம்*

*நீராட எழும் கன்னிப்பெண்கள் ரெட்டைவால்குருவி சத்தத்தில்...*

● கோ.லீலா.




# Food Inc ஆவணப்பட விமர்சனம்

*2008 ல் வெளிவந்த ஃபுட் இங்க்., என்ற அமெரிக்க ஆவணப்படத்தை ராபர்ட் கென்னர் எழுதியும், இயக்கியும் உள்ளார், மைக்கேல் போலன் மற்றும் எரிக் ஸ்க்லோசர் ஆகியோரால் விவரிக்கப்பட்டிருக்கிறது.*

*பன்னாட்டு நிறுவனங்கள், அமெரிக்க விவசாயிகள் மற்றும் உணவுகளின், அதை நுகர்வோர் மீது நடத்துகிற ஆதிக்கத்தை, வன்முறையை...*

*உணவு தொழிற்சாலைகளின் இன்னொரு பயங்கர பக்கம்...*

*மிக மோசமான விற்பனை சட்டதிட்டங்களை...*

*கட்டாயப்படுத்தப்பட்ட புதிய தாராளமயமாக்கலின் மோசமான பக்கத்தை...*

*உணவு சங்கிலியில் விதை முதல் விற்பனை வரை பன்னாட்டு நிறுவனம் நடத்தும் ஆதிக்கம்...*

மக்கள் மய்ய முன்னேற்றம் குறித்து உள்ளூர் விவசாயின் விவசாய முறையை...

என பல்வேறு கூறுகளை இந்த ஆவணப்படம் காட்சிப்படுத்தி இருக்கிறது.

முதலில், ஒரு சூப்பர் மார்க்கெட்டை காட்டுகிறார்கள், அதில் சுமார் 47000 வகையான உணவு பதார்த்தங்கள்,.வண்ண வண்ண காய்கறிகள் வைக்கப்பட்டுள்ளன. அதை கண்டவுடன் உணவு பன்மயம் இருப்பது போன்ற ஒரு மாயை தோன்றுகிறது. ஆனால் உணவின் பேக்கிங்கை பார்த்தால், 47000 உணவுகளின் மீது நான்கே நான்கு நிறுவனத்தின் பெயர்தான் திரும்ப, திரும்ப இருக்கிறது. உணவின் பன்மயத்தன்மை அடிபட்டு போய்விடுகிறது என்பதை ஆதாரத்தோடு காட்டுகின்றனர்.

அடுத்து, சைவ, அசைவ உணவென இரண்டாக பிரித்து, விரிவாக அலசி இருக்கிறார்கள்.

சைவ உணவு என்று எடுத்துக்கொண்டால், Seed to Super Market என்ற கொள்கை அடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்கள் இயங்குகின்றன. இங்கு மரபுசார் விதைகளுக்கு இடமில்லை. விதையிலிருந்து, விதைத்து அறுவடை செய்து, விற்பனைக்கு வைப்பது வரை பன்னாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கும்.

இதில் முக்கியமாக, சோளம், கோதுமை, சோயாபீன்ஸ், உருளைக்கிழங்கு ஆகிய நான்கு உணவு பொருட்கள் மீதுதான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இதில் சோளத்திலிருந்து மட்டும் சுமார் 150 வகையான, உறையிடப்பட்ட உணவு பதார்த்தங்களை தயார் செய்கிறார்கள். பர்க்கர், டொமோட்டோ சாஸ், ஜெல்லி, பீநட் க்ரீம் என அனைத்தின் மூலமாகவும் சோளம், நுகர்வோரின் வாயில் மறைமுகமாக திணிக்கப்படுகிறது.

சோள கழிவுகளை மாடு, பன்றி, கோழி, மீன் என அனைத்திற்கும் உணவாக்குகிறார்கள்.

சோள உணவினால் ஏற்படும் இரண்டு பிரச்சினை உடல் பருமனுடன், இரண்டாம் நிலை நீரிழவு நோய் மற்றும் Ecoli 157 :h7 என்ற நோயும்தான்.

சோள கழிவுகளை உண்ணும் மாடுகளின் கழிக்கும் உறுப்புகளில் Ecoli 157 :h7 உருவாகிறது.

இந்த மாடுகள் அப்படியே வெட்டுகூடத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, கழிவுப்பைகளில் கழிவோடு வெட்டப்பட்டு, பதப்படுத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்படுகின்றன.

இம்மாட்டுக்கறியை கொண்டு தயாரிக்கப்படும் பர்க்கரை உண்டு இரண்டரை வயது கெவின் வயிற்றுப்போக்கினால் பன்னிரெண்டாவது நாளில் மரித்துப்போகிறான்.

அவனது தாய் மிகுந்த போராட்டத்திற்குப்பின் அந்த நிறுவனத்திடம் மன்னிப்பு கேட்பதான் இறுதியில் மிச்சமாகிறது, எனினும் கெவின் சட்டமென ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அதன் மூலம் உணவு தொழிற்சாலையின் ஓரிரு கூடங்கள் மூடப்படுகின்றன.

இந்த உருக்கமான காட்சி, காண்போரின் இதயத்தை உலுக்குகிறது.

கோழி மாற்று வடிவமைப்போ, அதைவிட மிக மோசம், அனைத்து விவசாயிகளும் இந்நிறுவனத்தின் மூலமே கோழிகளை (வளர்க்க???!!!) மாற்று வடிவமைப்பு செய்ய வேண்டும். முற்றிலும் சூரிய ஒளி உட்புகாத அறையில் அடைக்கப்பட்டிருக்கின்றன மாற்று வடிவமைப்பு செய்யப்பட்ட கோழிகள், மார்பு பகுதி விரிவு செய்யப்பட்டு, தன் எடையை தாங்க முடியாத அளவிற்கு எடை பெருக்கப்பட்ட கோழிகள், இரண்டு அடிகள் நடக்கமுடியாது தொப்பென விழுந்து விடுகின்றன.

அதை தொடர்ந்து உலகின் பெரிய வெட்டு கூடமான

ஸ்மித் ஸ்லாட்டர் ஹவுஸ், வடகரோலினாவில் உள்ள சிறு கிராமத்தில் உள்ளது, இங்கு ஒருமணி நேரத்தில் 37000 பன்றிகளை கொல்கிறார்கள்.

ஒரு குடும்பம், காய்கறிகள் வாங்கும் விலையைவிட, பர்க்கர் விலை குறைவாக இருக்கிறது என்கிறது, கூடவே நேரமின்மையாலும் இவ்வகை உணவுகளை வாங்குவதாக கூறுகிறது.

இந்த பன்னாட்டு நிறுவனத்தின் அடிப்படை மந்திரம் Faster, Fatter and Cheaper என்பதுதான்.

பணியாளர்களுக்கு, எவ்வித வசதிகளும் செய்துதரப்படாது,மிக குறைந்த ஊதியத்திற்கு பணிக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்.

மாண்சான்டோ நிறுவனம் விதைகளுக்கு காப்புரிமை பெற்று வைத்துள்ளது, இதன் மூலம், ஒரு முறை வாங்கிய விதை விளைந்த பின்னர் கிடைக்கும் சோய்பீன்ஸ்களை, விதை பீன்களாக மாற்றி பயன்படுத்துவோர் மீது தண்டனையும், அபாரதமும் விதிக்கப்படுகிறது.

மோர் பார் என்ற விவசாயி, காப்புரிமை பெறப்பட்ட விதை என்றறியாது, மீண்டும் பயன்படுத்தி,நீதிமன்றத்திற்கு அலைவதும், பணம் செலவு செய்ய முடியாது இறுதியில் மன்னிப்பு கேட்டு சரணடைவதென உண்மையின் வெக்கை படம் நெடுக, காண்போரை கலங்க செய்கிறது.

10000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த உணவு வழக்கங்களை விட, கடந்த 50 ஆண்டில் உணவு முறை முற்றிலுமாக மாறி சீர்கெட்டு இருக்கிறது என்ற கசப்பான உண்மையை ஆவணப்படத்தின் தொடக்கத்திலேயே கூறுகிறார் ராபர்ட் கென்னர்.

Salt, Sugar, Fat ஆகிய மூன்றே சுவைகளை கொண்டு உலகத்தின் சுவையரும்புகளை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது இப்பன்னாட்டு நிறுவனங்கள்.

உப்பு, இனிப்பு, கொழுப்பு ஆகிய மூன்று சுவையும், இயற்கையாக கிடைக்கும் உணவில் மிதமாகவே இருக்கும், என்பதை உணர்ந்து இம்மூன்று சுவைகளை கொண்டு உலகை ஆட்டிப்படைக்கின்றன இந்நிறுவனங்கள்.

படம் முழுதும் அறிவியலாளர்கள், சூழலியாளலர்கள், கடனிலேயே வைக்கப்பட்டிருக்கும் விவசாயிகள், மக்கள் மய்ய வளர்ச்சியில் நம்பிக்கை கொண்டுள்ள மரபுசார் விவசாயிகள், பாதிக்கப்பட்ட நுகர்வோர் என பலர் தம் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

அமெரிக்க அரசுடனும், ஆதிக்க சக்திகளுடனும் நெருங்கிய உறவில் இந்நிறுவனங்கள் இருப்பதாக சொல்லும் ராபர்ட் கென்னர் FDA - Food and drug administration ம் சரிவர செயல்படவில்லை என்கிறார்.

இப்படத்திற்கு, ஒத்துழைப்பு நல்க விவசாயிகள் பயந்ததற்கு பின், பன்னாட்டு நிறுவனத்தின் அச்சுறுத்தல் இருக்கிறது என்கிறார் ராபர்ட் கென்னர்.

ஸ்லாட்டர் ஹவுஸ் போன்ற இடங்களில் ஹிடன் கேமாரவை பயன்படுத்தி உள்ளார்.

#கார்ப்பரேட்_வேளாண்மை மூலம் விவசாயிகளை அடிமைப்படுத்தி வைத்துள்ளது இந்நிறுவனங்கள்.

இதை குறித்து, அமெரிக்க அசெம்பிளியில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு, மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுகள் (Genetically modified food), ingredients, fat percentage, என பல்வேறு செய்திகளை வெளிப்படைத் தன்மையுடன் உணவின் உறையில் குறிப்பிட சொல்கிறது. ஆனால் இவ்வகை சட்டங்களை பன்னாட்டு நிறுவங்கள் எதிர்கின்றன.

தட்டிற்கு வரும் உணவு எங்கிருந்து வருகிறது, அதில் என்னென்ன இருக்கிறது போன்ற செய்திகளை நுகர்வோர் அறியக்கூடாது என்பதே இப்பன்னாட்டு நிறுவனங்களின் குறிக்கோளாக இருக்கிறது.

உறையிடப்பட்ட உணவுகளை பயன்படுத்தவில்லை, வீட்டிலேயே சமைக்கிறார்கள் என்றாலும், கறி, காய், தானியங்கள் எங்கிருந்து வருகின்றன என்ற வெளிப்படைத்தன்மையை இந்நிறுவனங்கள் மறைக்கின்றன.

சில தீர்வுகளையும் இப்படம் சொல்கிறது...

உள்ளூர் பொருட்களை வாங்குங்கள்.

அந்தந்த காலத்தில் (Seasonal) கிடைக்கும் காய்,கனிகளை உண்ணுங்கள்.

எல்லா காலத்திலும் ஒரு கனியோ, காயோ கிடைக்கிறது என்றால் அதை விஷம் என ஒதுக்குங்கள்.

உறையிடப்பட்ட உணவினை வாங்கினால், உறையின் மீது எழுதப்பட்டிருப்பதை படித்து பார்த்து வாங்குங்கள்.

என சொல்கிறது இந்த ஆவணப்படம்.

அது சரி அமெரிக்க உணவு அரசியலை பற்றி நாம் ஏன் அறிந்துக்கொள்ள வேண்டும்? என்ற கேள்வி எழுந்தால் சமையலறையை ஒரு முறை பார்வையிடுங்கள், எத்தனை பொருட்கள் வெளிநாட்டு தயாரிப்புகள், எத்தனை உறையிடப்பட்ட, செயற்கை வண்ணம் கொண்டவை என... இப்போது மெள்ள புரிய ஆரம்பிக்கும், நம் ஊர் வரை நீண்டுவிட்ட நூடுல்ஸின் சிக்கல்.

சுவையரும்புகளை கைது செய்து, கட்டுக்குள் கொண்டு வந்து, மண்ணை ஆள நினைக்கும் பன்னாட்டு நிறுவனங்கள் குறித்த துணிச்சலான, அதிரடியான அமெரிக்க ஆவணப்படம். எண்ணற்ற விருதுகளையும், கவனைத்தையும் குவித்துள்ளது

*National Board of Review Award for Top Five Documentaries 2009*

*Gotham Independent Film Award for Best Documentary Feature*

*Washington D.C. Area Film Critics Association Award for Best Documentary*

*Shorty Social Good Award for Best Overall Facebook Presence*

*Southeastern Film Critics Association Award for Best Documentary*

அனைவரும் பார்க்க வேண்டிய திரைப்படம்.

❊

*Film : Food Inc.,*

*Director : Emmy award winner*

*Robert Kenner.*

*Production companies :Participant,*

*Magnolia Pictures.*

*Producers: Robert Kenner, Elise Pearlstein.*

*Category : Documentary*

● **நரேன் கௌரிசங்கர்**

## பட்டாம்பூச்சி

*சிறகு விரிக்க முனைவதற்குள்
விரலிடுக்குகளின்
கோரப் பிடியில் அகப்பட்டுப்
போகிறது வண்ணத்துப் பூச்சி!...
திரணிகள் செயலற்ற
அக்கணத்திலும் சிறகிற்கான
வலிமையை உற்பத்தித்து
மேலெழும்பத் துடிக்கிறது...
மலத்துளை சுருக்கி
கொம்புகள் குவித்த - அதன்
கெஞ்சுதல்கள்
பால்யங்களின் செவிகளில்
சேருவதில்லை!...
அவசரமாய் கால்களைப் பிய்த்து
வக்கிரச் சிறுவனின்
தூர எறிதலில்...
வண்ணத்துப் பூச்சியின்
பிழைத்தல் உருவாகினும்...
பாதங்கள் முடமான பிறகு
வண்ணத்துப் பூச்சிக்குஎந்த
மரக்கிளைதான்
உட்கார வைத்து
ஓய்வு கொடுத்து விட முடியும்?.*


# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்